
கல்கி

KALKI 8.9.91

பொன்விழா ஆண்டு



வீடுகளுக்கு வண்ணங்கள்;
தேடுகின்ற உள்ளங்கள்

நினைவிருக்கட்டும், வைட்டமின் மற்றும் மினரல் பற்றாக்குறையால் உங்கள் குழந்தை அவதிப்படாமலிருக்க, ஊட்டச்சத்துமிக்க சமநிலை உணவு தேவை.

"ஆகவேதான் என் குழந்தைக்கு செரிலாக் தருகிறேன்."

உங்களுக்குத் தெரியுமா, சமச்சீராக உள்ள வைட்டமின்களும், மினரல்களும் ஊட்டச்சத்துகளை உறிஞ்ச உதவுகின்றன என்பது? போஷாக்குப் பற்றாக்குறையினால் குழந்தை அவதிப்படாமலிருக்க இது வகை செய்கிறது.

உங்கள் டாக்டரைக் கேளுங்கள். இந்த வைட்டமின்களையும் மினரல்களையும், போஷாக்குச் சத்துகள் சமச்சீராக உள்ள உணவின் மூலம் பெறுவதுதான் சிறந்த வழி என்பார். அந்த உணவில், புரோட்டீன்கள், கார்போஹைட்ரேட்கள், கொழுப்பு, இரும்பு மற்றும் கால்ஷியம் சத்துகளும் சரியான விகிதத்தில் இருக்கவேண்டும். ஒவ்வொரு வேளை உணவிலும். ஒவ்வொரு நாளும்!

வழக்கமான உணவுகள் மூலம் இந்த எல்லா சத்துக்களையும் தருவது பெரும்பாலான தாய்மார்களுக்கு எளிதல்ல.

இதற்குத் தீர்வு?

செரிலாக். குழந்தைகளுக்கு நான்கு மாதம் முதல் வெறும் பால் உணவு மட்டும் போதாது. ஆகவே அப்போது முதல் தரக்கூடியது, ஊட்டச்சத்துக்களைச் சமச்சீராகக் கொண்ட திட உணவான செரிலாக்.

செரிலாக் ஏ, டி, சி, பி காம்ப்ளெக்ஸ் மற்றும் ஈ வைட்டமின்களால் செறியூட்டப்பட்டிருக்கிறது. மேலும், இதில் புரோட்டீன், கார்போஹைட்ரேட்கள், கொழுப்பு, இரும்பு மற்றும் கால்ஷியம் சத்துக்களும் உள்ளன-அனைத்தும் சரியான விகிதத்தில், குழந்தைகள் மிகவும் விரும்பும் சுவையுடன்!

ஆகவே போஷாக்குச் சத்துகளைச் சமச்சீராகக் கொண்ட செரிலாக் அனுகூலத்தை உங்கள் குழந்தைக்கு அளிக்கத் துவங்குங்கள். குழந்தைக்கு 6 மாதம் ஆனதும் வீட்-ஆப்பிள், வீட்-ஆரஞ்சு, மற்றும் வீட்-வெஜிடபிள் ஆகியவற்றின் கூடுதல் அனுகூலங்களை அளியுங்கள்.


பேக்கின் மீதுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுக.

இலவசம்: செரிலாக் பேபி கேர் புத்தகம்

எழுதுங்கள்: செரிலாக், போஸ்ட் பேக் நம்பர் -55, புது தில்லி-110055

நெஸ்லேயின் ஒரு தரமான தயாரிப்பு





உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக்.

Mudra:D:NES:0019:TAM

செல்வாக்கான ஜாதியாரிடம் செருப்பு அணியாமல்தான் வோட்டுக் கேட்டேன்!



"என் மேஜையில் எந்தக் கோப்பும் நீண்ட நேரம் தங்கியிருக்காது; வந்தவுடன் பார்த்து உடனே அனுப்பி விடுவேன். இன்னும் சொல்லப் போனால் சம்பந்தப் பட்ட இலாக்காக்களிடம் கோப்புகளைக் கேட்டு வாங்கியும் பைசல் பண்ணுகிறேன்'' என்கிறார் ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் ஆனந்தன்.

அமைச்சருக்கு வயது 42. ஆனாலும் முப்பது வயதுத் தோற்றம். நெற்றியில் திருநீற்றுக் கீற்று. கழுத்திலும், கை மணிக் கட்டிலும் பல வண்ணங்களிலுள்ள மந்தி ரிக்கப்பட்ட கயிறுகள். அரசியலில் நுழைவ தற்கு முன்னர் கிராம நிர்வாக அதிகாரி யாகவும், நில அளவையாளராகவும் பணி யாற்றியவர்.

''1989 தேர்தலில், அதுவரை தி. மு. க. வின் கோட்டையாக இருந்த உளுந்தூர்ப் பேட்டைத் தொகுதியில் 28,000 வாக்குகள் வித்தியாசத்தில், தி.மு.க. வேட்பாளரைத் தோற்கடித்தேன்'' என்று கூறும் ஆனந்தன், ''நான் அரசியலுக்கு வரக் காரணமாக இருந்தது இன்னமும் நிலவிவரும் ஜாதிக் கொடுமைகள்தான்'' என்கிறார்.

''1974-ம் ஆண்டு, எங்கள் பகுதியில் ஜாதிக்கலவரம் நடந்தது. செல்வாக்குள்ள ஜாதியினர், எங்கள் ஆதி திராவிடத் தோழர் களைப் படுபயங்கரமாகத் தாக்கினார்கள். அதில் ஏராளமான அப்பாவிகளும் மாட்டிக் கொண்டார்கள். கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்த என் தம்பியின் மண்டை அந்தத் தாக்குதலில் பிளந்தது. அப்போதிருந்த தி. மு. க. அரசு, செல் வாக்குள்ள ஜாதியின் பக்கம் சேர்ந்து கொண்டது. அன்றிலிருந்தே எனக்குத் தி. மு. க. வின் மீது கடுமையான வெறுப்பு'' என்று நினைவு கூர்கிறார் அமைச்சர்.

படிக்கும் காலத்தில், தமது சொந்தக் கிராமமான நத்தாமூர் கிராமத்தில் இருந்து பன்னிரண்டு கி. மீ. தூரம் நடந்து சென்று

படித்ததாலோ என்னவோ, இன்றைய மாணவ, மாணவியரின் வசதிக்காகக் கிராமத்திற்கு அருகிலேயே உயர்நிலைப் பள்ளி, மேல்நிலை பள்ளி ஆகிய இரண்டையுமே கொண்டு வந்திருக்கிறார், ஆனந்தன்.

எம். ஜி. ஆர். தலைமையில்தான் அமைச்சருக்குக் கல்யாணம் நடந்தது. இவரைப் போலவே இவரது மனைவி சித்ராவும் பி. எஸ்ஸி. பட்டதாரி. ஒரே பையன். பெயர் : ராமச்சந்திரன். அம்மா (ஜெ.) வைத்தது!

''ஆதி திராவிடத் தலைவர்கள் எல்லாம் பல்வேறு கட்சிகளில் இருந்து கொண்டு செயல்படுகிறார்களே! எல்லோரும் ஒரே அமைப்பின் கீழ் இருந்து கொண்டு குரல் கொடுத்தால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்னமும் சலுகைகள் பெற்றுத் தரலாமே?''

''நீங்கள் சொல்வதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆதி திராவிடர் நலன் என்று வரும் போது, குறுகிய அரசியல் மாச்சரியங்களைக் கைவிட்டு விட்டு, ஒன்றுபட்டு இணைய வேண்டும் என்பதே எனது ஆசையும்.''

''தமிழகத்தில் ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்கான ஹாஸ்டல்கள் மிகவும் மோசமாக இருக்கின்றனவே!''

''இதற்காக முதல்வர் ஒரு திட்டம் வைத்திருக்கிறார். நான் பொறுப்பேற்ற பிறகு, பல ஹாஸ்டல்களுக்குச் சென்று பிரச்னைகளைத் தீர்த்து வைத்திருக்கிறேன். ஹாஸ்டல்களை நிர்வகிக்கத் தனியார் யாராவது (Sponsorship) முன்வந்தால் அவர்களுக்குக் கொடுக்கலாம் என்றும் ஒரு திட்டம் இருக்கிறது. இது பற்றி விரைவில் முதல்வர் முடிவு செய்வார்'' என்ற அமைச்சர், ''செல்வாக்குள்ள ஜாதியினர் கையில் தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப் படாமல் இருக்க வேண்டுமானால், செல்வாக்குள்ள ஜாதியினருக்குத்தான் முதலில் கல்வி வசதி செய்து தர வேண்டும். அப்போதுதான் அவர்கள், மனித நேயம், பண்பாடு ஆகியவற்றைத் தெரிந்து கொள்வார்கள்; கொடுமைகள் புரிய மாட்டார்கள்'' என்கிறார்.

''இன்னமும் எங்கள் பக்கத்துக் கிராமங்களில், எங்கள் இன மக்கள் செருப்புப் போட்டால் செல்வாக்கு உள்ள ஜாதியினரின் கோபத்துக்கு ஆளாகிறார்கள். ஏன், நான் கூட தேர்தல் பிரசாரத்தின் போது சில பகுதிகளில் செருப்புப் போடாமல் தான் பிரசாரம் செய்தேன். காரணம், செல்வாக்குள்ள ஜாதியினர் கோபப்பட்டால் அவர்கள் வோட்டு எனக்குக் கிடைக்காமல் போய் விடுமே!'' என்கிறார் அமைச்சர் ஆனந்தன்.

சந்திப்பு : தில்லப்பா.

"நான் இருபத்தெட்டு வருடங்களாக அரசு அதிகாரியாகப் பணியாற்றி உள்ளேன். இதுவரை என் மீது எந்தப் புகாரும் இல்லை. முதல் முறையாக என் மீது கிரிமினல் வழக்குப் போடப்பட்டுள்ளது'' - என்று நீதிமன்றத்தில் கூறினார் முன்னாள் உள்துறைச் செயலாளர் நாகராஜன்.

நாகராஜனது வாக்குமூலத்தின்படி அவர் அரசு அதிகாரியாக இருந்த பொழுது புகார் எதுவும் வந்ததில்லையா? தென்றலும் புயலும் மாறி மாறி அவரது அலுவலக வாழ்க்கையில் வீசவில்லையா?

சர்ச்சைக்குரிய மனிதராகி விட்ட நாகராஜன் பிறந்த ஊர் திருச்சி மாவட்டத்திலுள்ள பொருவாய் என்னும் கிராமம். இசை வேளாளர் குடும்பத்தில் பிறந்த இவர், தாய் தந்தைக்கு ஒரே பிள்ளை. பள்ளி, கல்லூரிப் படிப்பைத் திருச்சி மாவட்டத்திற்குள்ளேயே முடித்துக் கொண்டவர். செயின்ட் ஜோசப் கல்லூரியில் படித்த போது தங்க மெடல் வாங்கியவர். மருங்காபுரி ஜமீன் குடும்பத்துப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டவர். சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதி ஆர். டி. ஓ. வாகப் பணியில் நுழைந்தவர்.

1970 வரை எந்தப் பிரச்னையும் இல்லாமல்தான் இவரது அலுவலக வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. கருணாநிதி முதல்வராக வந்த போது இவரைக் கண்டெடுத்துத் தமது தனிப்பட்ட உதவியாளராகச் சேர்த்துக் கொண்டார். விரைவில் மாநில அரசின் சிபாரிசின் பேரில் ஐ. ஏ. எஸ். அதிகாரியாகப் பதவி உயர்வும் பெற்றார். அதன் பிறகு, பிரச்னைகளும் தேடி வர ஆரம்பித்தன.

71-ம் ஆண்டுத் தேர்தலின் போது தேசியமயமாக்கப்பட்ட ஒரு வங்கியில் முதல்வரின் உதவியாளர்கள் அதிக மதிப்புள்ள நோட்டுக்களைக் கொடுத்து 'சில்லறை' மாற்றியதாக ஒரு குற்றச்சாட்டு. இந்த விவகாரம் சர்க்காரியாவாலும் அலசப் பட்டது!

தி. மு. க. விலிருந்து விலக்கப்பட்ட எம். ஜி. ஆர். தனிக் கட்சி ஆரம்பித்த போது இவர் மீது ஒரு கண் வைத்திருந்தார். 77-ல் அவர் பதவிக்கு வந்த போது, சிறிதும் முக்கியத்துவம் இல்லாத அண்ணா மேலாண்மை நிறுவனத்துக்கு இவரை மாற்றி விட்டார். இருந்தாலும் நாகராஜன் மீது அவருக்கு இருந்த ஆத்திரம் சிறிதும் தணியவில்லை என்பதற்கு 81-ல் நடந்த ஒரு சம்பவம் நல்ல உதாரணம். அப்பொழுது நாகராஜனுக்கு அரசிடம் இருந்து திடீரென்று ஒரு நோட்டீஸ் வந்தது. ''நீங்கள்



படம் : ஆ. ராமமூர்த்தி

நாகராஜன் —ஒரு ஃப்ளாஷ் பேக்

'மின்சாரம்', என்ற பெயரில் 'விடுதலை' பத்திரிகையில் அரசை எதிர்த்துக் கட்டுரைகள் எழுதுகிறீர்கள். ஆகவே உங்களை ஏன் சஸ்பெண்ட் செய்யக் கூடாது?''

''இல்லை'' என்று மறுத்தார் நாகராஜன். 'ஆதாரம் என்னிடம் இருக்கிறது' என்று அவரை சஸ்பெண்ட் செய்தார் எம். ஜி. ஆர். இதை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்று 85-ல் வெற்றிக் கொடி நாட்டினார் நாகராஜன். கடுமையான வெறுப்போடு எம்.ஜி.ஆர். அவரை மீண்டும் முக்கியத்துவம் இல்லாத வேறு பல இலாக்காக்களுக்குப் பந்தாடினார்.

பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு கலைஞருக்கு அரசியல் திருப்பம் ஏற்பட்ட போது, கூடவே நாகராஜனுக்கும் ஒரு திருப்பம் ஏற்பட்டது. தி. மு. க. மெஜாரிட்டி பெறப் போகிறது என்ற செய்தி வந்து கொண்டிருக்கும்போதே அரசு அதிகாரியான நாகராஜன், அறிவாலயத்தில் கலைஞரோடு ஆலோசித்துக் கொண்டிருந்தார். கலைஞர் அரசில் உள்துறைச் செயலாளர் ஆனதும் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு கோப்புகளைப் பார்த்துச் சாராய சாம்ராஜ்யத்தை ஒழித்தார். இதனால் தனியார் கஜானாவுக்குப் போய்க் கொண்டிருந்த கோடிக்கணக்கான ரூபாய் அரசாங்கத்திற்குத் திருப்பி விடப்பட்டது. இதனால் நாகராஜன் மீது பாதிக்கப்பட்ட பெரும் புள்ளிகள் கடுங்கோபம் கொண்டனர்.

இவற்றோடு நடராஜன் கோபத்தையும் சம்பாதித்துக் கொண்டார் நாகராஜன். அவர் வீட்டில் ஜெயலலிதாவின் ராஜினாமாக் கடிதம் போலீசாரால் கண்டெடுக்கப்பட்டு, அது சபாநாயகர் கைக்குப் போய்ப் பத்திரிகைகளுக்கும் சென்று, ஒரு கசமுசா நடந்ததே, ஞாபகம் இருக்கிறதா? அந்தச் சம்பவத்துக்கு முழு பொறுப்பு நாகராஜன்தான் என்பது நடராஜனின் குற்றச்சாட்டு.

தாம் போலீஸ் கமிஷனர் ஆபீஸில் சரணடையும் பொழுது கூட ஒரு சலசலப்பை உண்டாக்கி விட்டார் நாகராஜன். புகைப்படக்காரர்களைக் கண்டவுடன் அவர் 'ஹாய்' என்று கையை ஆட்ட இவர்களும் படம் எடுத்து விட்டார்கள். போலீஸ் கமிஷனர் விடுவாரா? ''என் அலுவலகத்தில் நீங்கள் எப்படிப் படம் எடுக்கலாம்?'' என்று ரோல்களைப் பிடுங்கி எக்ஸ்போஸ் செய்து விட்டார்.

சரணடையும் சமயம் நிருபர்களிடம் பேசிய போது, 'God is Great' என்றார், கலைஞருக்கு நெருக்கமான நாகராஜன்!

\- கௌசல்யா.

யெல்ட்சின் - கார்பசோவ்



"கார்பசோவை இன்னும் 24 மணி நேரத்துக்குள் எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்!" என்று அறைகூவல் விடுத்ததோடு, இரண்டு இரவுகள் உறக்கமின்றிக் கண் விழித்து சதித் திட்டத்தை எதிர்த்து மக்களை விழிப்புணர்வோடு எழுந்து நிற்கச் செய்ததைப் பார்க்கையில், 'எப்படிப்பட்ட மனிதர் இந்த யெல்ட்சின்?' என்று கேட்கத் தோன்றும். சுருக்கமாக -

மனத்துக்குப் பட்டதைப் பட்டென்று சொல்லி விடுபவர் யெல்ட்சின். அவருக்கு கார்பசோவின் சீர்திருத்த வேகம் போதவில்லை.

"சமூக, பொருளாதார மாற்றங்களை இன்னும் விரைவாகச் செய்ய கார்பசோவுக்கு இதுதான் கடைசி வாய்ப்பு. இதை அவர் நழுவவிட்டால், அவரிடமிருந்து நாங்கள் கழன்றுகொள்ள வேண்டியதுதான்!" என்று யெல்ட்சின் சென்ற ஆண்டு பிப்ரவரியில் முழங்கினார்.

காலை ஏழு மணிக்கு அலுவலகத்துக்கு வந்தால் இரவு ஒரு மணி- இரண்டு மணிக்குக் குறையாமல் வேலை. ஞாயிற்றுக் கிழமைகளில் கூட, மாஸ்கோ வீதிகளில் காரில் பறப்பதும், சொற்பொழிவுகள் தயாரிப்பதும், கடிதங்களுக்குப் பதில் எழுதுவதுமாக யெல்ட்சினுக்குப் பொழுது போய் விடும்.

பெரிஸ்தொரைக்காவும், கிளாஸ்நாஸ்த்தும் கொண்டு வந்த கார்பசோவை, 'இந்த மனிதர் ஏன் இன்னும் வேகமாக நகர மறுக்கிறார்?' கட்சியின் உளுத்துப் போன அமைப்பை ஏன் இவர் இன்னும் இப்படிக் கட்டிக் காக்கிறார்?' என்று இவர் பேசி வந்தவை எல்லாம் கார்பசோவின் காதுக்கு எட்டத்தான் செய்தன.

"இந்த அமைப்பில் பெண்டாட்டிகூடச் சொந்தமில்லை. இல்லை என்றால் காலினின் மனைவியையும், மாலடோவின் மனைவியையும் ஸ்டாலின் சிறைக்கு அனுப்பியபோது, அவர்கள் ஒரு சிறு எதிர்ப்போ, முணுமுணுப்போ கூடச் செய்யாதது ஏன்?" என்று கேட்டார் யெல்ட்சின்.

'கார்பசோவுக்கு இந்த அமைப்பை அங்கீகரிப்பதால் என்ன லாபம்? பாவம், அவருக்கென்ன தெரியும்? அவருடைய கூட்டங்களுக்கு, தனி பஸ்களில், தேர்ந்தெடுத்து அழைத்து வரப்படும் மக்கள் முன்னால் மட்டுமே அவர் பேச நேரும் போது, சாதாரணப் பொதுமக்களின் உணர்வுகள் அவருக்கு எப்படிப் புரியும்? ஆனால் எத்தனை நாளைக்கு இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன்!' என்று வெடித்தார், யெல்ட்சின்.

வெடுக்கென்று மனம் திறந்து பேசுகிற ஒரு நபர் கார்பசோவுக்குத் தேவை என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

88-ல், 19 ஆவது கட்சி மாநாட்டில், எவ்வளவோ தடுக்கப் பார்த்தும், யெல்ட்சின் பேசினார்: மூன்று வருட பெரிஸ்தொரைகாவினால் மக்களுக்காக என்ன சாதித்தோம்? எந்தப் பிரச்னையைத் தீர்த்து வைத்தோம்? என்று வினவினார். டீவியில் இதைப் பார்த்த மக்கள், பாராட்டுக் கடிதங்களும், தந்திகளுமாக அனுப்பி இவரைத் திணறடித்தார்கள். கார்பசோவ் இதையெல்லாம் தடுக்க முடியவில்லை; அமைதியாகக் கவனித்துக் கொண்டிருந்தார் என்றால் அதற்கு அவர் அறிமுகப்படுத்திய பெரிஸ்தொரைகாதான் காரணம்.

யெல்ட்சினுக்கு மனைவி, இரண்டு மகள்கள், பேரன் போரிஸ், இரண்டு பேத்திகள் இருக்கிறார்கள். யூரல்ஸ் நகரில் கல்வி பயிலும்போது மனைவி நைனாவைச் சந்தித்தார். பட்டப்படிப்பை இருவரும் முடித்த பின் கல்யாணம் செய்து கொண்டார்கள். ஓர் அடுக்கு மாடிக் கட்டட ஃபிளாட்டில் இரண்டாவது பெண்ணுடன் வசிக்கிறார் யெல்ட்சின். மூத்த மகளும் அவள் கணவரும் தனியே இன்னொரு ஃபிளாட்டில் வசிக்கிறார்கள். எப்போது பார்த்தாலும் கட்சியிலும், ஆட்சியிலும் யாருடனாவது மோதிக்கொண்டே இருப்பதால் குடும்பம் மொத்தமும் இவர் மீது கவலையோடு கூடிய அக்கறை செலுத்தி



வருகிறது. ''என் குடும்பப் பாசம்தான் பிரச்னைகளைச் சமாளிக்கும் திறனையும் எனக்குக் கொடுத்திருக்கிறது!'' என்கிறார் யெல்ட்சின்.

ஸ்டாவ்ரோபோல் பகுதியில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் கார்பசோவ். பெற்றோர், தாத்தா-பாட்டி எல்லாருமே விவசாயிகள்.

பதின்மூன்று வயதில் பண்ணை நிலங்களில் வேலை. பதினைந்து வயதாகும் போது, டிராக்டர் டிரைவரின் உதவியாள். படித்துக் கொண்டே சுமார் ஐந்து வருடங்கள்

எதிர்ப்பிலே கனிந்த நட்பு!

வயலிலும் வேலை செய்தவர் கார்பசோவ். 1950-ல் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் சேர்ந்து சட்டப் படிப்பை முடித்தார்.

''1952-ல் தான் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தேன். பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும் போதுதான் ரெய்சாவைச் சந்தித்தேன். அவள் பெற்றோர் ரயில்வேயில் பணியாற்றி வந்தார்கள். பள்ளிப் படிப்பை, தங்கப் பதக்கம் பெற்று முடித்துக் கொண்டவள், மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் தத்துவப் பிரிவில் சேர்ந்தாள். சந்தித்தது 1951-ல். திருமணம் 1953-ல். அதற்குப் பிறகு இன்று வரை இணைபிரியாமல் இருக்கிறோம்!'' என்று குறிப்பிடுகிறார் கார்பசோவ், 'ஸ்புட்னிக்' இதழுக்கு அளித்த பேட்டியில்.

''எங்கள் மகள் இரீனாவும் அவள் கணவரும் மருத்துவ நிபுணர்கள். இரண்டு பேத்திகளுடன் எங்கள் குடும்பம் வளர்ந்தது. என் வேலைப் பளுவை ரெய்சா மட்டுமல்ல, குடும்பம் மொத்தமுமே அக்கறையுடன் பகிர்ந்து கொள்ளுகிறது.

''எல்லா பொலிட்ப்பீரோ நிர்வாக உறுப்பினர்களைப் போலவே என் மாதச் சம்பளமும் 1200 ரூபிள்கள்தாம். என் ராயல்டி தொகைகள் எல்லாம் கட்சிக்குத்தான்.


'''பெரிஸ்தொரைகா அல்லது நமது நாட்டுக்கும் உலகுக்கும் ஆன புதிய சிந்தனைகள்' என்ற எனது புத்தகத்துக்கு உண்டான ராயல்டி தொகையை, கட்சிக்கும் பொதுநலப் பணிகளுக்கும் கொடுத்து விட்டேன். அமெரிக்கப் புத்தக வெளியீட்டாளர்களுக்காக எழுதிய இந்தப் புத்தகம், சுமார் நூறு நாடுகளில் வெளியிடப்பட்டு, இருபது லட்சம் பிரதிகள் விற்பனையானது. ஆர்மீனிய பூகம்பத்தால் அவதிப்பட்டவர்களுக்கும், சோவியத் கலாசார அமைப்புக்கும் கூட இந்த ராயல்டி பயன்பட்டது.

''நாங்கள் அடுக்கு மாடிக் குடியிருப்பு ஒன்றில்தான் வசிக்கிறோம். எங்களுக்குக் கொடுக்கப்பட்ட தனி வீட்டை பொலிட்பீரோ அமைப்புக் கூட்டங்கள் நடத்தவும், அரசுத் தலைமைப் பீடக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யவும் பயன்படுத்துகிறேன்.

''எனக்குப் பல விஷயங்களில் ஈடுபாடு உண்டு - இலக்கியம், தியேட்டர், இசை, திரைப்படங்கள் என்று. எனக்கு மிகவும் பிடித்தது, இரு புறமும் மரங்கள் சூழ்ந்த வனாந்தரப் பாதையில் நடப்பதுதான். ஆனால் வாழ்க்கை இதற்கான சந்தர்ப்பங்களை இப்போது மிகக் குறைவாகவே தருகிறது!''

எதிர்ப்பில் கனிந்த நட்பு என்றுதான் யெல்ட்சின்-கார்பசோவ் இணையைச் சொல்ல வேண்டும். சமீபத்திய புரட்சிக்குப் பின் இருவருமாக அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளுவது என்றும், அப்போது தான் ஒருவர் ஏதாலும் சிக்கலில் மாட்டிக் கொண்டாலும், இன்னொருவர் அதிகாரத்துடன் செயல்பட முடியும் என்றும் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால், ஓய்வெடுக்கப் போன கார்பசோவை, சதியாளர்கள் வீட்டுக் காவலில் வைத்ததும், மூர்க்கமாகப் போராடி யெல்ட்சின் அவரைப் பத்திரமாக விடுவித்து வெளியே கொண்டு வந்ததைப் பார்த்தவர்கள், கார்பசோவை விட யெல்ட்சினுக்குத்தான் திடசித்தம் அதிகம் என்று நினைக்கிறார்கள்.

– எஸ். வி. என்.



◆ மேல்நாட்டுப் பூங்காவையே நம் வீட்டுக்குள் கொண்டு வரும் வால்பேப்பர்... படம் : உத்ரா

வீடுகளுக்கு வண்ணங்கள்; தேடுகின்ற உள்ளங்கள்

தோழிகளான சந்தியாவும், கோகிலாவும் மாம்பலத்தில் ஆளுக்கொரு ஃபிளாட் வாங்கினார்கள். இருவருடைய ஃபிளாட்களும் முதல் மாடியில் எதிரெதிரே. இரண்டுமே அறுநூற்றைம்பது சதுர அடிதான். ஒரே மாதிரி பிளான்.

ஆனாலும் சந்தியாவுடைய ஃபிளாட்டுக்குள் நுழைந்தால் விசாலமான ஹால், பெரிதாய் பெட்ரூம், தாராளமான சமையலறை இருப்பது போலத் தோன்றும். அதே சமயம், கோகிலாவின் ஃபிளாட்டில் நுழையும் போது, அத்தனை பெரிது போன்ற எண்ணம் ஏற்படுவதில்லை.

காரணம் என்ன?

சூட்சுமம், அவர்கள் இருவரும் தத்தம் ஃபிளாட்டுகளின் உட்புறச் சுவர்களுக்குப் பூசியுள்ள வண்ணத்தில்தான் இருக்கிறது.

ஹால், பெட்ரூம் என்று எல்லாவற்றுக்குமே சந்தியா, வெளிர் வண்ணங்களையே அடித்திருக்கிறார். அது விசாலமான தோற்றத்தை ஏற்படுத்துகிறது. ''சுவர்களில் மட்டுமின்றி மேற்கூரையிலும் வெளிர் நிறம் பூசினால், உயரத்தையும் கூட்டிக் காட்டும்'' என்கிறார் ஏசியன் பெயிண்ட்ஸ் கம்பெனியின் விற்பனை சூபர்வைசர் ஃபாஸ்டன் லியோ கொரியா.

மாறி வரும் நாகரிகத்தில், வீடுகளுக்கு வண்ணச் சுண்ணாம்பு அடிக்கும் பழைய முறை இப்போது விடைபெற்றுக்

◆ ஸ்ரீதரன்



கொண்டிருக்கிறது. சுவர்களுக்குப் பூசுவதற்கென்றே சிமெண்ட் பெயிண்ட், எமல்ஷன் பெயிண்ட், டிஸ்டெம்பர் என்று ஏராளமான விஷயங்கள் வந்து விட்டன.

இவற்றில் ஒரு குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த, ஒரு குறிப்பிட்ட நிறத்தை மட்டுமே தேர்ந்தெடுத்து, அதை மொத்தமாக வாங்கி வீடு முழுக்க அடித்து விடக் கூடாது. ஒவ்வொரு சுவர்ப் பரப்புக்கும் ஒவ்வொரு வகை பெயிண்ட் அடிக்க வேண்டும்.

உதாரணமாக, வெண்மை நிறத்தைப் பூசினால், அது தூய்மையான உணர்வை அளிப்பதோடு, அறை பிரம்மாண்டமான தோற்றத்தை அளிக்கும். பச்சை நிறம் பசுமையின் குளுமையை ஏற்படுத்தும். நீலத்தோடு வெண்மை கலந்தால், காலை இளங்காற்றின் புத்துணர்ச்சியை உருவாக்கும். மஞ்சள் மகிழ்ச்சி ததும்பச் செய்யும் என்றாலும், இது ஏராளமான சுவர்ப் பரப்பில் அடிக்கப்பட்டால் உஷ்ணத்தை அதிகப்படுத்தி விடும். இளம் சிவப்பு என்றால் வெளிச்சச் சூழ் நிலையை உருவாக்கும்.

இப்படி ஒவ்வொரு வண்ணத்துக்குமுள்ள குணாதிசயங்களை அறிந்து கொண்டு, நாம் எதை விரும்புகிறோமோ, அதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

''பெயிண்ட்டுகளில் பலவகை உண்டு. எமல்ஷன் என்ற வகை பெயிண்ட்டுகள் நீர் அடிப்படையிலானவை. நீடித்து உழைக்கும்; சுவர்களுக்கு வழுவழுப்பான தன்மையைக் கொடுக்கும். டிஸ்டெம்பர் வகையும், நீர் அடிப்படையிலான பெயிண்ட்டுதான் என்றாலும், இதன் ஃபினிஷிங் எமல்ஷன் வகையை விடச் சிறப்பாக இருக்கும். இவற்றை விடச் சிறப்பான - முட்டையின் ஓடு போன்று வழுவழுப்பும், பளபளப்பும் தரும் பெயிண்ட்டு வகைகளும் உண்டு'' என்கிறார் ஏசியன் பெயிண்ட்ஸின் கிளை மேலாளர் ஸ்ரீதரன்.



● ஒரு பெயிண்ட் நிறுவனத்தின் கிடங்கு

இவற்றில் எதை நாம் அடிக்க நினைத்தாலும் அதைக் கவனமுடன் திட்டமிட்டுச் செய்ய வேண்டும். அது குறித்து விளக்குகிறார் ஸ்ரீதரன் :

''பெயிண்ட் அடிப்பதற்கு முன்பாகச் செய்ய வேண்டிய சில காரியங்கள் உண்டு. சுவர்களில் உள்ள விரிசல்களுக்குச் சாந்து பூசுதல் (பிளாஸ்டரிங்) மற்ற சிறு சிறு குறைபாடுகளைச் சரிசெய்வது, நீர்க் கசிவைத் தடுத்தல் போன்ற காரியங்களைச் செய்து முடித்து விட்டுத்தான் பெயிண்ட் அடிக்கிற பணியை ஆரம்பிக்க வேண்டும்.

''இவற்றுக்குச் செலவு செய்யத் தயங்காதீர்கள். காரணம், இதில் சிக்கனம் பார்த்தால், பெயிண்ட் பூச்சின் உழைப்புக் காலம் குறைந்து, சீக்கிரமே மறுபடியும் பெயிண்ட் அடிக்கும்படி நேரலாம்!'' என்கிறார் ஸ்ரீதரன்.

இவற்றையெல்லாம் செய்தாகி விட்டதா, இனி அடுத்த கட்டத்திற்கு வாருங்கள்.

பெயிண்ட் அடிப்பதற்கான மொத்த சுவர்ப் பரப்பைக் கணக்கிட வேண்டும். தரைப் பரப்பு நீங்கலாகச் சுவர்ப் பரப்பு, சீலிங் பரப்பு இவற்றைக் கணக்கெடுத்துக் கொண்டு, அதிலிருந்து ஜன்னல்கள், கதவுகள், அலமாரிகளின் பரப்புகளைக் கழித்து விட வேண்டும்.

ஒவ்வொரு பெயிண்ட்டிற்கும், கவரிங் திறன் உண்டு. அதாவது, ஒரு லிட்டர் பெயிண்ட் கொண்டு எத்தனை சதுர அடிக்குப் பூச முடியும் என்பதே கவரிங் திறன். பூச வேண்டிய பரப்பு, கவரிங் திறன் இவற்றைக் கொண்டு, எவ்வளவு லிட்டர் பெயிண்ட் தேவை என்று கணக்கிட முடியும். இதையெல்லாம் செய்யாமல் குத்துமதிப்பாகப் பெயிண்ட் வாங்கினால்

அடுத்த இதழில்...

எம். எஸ். - 75

- சிறப்புக் கட்டுரை



மீதி அனாவசியத்துக்கு வீணாகப் போய் விடும்.

மூன்றாவதாக எப்படிப்பட்ட வகைகளைத் தேர்ந்தெடுப்பது? ''புதிதாய்க் கட்டப்படும் வீடுகள் மற்றும் ஃபிளாட்டுகளின் உட்புறச் சுவர்களுக்கு, டிஸ்டெம்பர் வகை பெயிண்ட்களை அடிப்பதை விட, சிமெண்ட் பெயிண்ட்களைப் பயன்படுத்துவதே புத்திசாலித்தனம். காரணம், புதுச் சுவர் முழுமையாகக் காய்ந்திருக்காது. லேசான ஈரம் இருக்கும். சுமார் ஓராண்டுக்கு சிமெண்ட் பெயிண்ட் பயன்படுத்திய பின்னர், டிஸ்டெம்பர் வகைகளை நாட லாம். முதலிலேயே டிஸ்டெம்பர் பெயிண்ட் அடித்தால், சுவரிலுள்ள ஈரம் காரணமாகச் சுவரின் பரப்புக்கும், சுவரின் மேலுள்ள டிஸ்டெம்பர் பூச்சுக்குமிடையே நீர்த் துளிகள் சேர்ந்து, சுவரின் அழகையே பாதிக்கும்'' என்கிறார் அடுக்கு மாடி கட்டடங்கள் கட்டும் நிறுவனமான 'ராம்ஸ்' நிறுவனத்தைச் சேர்ந்த ரமா.

உங்கள் வீட்டிற்கு பெயிண்ட் அடிக்க வேண்டுமா? இதோ சில டிப்ஸ் :

● பெயிண்ட் விற்பனையாளர்களிடம் எண்ணற்ற ஷேட் (shade)களில் பெயிண்ட்கள் கிடைக்கின்றன. எனவே, நீங்களாகவே இரு வண்ணங்களைச் சேர்த்து, புது வண்ணங்களை உருவாக்காதீர்கள். அப்படிச் சேர்த்தால் வீடு முழுக்க பெயிண்ட் அடிக்கும் போது, ஒரே சீரான வண்ணம் வருமென எதிர்பார்க்க முடியாது.

● அங்கீகரிக்கப்பட்ட பெயிண்ட் விற்பனையாளர்களிடமிருந்தே தேவையான பெயிண்ட்களை வாங்குங்கள். அப்போது தான் தரத்துக்கு உத்திரவாதம் இருக்கும்.

● தேவைக்குத் தகுந்தாற் போல, பெரிய சைஸ் பேக்கிங்குகளில் வாங்கினால் செலவு குறையும். ஐந்து, ஒரு லிட்டர் டின்களை விட ஓர் ஐந்து லிட்டர் டின் விலை குறைவு.

● பெயிண்ட்டை உபயோகிக்கும் முன்பு நன்றாகக் கிளறி விட்டுக் கலக்க வேண்டும். பெரும்பாலான டின்களில், மேல் பகுதியில் தெளிந்த திரவமும், கீழ்ப் பகுதியில் கெட்டியான பெயிண்ட்டும் இருக்கும். கலக்குவதன் மூலம்தான் ஒரே சீரான பூச்சுக் கிடைக்கும்.

● சுவரை நன்கு சுத்தப்படுத்தின பின்னரே பெயிண்ட் அடிக்க வேண்டும்.

● ஒரே தடவையில் அடிக்கும் ஒரு தடிப்பான (அடர்த்தியான) பூச்சை விட, இரு சன்னமான பூச்சுகள் சிறந்தவை.

● பெயிண்ட் அடிக்கும் போது, பிரஷ்ஷின் கோடுகள் சுவரின் மீது விழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பெயிண்ட்களோடு, இன்று வால் பேப்பர் (Wall paper) களையும் மக்கள் விரும்பி வாங்குகிறார்கள். வசதியான மத்தியதரக் குடும்பங்களும், மேல் தட்டு மக்களும், வீடுகளில் வால் பேப்பர் களைப் பயன்படுத்துகிறார்கள். வர்த்தக நிறுவனங்களிலும் கூட வால் பேப்பர்களுக்கு நல்ல வரவேற்பு.

''வால் பேப்பரில் மூன்று வகை உண்டு'' என்கிறார், பதினைந்து ஆண்டுகளாக இந்தத் துறையில் இருக்கும் குமார். ''பி.வி.சி., துணி மற்றும் காகிதத்தினாலான வால் பேப்பர்கள் விற்பனை செய்யப் படுகின்றன. ஒரே மாதிரியான டிசைன்கள் அச்சிடப்பட்ட இவை, பத்து மீட்டர் இருபது மீட்டர் ரோல்களாக வருகின்றன. தேவையான அளவுக்கு வாங்கிக் கொள்ள லாம். வால் பேப்பர்களின் விலை சதுர அடிக்கு மூன்று ரூபாய் முதல், பத்து ரூபாய் வரை வேறுபடுகிறது.''

இவை தவிர, இயற்கைக் காட்சிகளும், பல்வேறு வகைப் படங்களும் அச்சிடப் பட்ட வால் பேப்பர்களும் நிறைய மார்க் கெட்டில் இருக்கின்றன. நாலுக்கு மூன்றே

பத்திரிகை
ரொம்ப வித்தியாசமாயிருக்கு!



சுந்தர ராமசாமி பாலகுமாரன்
அசோகமித்திரன் பூமணி
திருப்பூர் கிருஷ்ணன் விட்டல்ராவ்
கந்தர்வன் கனிவண்ணன்

— இவர்கள் என்ன எழுதியிருக்கிறார்கள்?

செப்டம்பர்

சுபமங்களா

படியுங்கள்

கால் அடியிலிருந்து பன்னிரெண்டுக்கு ஒன்பது அடி வரை அளவுள்ள இயற்கைக் காட்சிகளும், படங்களும் அச்சிடப்பட்ட வால் பேப்பர்களை, மக்கள் ரசனைக்கேற்ப வாங்கி, வீடுகளில் ஹாலிலோ, படுக்கை அறையிலோ, படிக்கும் அறையிலோ ஒட்டி மகிழ்கிறார்கள். விலை 450 ரூபாயிலிருந்து 1500 வரை. மேலும் கதவுகளில் ஒட்டப் படுவதற்கென்றும் பிரத்யேகமான வால் பேப்பர்கள் இருக்கின்றன.

இயற்கைக் காட்சி கொண்ட வால் பேப்பர் ஒட்டிய சுவரின் முன்பு புகைப் படங்கள் எடுத்துக் கொண்டால், அந்தச் சூழ் நிலையிலேயே எடுத்தது போல் மிக தத்ரூபமாய் இருக்கும்.

வால் பேப்பர்களைச் சுவர்களில் ஒட்டுவது என்பது தனிக்கலை. எனவேதான் வால் பேப்பர் விற்பனையாளர்களே, இல வசமாய்ச் சுவரில் பொருத்தித் தரும் வேலையைச் செய்து தருகிறார்கள். சாதா ரண கோந்து கொண்டு ஒட்டக் கூடாது. ஃபெவிகால் போன்ற பசைகளுடன், இன்னொரு பிரத்தியேகமான பவுடரையும் கலந்து, சுருக்கமின்றி, இறுக்கமாய்ப் பிடித்துக் கொள்ளும்படி ஒட்டுகிறார்கள். ஈரத்தை நன்கு பிழிந்து விட்டு, ஈரத் துணி யால் துடைத்தால் கூட வால் பேப்பர்கள் தாங்கும்; பாழாகாது.

நல்ல முறையில் பராமரிக்கப்பட்டால், ஆறேழு ஆண்டுகள் வரை கூட நன்றாக இருக்கும். குழந்தைகள் இருக்கும் வீடா னால், அவை வால் பேப்பர்கள் மீது கிறுக் குவது, ஓரங்களைப் பிய்ப்பது, கிழிப்பது போன்ற காரியங்களைச் செய்யக்கூடும்.

இந்தியாவில் விற்கப்படும் வால் பேப்பர்கள் எல்லாமே இறக்குமதி செய்யப் பட்டவைதாம். ஸ்வீடன், இத்தாலி, தைவான், ஹாங்காங் போன்ற நாடுகளி லிருந்தே வருகின்றன!

கட்டுரை : எஸ். சந்திரமௌலி
அட்டை வண்ணப்படங்கள் : உத்ரா
படங்கள் : ரமணன்

அட்டையில் :
லேகா பத்மநாபன், டிஸ்னி ஜெயராஜ்

பொன்விழா ஆண்டு | **பொன் நகைப் பரிசுத் திட்டம்–4**

நவராத்திரிச் சிரிப்பு!



நவராத்திரி நெருங்குகிறது. படி அமைப்பது முதல், பாட்டுப் பாடுவது வரை; பொம்மை வாங்குவது முதல், சுண்டல் விநி யோகம் வரை பரபரப்பாக எத்தனையோ காரியங்கள். அவற்றினூடே உங்களைச் சிரிக்க வைத்த 'ஜட்டங்'களும் இருக்குமே. அத்தகைய சம்பவங்களை ''இன்லாண்டில்'' மட்டுமே எழுதுங்கள். சிறந்த நகைச்சுவை நிகழ்ச்சிக்கு பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள பொன் நகை பரிசு. பிரசுரமாகும் இதர துணுக்குகளுக்கு வழக்கமான சன்மானம்.

''நவராத்திரிச் சிரிப்பு'' என்று தலைப்புத் தந்து, ''ஆசிரியர் கல்கி, சென்னை - 32'' என்ற விலாசத்துக்கு மட்டுமே அனுப்ப முடிவு தேதி : 16.9.91



ஸ்ரீ சதாசிவம் - ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி தம்பதியின் பேரனும் ஸ்ரீமதி ராதா - ஸ்ரீ விசுவநாதன் தம்பதியின் புதல்வனுமான செல்வன் வி. ஸ்ரீனிவாசனுக்கும் செல்வி சீதாவுக்கும் சிதம்பரத்தில் அண்மையில் திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது. மணமகள், உதகையில் பிரபல வழக்கறிஞராகத் 'தொழில் நடத்தும் திரு. என். கோபால் அவர்களின் புதல்வி. சென்னையில் நடந்த வரவேற்பு வைபவத்தில் நகரப் பிரமுகர்களும், நண்பர்களும், உறவினர்களும் ஏராளமாகக் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யர், மாண்டலின் ஸ்ரீ யு. ஸ்ரீனிவாசன் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரிகள் விருந்தினரை மகிழ்வித்தன. கிளாக்ஸோ இண்டியா நிறுவனத்தின் பம்பாய்த் தலைமைக் காரியாலயத்தில் அதிகாரியாகப் பணியாற்றும் ஸ்ரீனிவாசனுக்கும் அவரது கரம் பற்றியுள்ள சீதாவுக்கும் பல்லாண்டு கூறுகிறோம்.

வாழ்க மணமக்கள்

வென்றது எப்படி? தோற்றது ஏன்?



✱ ஏ. செல்வராசன்

ஏ. செல்வராசன் (தி. மு. க. சார்பில் துறைமுகம் தொகுதியில் வெற்றி பெற்றவர்) :

துறைமுகம் தொகுதியில் பிறந்து வளர்ந்தவன் நான். ஏற்கெனவே மூன்று முறை இதே தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவன். தொகுதிக்குச் சாலை வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி என்று செய்து கொடுத்தவன்.

இவை தவிர, சென்ற தேர்தலில் எங்கள் தலைவர் கலைஞர் ஜெயித்த தொகுதி. ஆகவே நாங்கள் வெற்றியைத் தக்கவைத்துக் கொண்டுள்ளோம். சென்ற தேர்தலில் வெற்றிக்கான வாக்கு வித்தியாசம் குறைவாக இருந்ததற்குக் காரணம், அனுதாப அலை தான்! ஜெயலலிதாவின் இரண்டு மாத ஆட்சியில், நடுத்தர மக்களும், அடித்தள மக்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். காய்கறி விலை உயர்வு, பாமாயில் கிடைக்காத நிலை, இவையெல்லாம் மக்களிடையே எரிச்சலை ஏற்படுத்தி உள்ளன. வாக்குப் பதிவு அதிக அளவில் இருந்திருந்தால், நான் இன்னமும் அதிக வித்தியாசத்தில் ஜெயித்து இருப்பேன்.

பரிதி இளம்வழுதி (தி.மு.க. - எழும்பூர் தொகுதியில் வென்றவர்):

நான் இதே தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவன். தொகுதியை நன்கு அறிந்தவன். மேலும் சட்டமன்ற உறுப்பினராக இல்லாத காலத்திலும் தொகுதிக்காகப் பாடுபட்டுக் கொண்டிருந்தவன். சமீபத்தில் சேத்துப்பட்டில் அதிகாரிகள் குடிசைப் பகுதியை அப்புறப் படுத்த வந்த போது அந்த மக்களுக்காகப் போராடி ஜெயிலுக்குச் சென்றவன்.

ஒரு மாபெரும் தோல்விக்குப் பிறகு நடந்த தேர்தல் என்றாலும், எங்கள் கட்சித் தொண்டர்கள் தேனீக்கள் போல் சுறுசுறுப்பாகப் பணியாற்றினார்கள். நான் மூன்று முறை வீடு வீடாகச் சென்று வாக்குக் கேட்டேன். எங்கள் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் எனக்காக மிகக் கடுமையாக உழைத்தார்கள். எங்கள் கட்சித் தலைமை அவ்வப்போது ஆலோசனை சொல்லிப் பிரசாரத்தை முறைப்படுத்தியது. இவையே என் வெற்றிக்குக் காரணங்கள்.



✱ பரிதி இளம்வழுதி

க. கப்பு (காங்கிரஸ் - துறைமுகம் தொகுதியில் வெற்றி வாய்ப்பை இழந்தவர்):

சென்ற தேர்தலில் அ. தி. மு. க. - காங்கிரஸ் தொண்டர்களிடையிலும், மக்களிடையிலும், தி. மு. க. வை அகற்ற வேண்டும் என்ற வெறி இருந்தது. இந்தத் தேர்தலில் அது இல்லை. சென்ற தேர்தலில் ராஜீவ் அனுதாப அலை வீசியது. இப்போது அது இல்லை.

மேலும், இரண்டு மாத அ. தி. மு. க. ஆட்சியில், மக்களுக்கு அதிருப்தி தரக்கூடிய பல விஷயங்கள் நடந்திருக்கின்றன. கள்ளச் சாராய விஷயத்தில் போலீஸ் அதிகாரிகள் பதவி நீக்கம் என்று கடுமையாக எச்சரிக்கப்பட்டிருப்பதால் போலீஸ்காரர்கள் மிகவும் எரிச்சலடைந்து போயிருக்கிறார்கள். போலீஸ் குவார்ட்டர்ஸிலிருந்து வோட்டுப் போட யாரும் வரவில்லை. கோட்டைப் பகுதியில் பாதுகாப்புக் கருதி குடிசைப் பகுதிகளை அகற்ற முடிவு செய்ததால், ஏழை மக்கள் ஆட்சியாளர்கள் மீது

◆ க. கப்பு



அதிருப்தி அடைந்திருந்திருக்கிறார்கள். காய்கறி விலை உயர்வு, ரேஷன் கடையில் பாமாயில் போடாதது எல்லாம் நடுத்தர மக்களை மிகவும் பாதித்திருக்கின்றன.

போதாததற்கு எங்கள் கட்சியில் கோஷ்டிப் பூசல்கள். கூட்டணிக் கட்சியினரான அ.தி.மு.க.வினர் முற்றிலுமாகக் களத்தில் இறங்கி, தேர்தல் வேலை செய்யவில்லை. எந்தக் கட்சியையும் சேராத நடுத்தர மக்கள் பொதுவாக அ.தி.மு.க. - இ. காங்கிரஸ் கூட்டணிக்குத்தான் வோட்டுப் போடுவார்கள். அவர்களில் பெரும்பாலோர் இம்முறை வோட்டுச் சாவடிக்கே வரவில்லை. இப்படி என் தோல்விக்குப் பல காரணங்கள்.

யசோதா (காங்கிரஸ் - எழும்பூர் தொகுதியில் வெற்றி வாய்ப்பை இழந்தவர்) :

யசோதா என்ற தனிப்பட்ட நபருக்குக் கிடைத்த தோல்வி அல்ல; காங்கிரஸுக்குக் கிடைத்த தோல்வி இது. இதன் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டியது தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைதான். என்னைப் பொறுத்தவரை வீடு வீடாகச் சென்று வோட்டுக் கேட்டேன். நான் எதிர்பார்த்த அளவுக்கு எனக்கு காங்கிரஸ் தொண்டர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. எங்கள் கட்சியின் கோஷ்டிப் பூசலைச் சாக்காக வைத்துக் கொண்டு, அ. இ. அ. தி. மு. க. வினரும் பணியாற்றவில்லை.


தமிழ்நாடு காங்கிரஸ் தலைமை எங்கள் தொகுதிக்குத் தண்டாயுதபாணியைப் பொறுப்பாளராக நியமித்தது.



◆ யசோதா

ஆனால் அவர் வாழப்பாடி அவர்களுடன் டூர் சென்று விட்டதால், தொகுதியில் சரியாகப் பணியாற்ற முடியவில்லை. ''இந்த இரண்டு தொகுதிகளிலும் காங்கிரஸ் தோல்வியடைந்தால்தான் மத்தியில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள் 'அ. இ. அ. தி. மு. க. வை, பகைத்துக் கொள்ளக் கூடாது' என்று முடிவெடுப்பார்கள் என்ற அடிப்படையில் திட்டமிட்டு, எங்களைத் தோல்வியடைய வைத்திருக்கிறார்கள். முன்பு ஒரு முறை அ. இ. அ. தி. மு. க. வுடன் கூட்டணி இருந்தபோது, எம். ஜி. ஆர். 'நம் கட்சி வேட்பாளர்கள் தோல்வியடைந்தாலும் பரவாயில்லை; நம்மை நம்பி வந்துள்ள காங்கிரஸ் வேட்பாளர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் தோற்கக் கூடாது'' என்று கூறினார். எம். ஜி. ஆரிடம் இருந்த பெருந்தன்மையை இப்போது எதிர்பார்ப்பது தவறுதான்!

தொகுப்பு : நிருபர்


போபர்ஸ் புலன் விசாரணையில் முன்னேற்றம்
சி.பி.ஐ.
உச்ச நீதிமன்றத் தீர்ப்பு
அரசியல் நிலைமைகள்
படம் ஒருவேளை நல்லா இருக்கின்னாலும் கூட பிரேம் சரியில்லியே!
பி.ஜே.பி.
சுவத்துல மாட்டுற- துக்கு இப்ப என்ன அவசரமாம்?
வி.எச்.பி.
வழிபாட்டுத்தல மசோதா
ஆணி அடிக்காமலேயே மாட்டியிருக்கப் படாதா?
சிவசேனா
லகான் எல்லாம் எங்கிட்டதான் இருக்கு... இப்படி தலைக்குத் தலை பிச்சுகிட்டு ஓடினா நான் இறங்கி வீட்டுக்குப் போயிடுவேன்!
கார்ப்பசேவ்
சுதந்திரப் பிரகடனம் செய்த சோவியத் பிரதேசங்கள்

விரோதமின்றி வழிபடுவோம்!

தேர்தல் வாக்குறுதி ஒன்றை அமுல்படுத்தும் விதமாக மத்திய காங்கிரஸ் அரசு நாடாளுமன்றத்தில் ஒரு மசோதா தாக்கல் செய்திருக்கிறது. இந்தியாவில் வழிபாட்டுக்குரிய ஆலயங்கள் 1947 ஆகஸ்ட் 15-ல் எந்த வழிபாட்டு நிலையில் இருந்தனவோ அதே நிலையில் தொடர்ந்து அவற்றைப் பாதுகாப்பது மசோதாவின் முக்கிய நோக்கம். அதாவது ஒரு கோயிலை மசூதியாக்குவது என்பதோ அல்லது ஒரு குருத்வாராவைக் கோயிலாக்குவது என்பதோ இனி முடியாது. அத்தகைய முயற்சி சட்ட விரோதமாகும்.

ராமஜன்ம பூமி தொடர்பாக நடந்த போராட்டங்களையும் அதன் பின்விளைவாக ஏற்பட்ட தேவையற்ற மதமாச்சரியங்களையும் கவனிக்கும் போது இது சட்டமாக நிறைவேற வேண்டிய அத்தியாவசியமான ஒரு மசோதாவே என்பதும் மக்களிடையே மத வேற்றுமைகளையும் பகைமையையும் தவிர்ப்பதே இதன் அடிப்படை நோக்கம் என்பதும் தெளிவாகும்.

ராமஜன்ம பூமி விவகாரத்துக்கு இந்தச் சட்டத்தில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பிரச்னை பூதாகாரமாக வளர்ந்து விட்டதாலும் நீதிமன்றம் வரை போய் விட்டதாலும் அதைச் சேர்ப்பது மேலும் பல தொடர் விபரீதங்களுக்கு வழி வகுக்கும் என்பதாலும் முன் யோசனையுடன் அதைத் தவிர்த்து மற்ற தலங்கள் அனைத்தையும் மசோதாவின் கீழ் கொணர்ந்திருக்கிறது அரசு. இந்தச் சட்டத்துக்கு அப்பாற்பட்டே ராமஜன்ம பூமி பிரச்னைக்கு ஒரு சுமுகமான தீர்வு ஏற்பட இறைவனைப் பிரார்த்திப்போம்.

தொழுகைக்குரிய ஓரிடம் சரித்திர ரீதியான ஓர் அசம்பாவிதத்தால் மாற்றம் கண்டிருக்கலாம். ஒரு தவறைச் சரிசெய்ய மீண்டும் அதே போன்ற ஒரு தவறைச் செய்வது முறையல்ல. முன்பு எப்போதோ கோயில் இருந்த இடத்தில் யாரோ ஓர் அரசன் அதர்மமாக நடந்து கொண்டான் என்பதால் இன்று நாமும் அதர்மத்தில் இறங்கி, மசூதியைப் பெயர்க்கும் அசம்பாவிதத்தில் ஈடுபடக் கூடாது. அப்புறம் அந்த மன்னனுக்கும் நமக்கும் வித்தியாசமில்லாமல் போய் விடும். 'தவறு நடந்து விட்டது; போனது போகட்டும்; இத்தனை காலமாகத் தொடர்ந்து மசூதியாக இருந்து வருவது இனியும் அப்படியே இருக்கட்டும். எங்கும் நிறைந்த எங்கள் இறைவனுக்கு நாங்கள் வேறு நல்ல இடத்தில் மகத்தான ஆலயம் எழுப்புகிறோம், பாருங்கள்' என்று கூறிச் செயல்படுவதே பெருந்தன்மை.

இந்தப் பெருந்தன்மையைக் காட்டாத விசுவ ஹிந்து பரிஷத் போன்ற அமைப்புகள் அயோத்தியை அடுத்து மதுராவிலும் வாரணாசியிலும் போராட்டங்கள் நிகழ்த்தத் தீர்மானித்துள்ளன. இந்தச் சட்டம் இதையெல்லாம் உத்தேசித்தே நிறைவேற்றப்படவிருக்கிறது.

எதிர்பார்த்தது போலவே இந்த மசோதாவுக்கு பி. ஜே. பி. கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அதிலும் மசோதாவின் உள்ளடக்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதை விட அதிகமாக மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ள விதத்துக்கு ஆட்சேபணைகளை எழுப்பியுள்ளது. இவை எடுபடவில்லை என்பதுடன் உள்துறை அமைச்சர் தக்க பதிலும் அளித்துள்ளார்.

சட்டம் நிறைவேறுவதால் மட்டும் பிரச்னைகள் தீர்ந்து போகும் என்று நம்புவதற்கில்லை. வி. எச். பி., பி. ஜே. பி., சிவசேனா போன்றவை சட்ட மறுப்பு இயக்கத்தைக் கூட மதுரா, வாரணாசி போன்ற இடங்களில் தொடங்கலாம். இந் நிலையில் மத்திய காங்கிரஸ் அரசு பலவீனப்பட்டுப் போயிருப்பதும், பி.ஜே.பி. மேன்மேலும் பலம் பெற்று வருவதும் கவலை அளிப்பதாகும். எனவே இந்தச் சூழலில் மதச் சார்பின்மையை முக்கிய குறிக்கோளாகக் கொண்ட காங்கிரஸும் ஜனதா தளமும் நெருங்கி வருதல் நல்லது. ஏன், ஹெக்டே கூறியது போல் இணையவும் செய்யலாம். காங்கிரஸில் இனி பாரம்பரியத் தலைமை இராது என்பதும் உட்கட்சித் தேர்தல்களுக்கு வழிவகுக்கப்பட்டு வருவதும் இணைப்புக்கு உதவுபடியான நல்ல அறிகுறிகள் என்று ஹெக்டே கூறியுள்ளதை இரு கட்சித் தலைவர்களும் ஏற்பது நாட்டுக்கு நன்மை.



கல்கி 50

1991
செப்டம்பர் 8
மலர் : 50
இதழ் : 6
பிரஜோத்பத்தி
ஆவணி 23



● கே. எஸ். வேங்கடரமணி

இதோ ஒரு குன்றிமணி

திரு. கே. எஸ். வேங்கடரமணியின் நூற்றாண்டு விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. அவரது சஷ்டியப்தபூர்த்தி சமயத்தில் அமரர் கல்கி எழுதிய கட்டுரை இது.

அழகான குன்றிமணி ஒன்று இருந்தது. அஜந்தா சித்திரக்காரர்கள் தீட்டிய வர்ணத்தைப் போல் அழியாத வர்ண வேறுபாடுகளுடன் ஜொலித்தது. அதைப் பார்த்தாலே பசி தீரும் என்று சொல்லும்படி இனிய தோற்றம் கொண்டிருந்தது.

அந்தக் குன்றிமணி அடக்கம் உடையது. செயற்கை வர்ணங்களைப் பூசிக் கொண்டு வெளிவந்த பற்பல நவநாகரிக மணிகளைக் கண்டு ஒதுங்கி நின்றது. அதன் எதிரே ஏதேதோ பொருள்கள் சேர்ந்தன. கடைசியில் அதை மறைத்துக் கொண்டு ஒரு பெரிய குப்பை மேடு எழுந்து விட்டது. குன்றிமணி இருந்த இடம் தெரியவில்லை. குன்றிமணி ஒன்று இருந்தது என்பதையே அனைவரும் மறந்து விட்டார்கள். அதைப் பற்றி அந்தக் குன்றிமணி வருத்தப்பட்டதோ என்றால், கிடையாது. 'நம் அதிர்ஷ்டம் அவ்வளவுதான்' என்று எண்ணி ஒதுங்கியே நின்றது. 'வேறு யாரும் நம்மைக் கவனியா விட்டால் போகட்டும், நம்மைப் படைத்த இறைவன் ஒருவன் இருக்கிறான் அல்லவா? அவனுடைய தண்ணருள் ஒன்றே போதும்!' என்று எண்ணி அக்குன்றிமணி இருந்து விட்டது.

அந்தக் குன்றிமணியை ஒத்தவர் அறிவாளியும் சிந்தனையாளரும் நூலாசிரியருமான ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி அவர்கள். சோழ நாட்டின் பழம்பெரும் தலைநகரான காவேரிப் பூம்பட்டினத்தில் பிறந்தவர். இளமையில் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் மாணவர்களின் திலகமாயிருந்து புகழுடன் பரீட்சைகளில் தேறியவர். எம். ஏ. பி. எல்., பட்டம் பெற்று வக்கீல் தொழில் செய்யப் புகுந்தார். அந்தத் தொழிலில் மனம் பற்றுக் கொள்ளவில்லை. கலைத் தேவி தனக்குத் தொண்டு செய்யும்படி அவரை அழைத்தாள். எழுதும் தொழிலில் புகுந்தார். ஆங்கிலத்தில் இனிய கட்டுரைகள் பல எழுதினார்; கதைகள் எழுதினார்; நீண்ட நாவல்களும் எழுதினார். அவை இலக்கிய ரசிகர்களின் உள்ளங்களை வெகுவாகக் கொள்ளை கொண்டன. ரஸிகர்கள் ஸ்ரீ வேங்கடரமணியைப் பெரிதும் பாராட்டினார்கள்.

அவருடைய ஆங்கில நூல்களில் ''முருகன் ஓர் உழவன்'' என்னும் பெருங் கதையை ஸ்ரீமதி சாவித்திரி அம்மாள் அழகிய தமிழில் மொழிபெயர்த்து வெளிவிட்டார். அதைப் பார்த்ததும் தாமே தமிழில் எழுதலாமே என்று ஸ்ரீ வேங்கடரமணிக்குத் தோன்றியது. ''தேச பக்தன் கந்தன்'' என்னும் அழகிய நவீனத்தைத் தமிழிலேயே எழுதினார். கவிதைச் சுவை பொருந்திய இனிய தமிழ் நடையில் எழுதினார். அதுவும் சீக்கிரம் ரஸிகர்களின் உள்ளங்களைக் கவர்ந்தது.

அதற்குப் பிறகு ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி ''பாரத மணி'' என்னும் தமிழ் மாதப் பத்திரிகையைத் தொடங்கி நடத்தினார். பத்திரிகை நடத்துவதில் பலரும் அடைந்த அனுபவங்களை அவரும் அடைந்தார். ஆர்ப்பாட்ட படாடோபங்கள் நிறைந்த உலகத்தில் அடக்கமுள்ள ஸ்ரீ வேங்கடரமணி இடித்துப் பிடித்துக் கொண்டு முன்னால் வர முடியவில்லை. பேரிகை முழக்கங்களுக்கு மத்தியில் கிண்கிணியின் சத்தம் கேட்கவில்லை. பாரதமணி இலை மறை பூவாகவே இருந்து வந்தது. கடைசியில் ஒரு நாள் உதிர்ந்து விழுந்து விட்டது. ஸ்ரீ வேங்கடரமணியின் கையிலிருந்த பொருளும் அதற்குள் மறைந்து விட்டது.

சில காலம் ஸ்ரீ வேங்கடரமணி என்று ஒருவர் இருந்தார், அவர் சிறந்த இலக்கியத் தொண்டு புரிந்தார் என்பதே எல்லாருக்கும் மறந்து போயிருந்தது. இப்போது அதை நினைவூட்டச் சில அன்பர்கள் முன் வந்திருக்கிறார்கள். மறைந்திருந்த குன்றிமணியை நம் முன்னால் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள்.

கடன்

சுந்தரேசனும் ஜானகியும் அந்த விஸ்தாரமான பங்களாவைத் தயக்கத்துடன் பார்த்தார்கள். வாசலில் கேட் அருகே வழு வழுவென்ற கிரானைட் கல்லில் பெயர் பொறித்திருந்தது. ''கௌதம் வில்லா!''

கூர்க்கா, இருவரையும் ஏற இறங்கப் பார்த்தான். சுந்தரேசன் அழுக்கு வேட்டி, வெள்ளைச் சட்டை, முள் தாடி, காதில் கடுக்கன், குடுமி என்று இருபதாம் நூற்றாண்டின் குசேலர் போல் இருந்தார். ஜானகி நைந்து போயிருந்த சின்னாளப் பட்டும், எண்ணெ இறங்கின மூக்குத்தியும், இரவல் வாங்கிய கவரிங் செயினும் அணிந்து, குசேலரின் மனைவி மாதிரி இருந்தாள். காவலாளி பீடியைப் பற்ற வைத்து நிதானமாகப் புகை விட்டு, தொண்டையைச் செருமி, ''யார் நீங்க?'' என்றான்.

''என் பேரு சுந்தரேசன். விஸ்வநாதன் சாரைப் பார்க்கணும்.''

''ஓஹோ! கும்பாபிஷேகமா? நன்கொடையா?''

''சே! சே!.. வேற ஒரு விஷயம்பா!''

''பொண்ணுக்குக் கண்ணாலமா?''

சுந்தரேசன் கொஞ்சம் தயங்கி, ''ஆமாம்பா'' என்றார்.

''சர்தான்! வேற வேலை இல்லையா? போங்க! போங்க!''

''இதப் பாருப்பா! நாங்க பிச்சை கேட்க வரலை. விஸ்வநாதன் எங்களுக்கு ரொம்ப வேண்டியவர். போய்ச் சொல்லு. சுந்தரேசன் வந்திருக்கார்னு சொல்லு!'' என்றார் பொறுமையாக.

''ஐயா ஊர்ல இல்லை. பாம்பே போயிருக்காரு. போயிட்டு வாங்க...!''

''சரி, அம்மா இருந்தாக் கூப்பிடு. அவங்களையும் எங்களுக்குத் தெரியும்'' என்றாள் ஜானகி.

''இதென்னடா பேஜாராப் போச்சு. இதப் பாரும்மா! ஐயாவைத் தேடிக்கிட்டு தெனம் இதைப் போல நூறு ஜனம் வருது. பரீட்சைக்குத் துட்டு இல்லை. பொண்ணுக்குக் கண்ணாலம். ஆபரேசனுக்குக் காசு இல்லை.. ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு பஞ்சப் பாட்டு. ஐயா ஏதோ பிரபு போல தர்மம் பண்றாருன்னு அவனவன் தலையில மொளகா அரைக்கிறான்... இப்ப யாரையும் பாக்க முடியாது. அம்மா கண்டிஷனா சொல்லியிருக்காங்க, பரதேசிங்க யாரையும் உள்ள வுடாதேன்னு... போ!... போ!...''

சுந்தரேசன் தாக்கப்பட்டவரைப் போல் நின்றார்.

''ஏன்னா!.. வாங்கோ! போயிடலாம். எதையும் கேக்க முடியலை என்னால...'' என்றாள் ஜானகி. அவள் கண்களில் கண்ணீர் தயாராகத் தேங்கி நின்றது.

''இரு ஜானகி! எப்படியும் பாத்தாகணும் இல்லையா? ஏம்பா! தயவு செஞ்சு உள்ளே போய்ச் சொல்லு. நாங்க பொய் சொல்லலை. எங்களுக்கு அவாளை நன்னாத் தெரியும்.. ஒரு உதவிக்காக வந்திருக்கேன்... தயவு செஞ்சு போய்ச் சொல்லு!....''

காவலாளி ஒரு கணம் தாடையைச் சொறிந்தபடி நின்றான். அவனுக்கே பாவமாகத் தோன்றியதாலோ என்னவோ கேட்டைத் திறந்து விட்டான்.

சுந்தரேசனும் ஜானகியும் உள்ளே நுழைந்தார்கள். நீளமாக கான்கிரீட் பாதை போர்டிகோவில் போய் முடிந்தது. இருபுறமும் மஞ்சளும் சிவப்பும் நிறைந்த குரோட்டன்ஸ் செடிகள். பங்களாவின் விஸ்தீரணம் பிரமிப்பைத் தந்தது. வாசலில் பளபளப்பாகத் துடைக்கப்பட்ட வெளிநாட்டுக் கார் ஒன்று நின்றிருந்தது. விஸ்வநாதன் சாதாரண ஆளா? பிஸினஸ் மாக்னட். விஸ்வம் இண்டஸ்ட்ரீஸ். கௌதம் ஏஜன்சிஸ். (மகன்) லக்ஷ்மி டெக்ஸ்டைல்ஸ் (மனைவி) எல்லாவற்றிற்கும் சொந்தக்காரர். பணத்தில் மிதப்பவர்.

''ஏன்னா! எவ்வளவு பெரிய வீடு பாருங்கோ!''

''வீடா! அரண்மனை! இதைத்தான் குபேர வாழ்வுன்னு சொல்வா... லக்ஷ்மி கடாட்சம்! அள்ளி அள்ளிக் கொடுக்கிறா...''

''பயமா இருக்குன்னா....''

''ஏன் ஜானகி?''

''தெரியலை. அவர் ஏதாவது கன்னா பின்னான்னு பேசிட்டார்னா... ஏற்கெனவே அந்தக் கடன்காரன் வாட்ச்மேன் என்ன பேச்சுப் பேசிட்டான்... ஈஸ்வரா...!''

''பயப்படாதே ஜானகி. விஸ்வநாதன் அப்படிப்பட்டவர் இல்லை. ரொம்ப நல்ல மனுஷன். உனக்குத்தான் தெரியுமே?''

''தெரியும்தான். ஆனாலும்...''

''பயப்படாதே... நமக்கு நிச்சயம் உதவி செய்வார்!''

'கிருஷ்ணா டாவின்ஸி'

''அவர்தான் ஊர்ல இல்லைன் னானே...?''

''பொய் சொல்றான் ஜானகி...''

தயங்கியபடி சென்றார்கள்.

மாடியில் கதவு திறந்து ஒரு பெண்மணி எட்டிப் பார்த்தாள். நாற்பது வயது வளப் பத்தில், நைட்டி அணிந்து, கூந்தல் பறக்க, வினாடிக்கும் குறைவான நேரத்தில் மறுபடி காணாமல் போனாள்.

''யாருன்னா அது?''

''அதுதான் லக்ஷ்மி...! விஸ்வநாதன் பெண்டாட்டி!''

''ஒண்ணுமே கே க் க லை யே, நம்பளை?''

''பா த் து ட் டா இல்லை? போய் விஸ்வநாதனைக் கூப்பிடுவாள்.''

''ஏன்னா... அவர் உதவி பண்ணுவாரா? ஒரு காசா ரெண்டு காசா? இருபத் தையாயிரம்....!''

''இருபத்தையாயிரம் அவருக்குத் தூசு மாதிரி. பாத்துண்டே இரு.''

''பகவானே...! மைதிலி கல்யாணம் நல்லபடியா முடியணும்.''

''பயப்படாதே ஜானகி. பெருமாள் நம்ப பக்கம்.''

சுந்தரேசனும் ஜானகியும் நின்று கொண்டேயிருக்க, மாடியின் அதே அறையி லிருந்து ஓர் இளைஞன் வெளிப்பட்டான். அவன் உடை வினோதமாக இருந்தது. அவன் மேலேயிருந்து கீழே இவர்களைப் பார்த்து, பின் அறையின் உள்ளே திரும்பி, ''மம்மீ...'' என்று ஏதோ கேட்டான். பிறகு விருட்டென்று உள்ளே போய் விட்டான்.

ஜானகி அவனையே பார்த்துக் கொண்டி ருந்தாள். சுந்தரேசன் அவளைத் தட்டிக் கொடுத்தார். எதையோ சொல்ல ஆரம்பிக்கு முன் மாடியிலிருந்து அவன் தடதடவென்று கீழே இறங்கினான். அவன் பார்வை இருவரையும் துளைப்பது போல் இருந்தது. தொப்பென்று சோஃபாவில் உட்கார்ந்தான்.

பிறகு சாவகாசமாகத் திரும்பிக் கையைச் சொடுக்கினான். அருகே வருமாறு சைகை செய்தான்.

சுந்தரேசன் மெதுவான குரலில், ''வா ஜானகி! வா!'' என்று சொல்லி கையைப் பிடித்துக் கொண்டார். கொஞ்சம் பயத் துடன் நடந்தார்கள். அருகில் போய் நின் றார்கள்.

''வெல், யார் நீங்க?'' என்றான் அவன். கௌதம்! விஸ்வநாதனின் ஒரே மகன்.

''என் பேரு சுந்தரேசன். இது என் ஒய்ஃப் ஜானகி, அப்பா இல்லையா?'' என்றார்.

''அப்பா இல்லை. என்ன விஷயம்?''

''மன்னிச்சுக்குங்கோ. உங்கப்பா கிட்டேதான் இதைப் பத்திப் பேசணும்... பண விஷயம்!'' என்றார்.

''அச்சா!'' என்றான் ஏளனமாக. ''லுக்! எங்கப்பாவை உங்களுக்கு எப்படித் தெரியும்?''

ஜானகி பிரமித்தபடி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். சுந்தரேசன் பொறுமையாக, ''விஸ்வநாதனை எனக்கு ரொம்ப காலமாத் தெரியும். எனக்கு ஒரு பிரதர் மாதிரி அவர்.''

''எல்லாரும் இதைத்தான் சொல்றாங்க. உங்களுக்கு என்ன வேணும்?''

''எம் பொண்ணுக்குக் கல்யாணம் நிச்ச யம் பண்ணியிருக்கேன். மைதிலின்னு பேரு. நான் வாத்தியார் தொழில் செய்யறவன். ஏழை....''

''ஸோ?''

''ஒரு இருபத்தையாயிரம் தேவைப் படறது. கடனாத்தான். பத்திரம் எழுதித் தர் றேன்... வாக்குத் தவற மாட்டேன்...''

கௌதம் விசுக்கென்று சிரித்தான். ''எவ் வளவு? இருபத்தையாயிரமா? எங்கப்பா என்ன பாங்க்கா? எங்கப்பாவுக்கு இதே வேலையாப் போச்சு. கர்ணன்னு நெனைப்பு. கண்ட கண்ட பிச்சைக்காரங் களுக்கு வாரிக் கொடுக்க இது என்ன சத்திரமா....''

''தம்பி! கோபத்துல அநியாயமாப் பேசாதே! நாங்க பிச்சை கேக்க வரலை...''

''ஏன்னா! வாங்கோ போயிடலாம்...''

''இரு ஜானகி...! தம்பி! உங்கப்பாவைக் கூப்பிடு!''

''எதுக்கு...? இந்தம்மா ஏன் அழு றாங்க? மை காட்! இது ஒரு டெக்னிக். அழுதா இரக்கப்பட்டுடுவாங்கன்னு... கெட் லாஸ்ட் ஐ ஸே...!'' என்று இரைந்தான். மாடியிலிருந்து அவன் அம்மா எட்டிப் பார்த் தாள்.

''கௌதம்...! என்ன அங்கே?''

''நத்திங் மம்மி. யூஷுவல் பெக்கர்ஸ்.''

சுந்தரேசனுக்குச் சுரீர் என்றது. பிச்சைக் காரர்கள்!

சுந்தரேசன் உதடு துடிக்க அவனைப் பார்த்தார். சட்டென்று ஜானகியின் கை யைப் பிடித்துக் கொண்டார். விறுவிறு வென்று நடக்க ஆரம்பித்தார். கௌதம் தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

கேட்டைத் திறந்து வெளியே வரும் போது ஜானகி அழுது கொண்டேயிருந்தாள். விக்கி விக்கி அழுதாள். ''பிச்சைக் காரான்னுட்டானே...'' என்று புலம்பினாள். சுந்தரேசனுக்கு அவளை எப்படிச் சமா தானப்படுத்துவது என்று தெரியவில்லை. அவர் இதயமே கொதித்துக் கொண்டி ருந்தது.

சாலையின் ஓரமாக நடந்து வந்த போது, சர்ரக்கென்று கார் ஒன்று வந்து நின்றது. உள்ளே இருந்தவர் எட்டிப்பார்க்க.... விஸ்வநாதன்! அவர் முகம் ஏதோ ஒரு பாவத்தில் மூழ்கிக் கிடந்தது.



''யாரு? சுந்தரேசனா...? ஜானகியா?'' என்றார் அவர்.

''விசுவநாதன்! நீங்களா...?''

''நானேதான். கார்ல ஏறுங்க. ஏன் அழுறாங்க? உள்ளே வாங்க! ப்ளீஸ்...'' என்று கதவைத் திறந்தார் விஸ்வநாதன்.

''காரைக் கிளப்பாதீங்கோ! உங்க வீட்லேர்ந்துதான் வர்றோம். போதும். பட்ட அவமானம் போதும்.எம் பொண்ணு கல்யாணத்துக்குப் பண உதவி கேக்கத்தான் வந்தோம். ஆனா உங்க பிள்ளை, நாக்கைப் பிடுங்கிக்கிறாப்ல கேட்டுட்டான். போங் கடா பிச்சைக்காரங்களான்னு ஏளனமாப் பேசிட்டான்... தாங்க முடியலை...''

''சொல்லிட்டீங்களா...?'' என்று பரபரத்தார் விஸ்வநாதன்.

''இல்லை. சொல்லலை. நாங்க பிச்சைக்காரங்கதான். ஆனா வாக்குத் தவற மாட்டோம். சத்தியம் மீற மாட்டோம். ஆனா லக்ஷ்மி கூடவா மாறிட்டா...? எல்லாம் தெரிஞ்ச அவளுமா?'' என்றார் சுந்தரேசன். அவர் தாடை துடித்தது. தொண்டைக் குமிழ் ஏறி இறங்கியது.

விஸ்வநாதன் அவர் கரங்களைப் பற்றிக் கொண்டார். ''சுந்தரேசன்! ப்ளீஸ்! மன்னிச்சுக்கோங்க... உங்க ஃபீலிங்ஸ் புரியுது...''

''ஜானகி விசும்பலோடு தலையில் அடித்துக் கொண்டாள். ''விஸ்வநாதன் ஸார்! அவன் சின்னக் குழந்தை! நாலு மாசக் குழந்தை! அப்போ கார்ல வந்து கெஞ்சோ கெஞ்சுன்னு கெஞ்சித் தத்துக் கேட்டேள். கொடுத்தோம்... எதையும் பிற்காலத்துல சொல்லக் கூடாதுன்னு சத்தியம் கேட்டேள். அதையும் செஞ்சு கொடுத்தோம். அதே பிள்ளை... என் பிள்ளை... என்னைப் பார்த்து... ஈஸ்வரா...! என்னென்ன சொன்னான்... சொல்ல முடிஞ்சுதா...? பாவி மகனே! உன் தங்கைக்குக் கல்யாணம்டா! உன் அம்மா கேட்கிறேன்னு...! சொல்ல முடிஞ்சுதா? ஐயோ...! பகவானே...!''

''சுந்தரேசன்! நீங்க கவலைப்படாதீங்க. நான் தர்றேன் பணம். எவ்வளவு வேணும்? கேளுங்க தர்றேன்...'' விஸ்வநாதன் பெட்டியைத் திறந்து, செக் புக்கை விசிறி, பேனாவை எடுத்து, ''கேளுங்க... சுந்தரேசன்! எவ்வளவு வேணும்?'' என்றார்.

சுந்தரேசன் கார் கதவைத் திறந்தார். ஜானகியின் கையைப் பிடித்துக் கொண்டார். வெளியே வந்தார்.

''சுந்தரேசன்! ப்ளீஸ்! ஐ வான்ட் டு ஹெல்ப் யு! என்ன வேணும் கேளுங்க... ப்ளீஸ்...''

சுந்தரேசன் எதுவும் பேசாமல் ஜானகியுடன் நடக்க ஆரம்பித்தார். ஜானகியின் உடல் அழுகையில் குலுங்குவது தெரிந்தது. விஸ்வநாதன் ஸ்தம்பித்துப் போய் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தார்.

தூரத்தில் சென்று கொண்டிருந்த ஜானகி திரும்பி, ''எம் புள்ளை...! எம் புள்ளை! அவனைத் திருப்பித் தருவியா நீ?'' என்று கேட்டது காற்றில் கரைந்தது.

6

கம்ப்யூட்டர் கிராமம்



ப்ரமிளா இல்லை என்றதும் மனோஜுக்குத் திடுக் என்றது. மாமரம், முனீஸ்வரன் எல்லாம் அனாவசியத்துக்கு ஞாபகம் வந்தது. ''திரும்ப பம்பாய் போய் விட்டாளா?'' என்று கேட்டு ஷண்பேகர் வெறுப்பேற்றினான். நிதானமாக விசாரித்ததில் ப்ரமிளாவை டி.எஸ்.யின் வீட்டுக்கு அவர் மனைவி அழைத்துக் கொண்டு போயிருக்கிறாள் என்று தெரிந்தது.

அங்கு சம்பிரமமாகத் தரையில் உட்கார்ந்து கொண்டு, சின்னப் பாப்பாவுக்குக் கிலுகிலுப்பை காட்டிக் கொண்டிருந்தாள். அருகில் டோட்டு சமர்த்தாக காட்டிக் கொண்டிருக்க, பாப்பா அதன் காதை இழுத்துக் கொண்டிருந்தது.

ஷண்பேகர், ''நீ பம்பாய் போகவில்லையா?'' என்றான்.

''பம்பாயா!'' என்றாள் புரியாமல்.

''ஷண்பேகர் உன் நாகக்கெல்லாம் அவளுக்குப் புரியாது!''

டிஎஸ்யின் மனைவி நித்யா அவர்களுக்குக் காப்பி போட்டுக் கொடுத்து விட்டு, ''ப்ரமிளா ரொம்ப சுவாரஸ்யமான பெண். எனக்கு ப்ரமிளாவைப் பிடித்துப் போய் விட்டது. ப்ராஜெக்ட் முடியும் வரை என்னுடனே இருக்கட்டும்!'' என்றாள்.

ப்ரமிளா, ''நான் இன்னும் ஒப்புக் கொள்ளவில்லை. மனோஜை கேட்டுச் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன்'' என்றாள்.

மனோஜ், ''உங்களுக்குத்தான் ரொம்பச் சிரமம்'' என்றான்.

''அய்யோ சிரமமே இல்லை. சமையல் பண்ணும் போது குழந்தையைப் பார்த்துக் கொள்வாள். நாணா அவளிடம் ரொம்ப ஒட்டிக் கொண்டு விட்டான். மடியை விட்டு இறங்க மாட்டேன் என்கிறான்.''

மனோஜுக்குக் குழப்பமாக இருந்தது. ''பார்க்கலாம்'' என்றுதான் சொன்னான். அவள் தங்க இடம் கொடுப்பது ப்ரமிளாவுக்கு மட்டும் என்று தோன்றியது.

கிளம்பும் போது நித்யா ப்ரமிளாவுக்குக் குங்குமம் கொடுத்தாள். ''முனீஸ்வரன் குங்குமம்'' என்றாள்.

''எந்த முனீஸ்வரன்?''

''வள்ளிக்குப்பம் மாமர முனீஸ்வரன். ரொம்பச் சக்திவாய்ந்த தெய்வம்.''

மனோஜுக்கு முகம் ஒரு மாதிரி ஆனதை ஷண்பேகர் கவனித்தான்.

''நாளைக்குக் காலையில் கொண்டு வந்து விட்டு விடுங்கள் ப்ரமிளாவை'' என்றாள்.

''என்ன சொல்றீங்க?'' என்றாள் ப்ரமிளா.

தெருவில் அவர்களை எல்லாரும் வேடிக்கை பார்ப்பது போலத் தோன்றியது.


''நிச்சயம் இங்கே நாம் அன்னியர்கள். வேறு உலகத்து மனிதர்கள்'' என்றான் ஷண்பேகர்.

''ரொம்ப வற்புறுத்துகிறாள். போய் இருக்கட்டுமா?''

''உன் இஷ்டம்'' என்றான்.

''உங்களுக்கு விருப்பமில்லையென்றால் நான் போகவில்லை.''

சுஜாதா



''நாளை சொல்கிறேனே...'' என்றான்.

இரவே தீர்மானிக்கப்பட்டது. ஒட்டல் அறையில் மங்கலான இருட்டில் ஏதோ உறுத்துகிறது என்று பார்த்தால் பூரான். அவள் அலறியதை ஊரே கேட்டிருக்கும். ''இந்த மாதிரி பம்பாயில் பார்த்ததே இல்லை'' என்றான்.

காலை சைட்டுக்குக் கிளம்பும் போது, அவளை டிஸியின் வீட்டில் கொண்டு விட்டுப் போனான். மாமரம் வெட்ட ஆட்கள் வரவில்லை.

''என்ன பொன்னையா வெளியூர் ஆளுங்களைக் கூட்டிவான்னு சொன்ன னில்லை?''

''அது என்னாக்கங்க... ஆளுக்குச் சொல்லி வெச்சிருந்தேன். அவன் ராத்திரி காயலா படுத்துட்டானாம். மத்யானம் வரு வாங்க'' என்றார்.

''வில்லேஜ்ல இந்த மரத்தில இருக்கிற தெய்வத்தை வேற இடத்தில ப்ரதிஷ்டை பண்ணிறச் சொல்லுங்க. அதுக்கான

செலவையெல்லாம் ஏத்துக்கறோம்.''

''ஆவட்டுங்க. அது கொஞ்சம் காட்டுத் தெய்வம். கோவிக்கும்! அதுக்குத்தான் பார்க்கறேன். யோசிச்சுச் சொல்றங்க.''

''என்ன யோசிச்சாலும் மரம் வெட்டியாகணும்! அது பக்கத்தில இருந்தா இந்தச் சாதனங்கள்ளாம் கொஞ்சம் ராங்கி பண்ணும்.''

''அந்த இடத்தை விட்டு வேற இடத்தில வெக்க முடியாதுங்களா தள்ளி?''

''பாருங்க இந்த இடத்துக்குத் தேர்ந்தெடுத்து லாண்ட் அக்வைர் பண்ணி, இதுவரைக்கும் பதினெட்டு லட்சம் ரூபாய் செலவழிச்சாச்சு. மூணு மாசத்துக்குள்ள ஸ்டேஷன் வந்தாகணும். அது வைக்கறதால இந்தக் கிராமத்துக்கு சுபிட்சங்க. ஒரு நூறு பேரு வேலை செய்வாங்க. அவங்ககிட்ட நிறையப் பணம் புரளும். குவார்ட்டர்ஸ் கட்டுவோம். இந்தப் பிரதேசத்துப் பொருளாதாரமே மாறிப் போய்டும், ஒரு மரத்துக்காக அதையெல்லாம் இழக்காதீங்க என்ன..?''

''சரிங்க'' என்றார் மையமாக.

ஷண்பேகர் கம்ப்யூட்டர் பெட்டிகளைத் தனிப்படுத்தினான். சின்னச் சின்ன டிஸ்க்கையெல்லாம் வரிசைப்படுத்தினான்.

'விஸாட்'டின் சிறிய டிஷ்ஷை முதலில் அமைத்தான்.

''முதல்ல விஸாட்டை இன்ஸ்டால் பண்ணிர்றேன். மூணு மணி நேரம்தான் ஆகும். முதல்ல கம்யூனிகேஷன் சானல் வெச்சுக்கறேன். அப்புறம் கே யு பாண்ட் பெரிய வேலையை ஆரம்பிக்கலாம்'' என்றான்.

''என்ன செய்வாயோ முதலில் டெலிபோன் இணைப்பைக் கொடுத்து விடு. எனக்கு டாலியுடன் பேசியே ஆக வேண்டும்.''

''சரிதான்.''

ஸோலர் பானல்களை விரித்து - பாட்டரி நல்ல சார்ஜில் இருந்தது. ஃப்ளோட்டில் போட்டு விட்டான், ட்ரிக்கிள் கொடுக்க.

சர்விஸ் சானலை அமைத்து, வி. எஸ். என். எல். லுடன் பேசின போது, குதூகலமாக இருந்தது. எங்கோ தேச மூலையில் ரோடில்லாத, வீடில்லாத தனிப் பிரதேசத்திலிருந்து, உலகத்து அத்தனை சங்கதிகளும் கிடைக்கப் போகிறது. ஸாட்டிலைட்டுகள் மூலம் பன்னாட்டுத் தொடர்புகள் கொள்ளலாம் என்கிற சித்தாந்தத்தை முதலில் சொன்ன ஆர்தர் கிளார்க்கை வியந்தான்.

ஷண்பேகர் தன் சொந்த 'பி.ஸி'யை தரையில் வைத்து அதன் ஈபோர்டில் ஈச் ஈச் என்று ஒத்த ஆரம்பித்தான். கிராமத்து மக்கள் அனைவரும் சன்னல் வழியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''என்னடா அது?''

''லேடியோ.''

''லேடியோ இல்லைடா. பச்சயாத் தெரியறது பாரு!''

''எழுத்துக் காட்டுது பார். டிவிமிசன்னு சொல்றாங்களே அதா?''

''அய்யா எம்.ஜி.ஆர். படம் வருங்களா இதில?''

ஷண்பேகர் ''வாட்ஸ்தட்?'' என்றான்.

''தமிள்காரங்க இல்லைடா அவங்க.''

''ஒருத்தர் தமிள் பேசறாருடா.''

ஷண்பேகர் ''என்னால் தினம் தினம் வந்து கொண்டு இருக்க முடியாது. ஸிஸ்டம் கால் எல்லாம் சரியாகவே இல்லை. டிஸ்க் கரப்ட் ஆகியிருக்கிறது. அதனால இங்கேயே தங்கியிருக்க உத்தேசம். யாராவது காவலுக்கு ஏற்பாடு செய்'' என்றான்.

மரம் வெட்ட இருவர் மத்யானம் வந்தார்கள். நோஞ்சலாக ஆயுதம் எதும் இல்லாமல் வந்தார்கள்.

''எங்கய்யா கோடாலி எதும் கொண்டு வரலை?''

''முதல்ல ரேட்டு பேசிரலாம்னு சொன்னாங்க.''

''என்ன ரேட்டு சொல்லுங்க.''

இன்ஸ்பெக்டர் : வீட்டுல திருடன் புகுந்து கொள்ளை அடிச்சிட்டதாச் சொல்றீங்களே, என்னவெல்லாம் திருட்டுப் போயிருக்கு?

வந்தவர் : ரெண்டாயிரம் ரொக்கம், அஞ்சு பவுன் நகை, மூணு பட்டுப் புடவை, ஒரு கிலோ தக்காளி...

- ஆலத்தம்பாடி ராஜகோபால்.





நடிகை : ''வர வர எனக்கு ஞாபக மறதி அதிகமாகிக்கிட்டே வருது டாக்டர்!''

''எதை வெச்சு அப்படிச் சொல்றீங்க?''

''விவாகரத்துப் பண்ண வேண்டியதையே மறந்துட்டு ஒரே கணவரோட ரெண்டு வருஷமா இருந்துட்டேன்!''

- குடந்தை எல். ராம்பிரபு.

''அறுநூறு ரூபா கொடுத்துருங்க'' என்றான். ரொம்பக் கேட்டு விட்டதில் மனோஜின் முகத்தில் கோபத்தை எதிர் பார்த்து.

''அவ்வளவுதானே சரி'' என்றான் மனோஜ்.

இத்தனை சுலபமாக முடியும் என எதிர்பார்க்காமல் மரத்தை அணுகினார்கள். கன்னத்தில் கை வைத்துக் கொண்டு சுற்றிலும் வந்தார்கள்.

ரொம்பச் சின்ன மரம் ரெண்டு மணி நேரத்தில் வெட்டிரலாம்.

''என்னங்க குங்குமம் இட்டிருக்கு?''

''அது என்னவோ கிராமத்துக்காரங்க இட்டிருக்காங்க. ரொம்பக் கேள்வி கேக்கா திங்க, வெட்டிருங்க.''

அப்போது அவர்களை நோக்கி ஒரு காவி வேட்டிக்காரர் வந்தார். நெற்றியில் திருநீறும் முகத்தில் தாடியுமாக ''வணக் கங்க'' என்று மனோஜைப் பார்த்துக் கும்பிட் டார். ''வணக்கங்க'' என்றார் ஷண்பேகரை யும் பார்த்து.

''வணக்கம்'' என்றான் மனோஜ்.

''முனி மரத்தை வெட்டறதா யாரோ சொன்னாங்க.''

''நான்தான் வெட்டச் சொன்னேன்.''

''முடியாதுங்க'' என்றார் சிக்கனமாக.

''ஏன்?'' என்றான் மனோஜ் கோபம் புறப்பட.

''இந்த மரம் நூறு வருசத்து மரங்க. இதில மகாமுனீஸ்வரர் குடியிருக்கார்.''

''எல்லாம் கிராமத்தில சொன்னாங்க பூசாரி. நீங்கதான் பூசாரியா?''

''நான் ஒரு ஆத்துமாங்க அவ்வளவு தான்.''

''ஆத்துமா, நீங்க என்ன பண்றீங்க, இந்த முனீஸ்வரனை வேற எந்த இடத் திலயாவது ப்ரதிஷ்டை பண்ணிருங்க.''

''அதெல்லாம் அவ்வளவு சுலபமாச் செய்யற காரியம் இல்லைங்க. முதல்ல ப்ரதிஷ்டை பண்ண முடியுமுன்னு - மது தூர்ல எங்க குருநாதர் இருக்காரு அவரைக் கேட்டு பர்மிட்டு வாங்கணுங்க.''

''இது சர்க்கார் நிலம் தெரியுமில்லை?''

''இருக்கலாங்க. கோவில் எல்லாருக் கும் பொது இல்லையா!''


''கோவில் இல்லைய்யா வெறும் மரம்.''

''மரந்தாங்க இந்த ஊருக்குக் கோவில். ஆடி மாசம் விழாக் கொண்டாடுவோம். மழை வந்துரும் தெரியுமில்லை! ஆரம் பாக்கம் கிழ்-வெள்ளம் எல்லாத்திலிருந்தும் லட்சம் ஜனம் வரும்.''

''எங்க ரோடுக்குக் கிழக்கால எத்தனை மரம் இருக்குது. அதில எதிலயாவது சாமி வெக்கக்கங்களேன்?''

''நீங்க பெரியார் கட்சியா?''

''நான் விஞ்ஞானக் கட்சி.''



அரசுத் துறை நிறுவனமான நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன், இயந்திரங்களை நவீனப்படுத்துதல், தேவையற்ற செலவி னங்களைக் கட்டுப்படுத்துதல், உற்பத்தியின் தரத்தையும் அளவையும் அதிகரித்தல், தொழிலாளர்களின் பணி நேரங்களை முழு மையாகப் பயன்படுத்திக் கொள்ளுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் இவ்வாண்டு ஒரு சாதனை படைத்துள்ளது. என்ன சாதனை என்கிறீர்களா?

சென்ற ஆண்டு அது அடைந்த நஷ்டம் 200 கோடி ரூபாய். இந்த வருட நஷ்டம் 191 கோடி ரூபாய் மட்டுமே.

- ஆதாரம் ''ஹிந்து''

- அ. ஷண்முகசுந்தரம்.

''யாருய்யா பாத்தூர்க்காரர் மரம் வெட்ட வந்தவரு?''

அந்த ஆட்கள் சைடாக நின்று கொண்டி ருந்தார்கள். ஒருவன் ''இன்னும் பேசி முடிக்கலைங்க'' என்றான்.

''எத்தனை கேட்டிருக்க?''

''ஆயிரம் ரூபாங்க.''

''ஆயிரம் ரூபா வாங்கிட்டுப் போ. மரத்தை வெட்டாத.''

எலுமிச்சையைக் கையில் கொடுத்து ''இதை வாங்கிக்கிட்ட இல்லை. மரத்தை வெட்டினா, ரத்தம் கக்கிச் செத்துருவே. குடும்பத்துல பெண்ணு புள்ளைங்க பொறக் காது பரவாயில்லையா?''

மரம் வெட்ட வந்தவன் பின்வாங்கி ''அய்யா அப்புறம் வெவரம் சொல்றங்க'' என்றான்.

''எங்கய்யா போற இவரு பயப் படுத்தறார்னா?''

''இல்லைங்க, கோடாலியெல்லாம் எடுத்து வரலை. போய் வாரங்க.''

''தொட்ட? முதல்ல உன் கைதான் வெட்டுப்படும்! சாமியை என்னாங்கறே; ஒனக்குத் தெரியாது?''

''யோவ் சும்மா அந்தாளை ஏன் பயப் படுத்தற? நீ கோடாலி கொண்டு வாய்யா. நான் முதல்ல வெட்டிப் பார்க்கறேன். கை போவுதா பார்க்கலாம்.''

''சரிங்க வர்றேன்'' என்று அவன் அவ சரமாக, ''பத்து மணி பஸ்ஸு போயிருச் சுங்களா?'' என்று விசாரித்துக் கொண்டு புறப்பட்டான். இனி வர மாட்டான் என்பது தெளிவாகத் தெரிந்தது.

ஷண்பேகர் அந்த நாடகத்தைப் பார்த் துக் கொண்டிருந்தவன், ''மனோஜ் இதற்கு வேறு வழி பார்க்கலாம்'' என்றான்.

(தொடரும்)

விடியவரும் இரவுகள்

''செம்பகா சாப்டாளா?'' உறுமினான் துரை.

''ம்ஹூம்....'' என்றாள் ஜெயா.

''சாவட்டும்... சவம்... உகர வாங்குதுகள் சனியன்கள்.... பெருக எங்க?'' துரையின் அதட்டலில் மலிவு விலை மது வாடை தூக்கலாக இருந்தது.

''இன்னம் வீடு வரல...'' ஜெயாவின் குரல் இணைற்றுக்குள்ளிருந்து கேட்டது.

''வீடு வரலயா... எங்க திரியுதான் அவன்... எரும மாடு....'' என துரை ஆரம்பிப்பதற்கும், வேலுச்சாமி தலைவாசலுக்குள் அடியெடுத்து வைப்பதற்கும் சரியாக இருந்தது.

''ஏலே... இங்க வாலே....'' துரையின் அதட்டலால் பாதிக்கப்படாமல், ''ஆத்தா... வயிறு பசிக்கி... கஞ்சியூத்து'' என்றான் வேலுச்சாமி.

''ஏய்... கேக்கேன்ல....''

''என்ன கேக்க?'' அலட்சியமாகக் கேட்டான் வேலுச்சாமி.

''எங்க போய்ட்டு வர்ற?''

''தீப்பட்டி ஆபீஸ்ல கூடக் கொஞ்ச வேல பாத்தன்... லேட்டாயிட்டு... அதுக்கென்ன?''

''சரி சரி போ....''

''போறேன்ல..... இன்னைக்கும் தண்ணியா... காசெல்லாம் காலியாக்கி விருப்பியே?''

''ஏய்... போலே....''

முணுமுணுத்தவாறு சமையற்கட்டுக்குள் நுழைந்தான் வேலுச்சாமி.

அவனுக்குக் கஞ்சியும் வெங்காயம், மிளகாய் வத்தலும் எடுத்து வைத்தாள் ஜெயா.

''எத்தா... செம்பகா சாப்ட்டாளா?'' எனக் கேட்டான் வேலுச்சாமி. குரலில் அப்பாவின் அந்த அலட்சியம் தெரிவதைக் கவனித்தாள் ஜெயா.

''இல்லடா.''

''ஏன்?''

''பழய சண்டதான்.... தீப்பட்டி ஆபீசுக்குப் போகாட்டாளாம்.... பள்ளிக் கோடத்துக்குப் போற வரயும் சாப்பிட மாட்டேங்கறா....''

''அய்யன் அடிக்கச்சாக்கும்....''

''இப்பில்ல.. காலம்பற...''

''சே.... இதே ரோதனையாப் போச்சு.. எங்க அவ?''



வெ.சுப்ரமணியபாரதி

''புறத்தால இருக்கா... நீ சாப்புடு, அவ அப்புறம் வருவா....'' எனத் தாய் சொன்னதைச் சட்டை செய்யாமல், ''ஏட்டி... இங்களென்னபண்ற?'' எனக்கேட்டவாறு புறவாசலை எட்டிப் பார்த்தான் வேலுச்சாமி.

குத்துக்காலிட்டுத் தன் மடியிலேயே முகம் புதைத்து அழுது கொண்டிருந்தாள் செண்பகம்.

''ஏய்... கேக்கன்ல... என்ன செய்யுத?'' அதட்டினான் வேலுச்சாமி.

''அழுதேன்...''

''பசிக்கா? கஞ்சி குடியேன்... கஞ்சியிருக்கு வா...'' அவளது கையைப் பற்றி இழுத்தான் வேலுச்சாமி. செண்பகம் 'வெடுக்'கெனக் கையை இழுத்துக் கொண்டாள்.

''நா வராட்டேன்... நீ போய்க் கஞ்சி குடி....''

''ஏட்டி?''

''நான் ராணி, மல்லிகாவாட்டம் பள்ளிக்கூடம் போவணும். தீப்பெட்டி ஆபீஸ் போகச் சொல்லுது அய்யன். நா போகாட்டேன்....''



வேலுச்சாமி பக்கத்தில் அமர்ந்தான். செண்பகத்தின் தோளில் கையை வைத்துக் கொண்டான்.

''படிச்சு என்ன பண்ணப் போற...?'' என பெரியமனிதத்தனம் காட்டிக் கேட்டான்.

''ஒன்னாட்டம் நான் ஊர் சுத்த மாட்டேன்...''

வேலுச்சாமி கோபத்தில் அவளைப் பக்கவாட்டில் தள்ளிவிட்டான்.

''திமிரு புடிச்ச கழுத... மூதி... எப்படியோ போ....''

எழுந்து சாப்பிடப் போனான். செண்பகம் மீண்டும் அழத் தொடங்கினாள்.

''என்ன தொர யோசிக்க... வான்னா...'' துரையை இழுத்தான் இப்ராகிம்.

''வேணாம் பாய்.... யாராச்சும் சொந்தக்காரன் பாத்தா அசிங்கமாப் போயிரும்....''

''ச்சு... இதுல என்னப்பா அசிங்கம்.... அதுகபாட்டுக்கு நடிக்கும்.. நம்ம பாக்கோம்... அதுகளே அசிங்கம் பாக்கலே... வாங்கிறேன்...''

ஏறத்தாழ துரையை இழுத்துக் கொண்டு தியேட்டருக்குள் நுழைந்தான் இப்ராகிம்.

டிக்கெட் கவுன்டர் அருகே வந்து, ''இன்னக்கி டிக்கட்டு எவ்வளவுங்க?'' என்றான். ஓடும் படத்தைப் பொறுத்து, வெளிவிட்ட நாளைப் பொறுத்து அன்றன்றைக்கு டிக்கெட் ரேட் மாறும்.

''ஆறு.''

''ஆறா? பாய்.... ஆறு ரூவா குடுத்தா சினிமாப் போகணும்... வா.... அதுக்கு நூறு மில்லியாவது அடிப்பம்....''

''ஏய்... என்னப்பாது, இதுல இருக்க இக் மில்லியில இருக்கா? வா சொல்றேன். ஏங்க, இன்னக்கி எத்தன பிட்டு?'' என மீண்டும் கவுன்டரில் கேட்டான் இப்ராகிம்.

''ரெண்டு பெரிய பிட்டு. ஒரு சின்ன பிட்டு.... இந்தா.... ரெண்டுதானே? துட்டுக் குடு...''

டிக்கெட் வாங்கிக் கொண்டு இருவரும் இருக்கைகளில் அமரும் போது ஏற்கெனவே படம் ஓடிக் கொண்டிருந்தது.

இப்ராகிம் பக்கத்து ஆளிடம், ''என்னங்க பிட் ஏதும் ஓடிருச்சா?'' எனக் கேட்டான்.

அந்த ஆள் எரிச்சலோடு, ''இன்டர்வெலுக்கு அப்புறந்தானாம்'' என்றான்.

''அப்பாடா'' எனப் பெருமூச்சுவிட்டுக் கொண்ட இப்ராகிமைப் பார்க்கப் பார்க்கப் பற்றிக் கொண்டு வந்தது துரைக்கு. டிக்கெட்டுக்குப் பன்னிரெண்டு ரூபாய், சைக்கிளுக்கு ரெண்டு ரூபாய்... வீணாய்ப் போயிற்றே! அவன் வாயில் எச்சில் ஊறியது... எரியும் பசிக்கு 'கப கப'வெனச் சாராயம் இறங்க வேண்டும்! திரையில் பேசிச் சிரித்துக் கொண்டிருந்த முந்தானை போடாத பெண்கள் துரையைக் கவரவில்லை.

இடைவேளையில் பீடிக்காக எழுந்து போனார்கள்.

''என்ன பாய் படம் வளவளன்னு அறுக்குது? துட்டுக்குப் புடிச்ச கேடா... சே....''

''நீ வேற... யாரு இந்தப் படம் பாக்க வந்தா? இன்டர்வெலுக்குப் பின்னால சைடுபிட் ஓடும் பாரு... ஜம்முனு....''

''அத தனியா எடுப்பாங்களோ?''

''யாரு கண்டா? ஏய்... தொர... அங்க பாரு....''

''என்ன...''

''அது யாரு.... நம்ம வேலுச்சாமியில்ல அது? கையில பீடி வேற....''

''ஆமா.... அட பொறுக்கிக் கழுத... ஏலே.... ஏய்... வேலுச்சாமி...''

துரையின் அழைப்பைக் கேட்டதும் பீடியைக் கீழே போட்டுவிட்டுக் கூட்டத்திற்குள் நைஸாக நழுவப் பார்த்தான்.

இப்ராகிம் ஓடிப்போய்ப் பிடித்து இழுத்து வந்தான். முகத்தில் இறுக்கம் காட்டித் திமிறிக் கொண்டு வந்தான் வேலுச்சாமி.

வேலுச்சாமியின் மேல் பாயப் போன துரையைத் தடுத்துத் தள்ளினான் இப்ராகிம்.

''ஸ்ஸு.... எல்லாரும் பாக்காக... வா.... தியேட்டருக்கு வெளிய போயிருவோம்....''

துரையை முன்னே தள்ளிவிட்டு வேலுச்சாமியை இழுத்துக் கொண்டு பின் தொடர்ந்தான் இப்ராகிம்.

''என்னய நீ ஏன் அடிக்க? நீயுந்தான அந்தச் சினிமாவுக்கு வந்த?'' வலி தாங்கா



மானேஜர் : ''நீங்க இன்னும் ஒரு வாரத்துக்கு 'ஓவர்டைம்' பாருங்க!''

கிளார்க் : ''நான் அதிகமாத் தூங்கினா உடம்புக்கு ஒத்துக்காதுன்னு டாக்டர் சொல்லியிருக்கார் ஸார்!''

- கபிஸ்தலம் ஏ. கே. ஆனந்தப்ரியா.

மல் கத்தினான் வேலுச்சாமி.

''பாரு பாய்... எதிர்த்துப் பேசறான்...'' மீண்டும் பாயமுயன்ற துரையை இப்ராகிம் தடுத்தான். ''இருப்பா... பேசற விதமாப் பேசணும்....''

''இங்க பாரு.... வேலுச்சாமி... இப்படிப் பேசலாமா? அப்பாட்ட மரியாதையாப் பேசணும்..... பீடி குடிக்கற வயசா உனக்கு?''

''நா சம்பாதிக்கிறேன்.. நா பீடி குடிக்கறேன், உங்களுக்கு என்ன? இவருக்கென்ன?''

துரைக்குப் பொட்டில் அடித்தது போலிருந்தது.

''என்னலே சொன்ன...''

''நாந்தானே சம்பாதிக்கிறேன்... அந்தத் துட்டுல முக்காவாசி ஒனக்குச் சாராயங் குடிக்கவும் ஆத்தாவுக்குக் கஞ்சி காச்சவும் தாரேன்... மிச்சத்துல நா எந்தச் சினிமா பாத்தா என்ன? எத்தன பீடி குடிச்சா என்ன?''

''அப்ப நா ஒன்னக் கேக்கக் கூடாதாக்கும்....''

''நீ யாரு என்னக் கேக்கங்கறேன்...''

''பெத்தவன் கேக்காம மத்தவனா கேப்பான்...''

''பெத்துட்டா மட்டும் ஆச்சா? வளக்க வேணாம்?'' எகத்தாளமாகக் கேட்டான் வேலுச்சாமி.

''வளக்காம நீ எப்படி வளந்திருக்க?''

''நானா வளந்தேன்... நீ என்னய ஆஸ்பத்திரிக்கிக் கூட்டிட்டுப் போயிருக்கியா? டவுசரு சட்ட வாங்கித் தந்திருக்கியா? பள்ளிக்கொடத்துல சேத்தியா? படிக்கேங்கற தங்கச்சிய அடிச்சுப் போட்டு தீப்பட்டியாபீசுக்கு வேலைக்கனுப்பப் பாக்கற... நானும் தீப்பட்டியாபீசுல வேல பாக்கேன்... வீட்டுல ஆத்தாவும் தீப்பட்டி ஒட்டுறா..... நீ பேருக்குக் கூலி வேலைக்குப் போறதா பாவலாக் காட்டிக்கிட்டு, சாராயம் குடிச்சிக்கிட்டு அலயற... நீ யாரு என்னய அடிக்கங்கறேன்...''

பொறி தட்டத் திண்ணையில் அமர்ந்தான் துரை. அது இப்ராகிம் வீடு. நல்ல வேளை... வீட்டில் யாருமில்லை.

வேலுச்சாமி எழுந்து கொண்டான். இப்ராகிம் செய்வதறியாது சுவரில் சாய்ந்து நின்றான்.

''பீடி குடிச்சா ஒடம்புக்குக் கெடுதல்லே, நாந்தான் கெட்டுப் போயிட்டேன்னா நீயும் அப்படியாகணுமா? சொல்றதக் கேளுலே.... அதவிட்டுரு....''

''முடியாது'' அழுத்தமாகச் சொன்னான் துரை. ''நாள் பூரா வேல பாக்கேன்... பீடியில்லாட்டா மண்டையிடி வருது....''

''ஒன் வயசுக்கு இந்த மாதிரி அசிங்கச் சினிமாவுக்குப் போகலாமா? நானே ஒங்கய்யன விளயாட்டாத்தான் கூட்டிட்டுப் போனேன்.''



புரட்சிக் கவிதை

பாரதியார் சென்னையில் வாழ்ந்த காலம் அவரது திருவல்லிக்கேணி வீட்டுக்கு அவரைத் தேடி ஒரு திடீர் விருந்தாளி வந்தார்.

அழுக்குப் படிந்த உடை. ஆத்திரம் படிந்த முகம். ஆம் அவர் ஆங்கிலேயப் போலீசாரால் தேச விரோதக் குற்றம் சாட்டித் தேடப்பட்டு வரும் ஒரு குற்றவாளி.

அவர்தான் நீலகண்ட பிரம்மச்சாரி.

அவர் பாரதியைப் பார்த்ததும் படபடப்பாகப் பேசினார் :

''பாரதி, இந்த பாரத விடுதலையை நேசிக்கும் தேச பக்தர்களான நாம் தினமும் இந்த நாட்டில் செத்துப் பிழைக்க வேண்டியிருக்கிறது, பார்த்தீர்களா! அதே சமயம் வெள்ளைக்காரன் பாத கமலங்களைப் பூஜிப்பவன் பன்னீரில் குளித்துப் பழரசத்திலே களிக்கிறான். இது கொடுமை, பாரதி! மிகக் கொடுமை! அந்நியருக்கு வால் பிடித்து அம்சதூளிகா மஞ்சத்தில் புரளுகிற அயோக்கியர்கள் சிலரையாவது சுட்டுப் பொசுக்க வேண்டும் என்று ஒரு தீர்மானத்தோடுதான் இன்று இங்கே வந்திருக்கிறேன்!'' என்ற நீலகண்ட பிரம்மச்சாரி, மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியையும் எடுத்துக் காட்டினார்.

பாரதி சற்று நேரம் நீலகண்ட பிரம்மச்சாரியின் கண்களைக் கூர்ந்து கவனித்தார். அவருக்கு என்னவோ தோன்றியது.

''கொஞ்சம் இருங்கள்'' என்று உள் வீட்டுக்கு ஓடி அங்கே இங்கே துழாவி, கிடைத்த சில்லறையைப் பொறுக்கிக் கொண்டு வந்து, ஓட்டலிலே நீலகண்ட பிரம்மச்சாரியைச் சாப்பிடச் செய்தார்.

அதன் பின்னே அவரிடம் சற்று அமைதி ஏற்பட்டதைப் பாரதி கண்டார். அது பாரதியின் சிந்தனையை ஆழமாக்கியது.

'ஓ! பசி எவ்வளவு கொடியது! மிகச் சிறந்த பண்பாளர்களையும், மேதைகளையும் கூட அது அழிவு உணர்ச்சிக்குத் தூண்டி விடுகிறதே' என்று எண்ணினார் பாரதி.

உடனே, ''தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்ற புரட்சிக் கவிதை அவரிடமிருந்து தோன்றியது!

- ''அறிஞர்கள் வாழ்விலே'' புத்தகத்திலிருந்து - டி. கே. சுப்பிரமணியன்.

இந்த இடத்தில் மட்டும் குற்றத்தை ஏற்றுக் கொள்ளும் முகமாகத் தலைகுனிந்து கொண்டான்.

''பேசேன்ல... கேக்காருல்ல?'' மெது வாக அதட்டினான் துரை.

''கூட வேலபாக்க பசங்கள்லாம் கூப் டாங்க...''

''கூப்டா.... போறதா? சீக்கிரம் கெட்டுக் குட்டிச் சுவராப் போயிருவ....'' கொதித்தான் துரை. இயலாமை அவன் உடலை நடுங்க வைத்தது.

''கெட்டுப் போன பசங்கதானே தீப்பட்டி ஆபீஸ்ல எங்கூட வேல பாக் காங்கெ... நல்ல வீட்டுப் புள்ளங்கள்லாம் பள்ளிக்கொடம் போயிருதுக....''

'நல்ல வீட்டு புள்ளங்க', என்ற பதம் துரையை மேலும் திடுக்கிட வைத்தது. வேலுச்சாமியை நிமிர்ந்து பார்க்க முயன் றான் துரை. முடியாதது மாதிரி குனிந்து கொண்டான். ஏனோ, வேலுச்சாமி முகமும் குனிந்து இருந்தது.

''வீட்டுக்குப் போலே.. பெறகு வாரேன்...''

''இளம்பியவன் நின்று திரும்பித் தந்தையைப் பார்த்தான்....

''எங்க... சாராயக் கடைக்கா?''

''ஏங்கேக்க? பெரிய மனுஷ னாயிட்டயோ... போலே நாயி....''

''இல்ல... நீ திரும்பவும் சாராயக் கடைக்குக் குடிக்கப் போனா... உன்ட்ட நா பேசினது பூரா வேஸ்ட்டாப்போயிரும்..... அப்புறம், நீயும் உருப்படாம, நாங்களும் இப்படியே போயிர வேண்டியதுதான்...'' கடைசி அம்பையும் எறிந்துவிட்டுப் போனான் வேலுச்சாமி.

துரை எழுந்திருக்க முயன்றபோது விழப்பார்த்தான்... இப்ராகிம் தாங்கிக் கொண்டான். துரையால் இப்ராகிமைப் பார்க்க இயலவில்லை. சாதாரண மானிட உணர்ச்சிகளே இப்போதுதான் தனக்கு வருவது போல உணர்ந்தான். அந்த வெப் பத்தை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. எங்கேயோ ஏதோ ஒரு பெரிய தவறு....

''துரை....''

''என்ன பாய்?''

''நான் சொல்றனேன்னு தப்பா நெனைக் காத....'' தயங்கினான் இப்ராகிம்.

''சொல்லு....'' கொஞ்சமாய்ப் பயந்து சொன்னான் துரை.

''வேலுச்சாமி எப்படிப் பேசுதான் பாத்தியா?''

''ம்... அதானே? யார் இவனுக்கு இப்படி பேசக் கத்துக் குடுத்தா?''

''நீதான் துரை....''

''பாய்... என்ன விளயாடுறியா?''

''யோசிச்சுப் பாத்தா உனக்கே புரியும். சலீமாவோ, அன்வரோ இப்படிப் பேசுங் களா?''

''அதுக்கென்ன?''

''அதுக்கொன்னுமில்ல. அவங்கள நா படிக்க வக்கறதுனால எம்மேல அதுகளுக்கு ஒரு மரியாத இருக்கும். நான்தான் இஸ்கூல் பீஸ் கட்டணும். யூனிபாம் துணி எடுக்கணும்....''

''ம்......''

''இவன் ஒன்ட்ட எதுக்காக இப்படியெல்லாம் வந்து நிக்கப் போறான்? இப்ப பீடி குடிக்கவும், மட்டன் புரோட்டா திங்கவும், எட்ரை ஷோ பாக்கவும், சம்பா திக்கறான்... அந்தத் திமிர்ல நிமிந்து பேசறான்... இன்னிக்கிப் பேசுதான்.. சரி... நாளைக்கி....''

''ஆமா... பாய்.....''

''சலீமாவும் அன்வருங்கூட இஸ்கூல் விட்டு வந்தோன்ன பானுவோட சேந்து தீப்பட்டியெல்லாம் ஒட்டி, ஏதோ வீட்டுச் செலவுக்குக் கஷ்டமில்லாம சம்பாதிக்குதுக. அது போதாதா? அதுக்கு மேல பாத்தா அதுகளோட எதிர்காலம் என்னாகும்....''

''சரி... வர்றேன் பாய்.... பாப்போம்....''

''நானும் கூட வரவா துரை?''

''வேணாம்.. இனி நானே நடந்துக்கறேன்'' துரை நடக்க நடக்க ஏனோ ஆறுதலாய் வீட்டிற்குள் நுழைந்தான் இப்ராகிம்.

''**அ**ப்பா நெசமாவா?'' பெரிய கண்களை இன்னும் பெரிதாக்கி அகல விரித்தாள் செண்பகம்.

''ஆமாட்டி.... நீ இஸ்கூலுக்கு போய்ப் படி.... வேலுச்சாமி கூட......''

''அண்ணன் என்னக் கொண்டு போய் விடுமா?'' ஆவலாய்க் கேட்டாள்.

''இல்ல... அவனும் பள்ளிக்கொடத்துல படிக்கப் போறான்... என்னலே?'' என வேலுச்சாமியைப் பார்த்துக் கேட்டான்.

வேலுச்சாமி.... ''அப்ப நா தீப்பட்டி ஆபீசு போகாணாமா?'' என தயங்கிக் கேட் டான்.

''வேணாம்... கணக்கப்பிள்ளைட்ட சொல்லீருக்கேன்... சாயந்தரம் கட்ட அடுக் கறதுக் கூட அனுப்பச் சொல்லீருக்கேன். இஸ்கூலுக்குப் போயிட்டு வந்து கட்ட அடுக்குங்க.... என்ன?''

செண்பகம் சந்தோஷமாய்த் தலை யாட்டினாள். வேலுச்சாமி நம்பமுடியாமல் இருந்தான்...

''என்னலே... உம்முனு இருக்கே?'' என அதட்டினான் துரை.

''சரி....'' என்றான் வேலுச்சாமி.

நடப்பதெதுவும் புரியாமல் பார்த்துக் கொண்டிருந்த ஜெயாவுக்கு, வேலுச்சாமி குரலில் கொஞ்சம் பணிவு கலந்திருப்பதை மட்டும் தெளிவாகக் கவனிக்க முடிந்தது.

சிவகாமியின் சபதம்

மூன்றாம் அத்தியாயம்
உடன்படிக்கை

வாதாபிச் சக்கரவர்த்தியும் பாண்டிய மன்னனும் விரைவில் மனமொத்த சிநேகிதர்களாகி விட்டார்கள். ஜயந்தவர்மன் கொள்ளிடத்து வடகரைக்கு வந்து சிலநாள் தன்னுடைய விருந்தாளியாயிருக்க வேண்டுமென்று புலிகேசி கேட்டுக் கொண்டான்.

அவ்விதமே ஜயந்தவர்மன் தன்னுடைய முக்கிய மந்திரி பிரதானிகளுடன் மறுநாள் கொள்ளிடத்தின் வடகரைக்கு வந்தான். புலிகேசி ஆடம்பர இராஜோபசாரங்களுடன் ஜயந்தவர்மனை வரவேற்றதுடன், தன்னுடைய நால்வகைப் படைகளையும் ஜயந்தவர்மனுக்குக் காட்டி அவன் பிரமிக்கும்படி செய்தான். தடபுடலான விருந்துக்குப் பிறகு, வாதாபியின் வில்லாளிகள், வாள் வீரர்கள், மல்லர்கள் முதலியோர் அந்தப் பேரரசர்களின் முன்னிலையில் தத்தம் திறமைகளைக் காட்டினார்கள்.

பிறகு வாதாபியின் அரண்மனைக் கவிஞர், சந்தர்ப்பத்துக்கேற்பத் தாம் புனைந்திருந்த புகழ்ச்சிக் கவிதைகளைப் பாடினார். கணக்கற்ற வெண் கொற்றக் குடைகளினாலும் வெண்சாமரங்களினாலும் அலையெறியும் திருப்பாற்கடலைப்போல் விளங்கிய வாதாபியின் சேனா சமுத்திரமானது துங்கபத்திரை நதிக்கரையிலிருந்து பொங்கித் தெற்கு நோக்கி வந்தது பற்றியும், அந்தச் சேனா சமுத்திரத்தைத் தூரத்தில் கண்டதுமே காஞ்சி மகேந்திர பல்லவன் நடுநடுங்கிப் போய்த் தனது சிறு குட்டையையொத்த படையுடன் காஞ்சிக் கோட்டைக்குள் ஒளிந்துகொண்டது பற்றியும், பிறகு வாதாபிச் சக்கரவர்த்தி அழகிய கயல் மீன்கள் துள்ளி விளையாடும் காவேரி நதியைக் காண ஆவல்கொண்டு தெற்கு நோக்கி வந்தது பற்றியும், காவேரிக் கரையில் மதுரைப் பாண்டிய மன்னனைச் சந்தித்து அளவளாவி மகிழ்ந்தது பற்றியும், வாதாபியின் யானைகள் காவேரியில் வரிசையாக நின்று பாலம் அமைத்தபோது காவேரியின் நீரோட்டம் தடைப்பட்டு நின்றது பற்றியும், யானைகளின் மதநீர் நதியில் விழுந்ததனால் பிரவாகம் மேலும் பெருகிக் கரைகளை மோதியது பற்றியும் வர்ணித்திருந்த பாடல்களை வாதாபியின் இராஜகவி பாடிய போது, பாண்டியனும் மற்ற சிற்றரசர்களும் மது உண்டவர்களைப் போல் மதிமயங்கி நின்றார்கள்.

எல்லாம் முடிந்து, ஜயந்தவர்ம பாண்டியன் புலிகேசியிடம் விடைபெற வேண்டிய சமயம் வந்தபோது, "சத்யாச்ரயா! பல்லவனை முறியடித்துக் காஞ்சியைக் கைப்பற்றிய பிறகு, அப்படியே தாங்கள் திரும்பிப் போய்விடக் கூடாது. மதுரைக்கும் விஜயம் செய்து விட்டுப்போக வேண்டும்!" என்றான்.

அந்த நாளில் காஞ்சிக்கு அடுத்தபடியாகத் தென்னாட்டில் பிரசித்தமாக விளங்கிய மதுரைமா நகருக்கும் புலிகேசி வந்தால் பாண்டியர்களின் சீர் சிறப்புக்களையெல்லாம் காட்டி அவனைப் பிரமிக்கச் செய்யலாம் என்பது ஜயந்தவர்மனுடைய எண்ணம்.

அதைக் கேட்ட புலிகேசி ஒரு பெருமூச்சு விட்டான். "ஆம், எனக்கு மதுரையையும் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் வெகு காலமாக உண்டு. காஞ்சியைப் பற்றி எழுதிய பிக்ஷு மதுரையைப் பற்றியும் எழுதியிருந்தார். ஆனால்......" என்று புலிகேசி சொல்லி வரும்போதே பாண்டியன் குறுக்கிட்டு, "புத்த பிக்ஷுவைப் பற்றித்

தங்களை நானே கேட்க வேண்டுமென் றிருந்தேன். அவர் எங்கே? தங்களுடன் அவர் இருப்பார் என்றல்லவா எண்ணினேன்?'' என்றான்.

''பிக்ஷுவைப் பற்றித்தானே தகவல் ஒன்றும் தெரியவில்லை! அவரைப் பற்றி நானே தங்களிடம் கேட்க வேண்டும் என்றி ருந்தேன். மதுரைக்கு வந்திருந்தார் அல்லவா? அங்கே என்ன நடந்தது? தங்க ளிடம் என்ன சொல்லிவிட்டுக் கிளம்பி னார்? எங்கே போவதாகச் சொன்னார்?'' என்று வாதாபி மன்னன் வினவினான்.

பிக்ஷு மதுரைக்கு வந்த சமயம் தன் தந்தை காலமானதும் அதனால் ஏற்பட்ட குழப்பத்தில் பிக்ஷு சிறைப்பட்டதும், தனக்கு முடி சூட்டு விழா நடந்த பிறகு பிக்ஷுவைத் தான் விடுதலை செய்ததும் ஆகிய விவரங்களைக் கூறிவிட்டு ஜயந்த வர்மன் மேலும் சொன்னதாவது: ''பிக்ஷு விடுதலையான உடனேயே, வாதாபிச் சைனியம் காஞ்சியை அணுகி விட்டதா என்று அவர் என்னைக் கேட்டார். 'இல்லை! இன்னும் வடபெண்ணைக் கரையிலேதான் இருக்கிறது' என்று நான் தெரிவித்ததும் அவர் பெரிதும் ஆச்சரிய மடைந்தார். என்னைச் சைனியத்துடன் கொள்ளிடக் கரைக்கு வந்திருக்கும்படி சொல்லிவிட்டு, தாம் முன்னாலே போவதாக அவர் கிளம்பினார். பின்னர், தங்களை வந்து அவர் சந்திக்கவே இல்லையா?''

''இல்லை; அதுதான் மிக்க அதிசயமா யிருக்கிறது. அந்த மூடன் துர்விநீதனால் இருவருக்கும் ஏதாவது நேர்ந்து விட்டதோ, என்னமோ? ஒன்றுமே தெரியவில்லை. பிக்ஷு இல்லாதது எனக்கு ஒரு கை இல்லாதது மாதிரி இருக்கிறது'' என்றான் புலிகேசி.

இதற்குப் பாண்டியன், ''ஆமாம்; ஒரு சில நாள் பழக்கத்திலேயே பிக்ஷுவிடம் எனக்கு மிக்க மதிப்பு ஏற்பட்டு விட்டது. ஆனால் இந்தக் கங்க நாட்டான் எதற்காக இப்படி அவசரமாகச் சென்று அகப்பட்டுக் கொண்டான்? பிக்ஷு என்னிடம் சொன்னது ஒன்று, துர்விநீதன் செய்தது வேறொன்றாக வல்லவா இருக்கிறது? ஒரு வேளை மகேந்திர பல்லவன் தப்பி ஓட முயன்றால் நான் கொள்ளிடக் கரையில் நின்று தடுக்க வேண்டுமென்றும் துர்விநீதன் மேற்கு எல்லையில் நின்று தடுக்க ஏற்பாடு செய்திருப்பதாகவும் பிக்ஷு சொன்னார். அப்படி இருக்க, துர்விநீதன் எதற்காக



''ஏம்ப்பா... பல வருஷமா வந்துட்டு இருந்தியே... இப்போ ஏன் எங்க தெருப் பக்கமே காணோம்?''

''என் மூத்த மருமகனுக்கு உங்க ஏரியாவை வரதட்சணையாக் கொடுத் துட்டேங்க...''

- திருத்துறைப்பூண்டி
எஸ். கந்தசாமி.

அவசரப்பட்டுக் காஞ்சியை நெருங்கினான்? அதனால் புள்ளலூரில் ஏதோ பிரமாத வெற்றியடைந்து விட்டதாகப் பல்லவன் பறையடித்துக் கொள்ள இடங்கொடுத்து விட்டானே? அதனாலேயல்லவா பல்லவ நாட்டு மக்களும் சோழ நாட்டுக் குடிகளும் கூட மிக்க கர்வம் கொண்டிருக்கிறார்கள்!'' என்றான்.

''துர்விநீதன் விஷயம் பெரிய மர்ம மாகத்தானிருக்கிறது! அவன் உயிரோடிருக் கிறானா, செத்துப்போய் விட்டானா என்று கூட நிச்சயமாகத் தெரியவில்லை. அவ னைப்பற்றித் தெரிந்தால் பிக்ஷுவைப் பற்றி யும் ஏதாவது விவரம் அறியலாம். ஆனால், இந்தத் தரித்திரம் பிடித்த பல்லவ நாட்டுக் கிராமங்களில் யாரை என்ன கேட்டாலும், 'எங்களுக்கு ஒன்றும் தெரியாது' என்கி றார்கள். ஒவ்வொரு சமயம் எனக்கு வருகிற கோபத்தில், பல்லவரின் ஆட்சிக்கு உட்பட்ட கிராமங்களிலே ஒரு வீடு, ஒரு கூரை மிச்சமில்லாமல் எல்லாவற்றையும் கொளுத்தி பஸ்மீகரம் செய்து விடலாமா என்று தோன்றுகிறது!'' இவ்விதம் புலிகேசி கூறியபோது ஏற்கெனவே கோவைப் பழம்போல் சிவந்திருந்த அவனுடைய கண்களில் அக்னி ஜ்வாலை வீசிற்று.

''ஆமாம், ஆமாம், நானும் எல்லாம் கேள்விப்பட்டேன். ஏரிகளை எல்லாம் உடைத்துவிட்டு இந்த வருஷம் கோடைக்

அமரர் கல்கி

காலத்தில் சாகுபடியே செய்யாமல் பல்லவ நாட்டு மக்கள் இருந்து விட்டார்களாம். எந்தக் கிராமத்துக்குப் போனாலும் பஞ்சப் பாட்டுப் பாடுகிறார்களாம். தானியத்தை ஒளித்து வைத்துக் கொண்டு 'எங்களுக்கே சாப்பாடு இல்லை. பட்டினி கிடக்கிறோம்' என்று முறையிடுகிறார்களாம்! பொல்லாத ஜனங்கள்!'' என்றான் பாண்டியன்.

''அவர்களுடைய பொல்லாத்தனத்தை அடக்க எனக்கு வழி தெரியும். ஒளித்து வைத்திருக்கும் தானியங்களை எடுத்துக் கொடுக்கும்படி செய்யவும் தெரியும். அதெல்லாம் இப்போது வேண்டாம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்.''

''இந்தச் சோழ நாட்டுத் திமிர் பிடித்த மக்களுக்கு நானும் ஒருநாள் பாடம் கற்பிக்க வேண்டும். காஞ்சிக் கோட்டை பிடி படட்டும் என்றுதான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்... இருக்கட்டும்! துர்விநீதனைப் பற்றியல்லவா கேட்டுக் கொண்டிருந்தீர்கள்? என்னுடைய ஒற்றர்கள் ஏதோ சொன்னதாக ஞாபகம் இருக்கிறது. இதோ விசாரிக்கிறேன்'' என்று ஜயந்தவர்மன் கூறித் தன்னுடைய ஒற்றர் படைத் தலைவனை வரவழைத்துக் கேட்டான்.

ஒற்றர் தலைவன் கூறியதாவது: ''நம்முடைய சைனியம் காவேரியைத் தாண்டிக் கொள்ளிடத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது, புள்ளலூர்ச் சண்டையைப் பற்றிய செய்திவந்தது. உடனே சிலரை நான் அனுப்பி நிலைமையை விசாரித்து வரச் செய்தேன். புள்ளலூரில் தோல்வியடைந்து கங்கராஜா தெற்கு நோக்கி ஓடி வந்தாராம்.



அவரை மாமல்லர் துரத்தி வந்தாராம். திருப்பாற்கடல் என்னும் பெரிய ஏரி உடைத்துக் கொண்டு மாமல்லரைத் தடை செய்ததாம். இதனால் கங்கராஜா தென் பெண்ணைக்கு இக்கரை வந்து, பாடலி புரத்துச் சமணர் பள்ளியில் ஒளிந்து கொண் டாராம். பிறகு என்ன நடந்ததென்று தெளி வாகத் தெரியவில்லை. திருக்கோவலூர்க் கோட்டத் தலைவன் சமணப் பள்ளியைத் தாக்கி இடித்துக் கங்க மகாராஜாவைச் சிறைப்பிடித்துக் கொண்டு போனதாகச் சில ஜனங்கள் பேசிக் கொண்டார்களாம். திருக் கோவலூருக்குத் தெற்கேயுள்ள மலைப் பிரதேசத்தில் சிறை வைத்திருப்பதாகவும் வதந்தியாம்.''

பிறகு பேரரசர்கள் இருவரும் கலந் தாலோசித்துப் பின்வரும் திட்டத்தை வகுத்

வாதாபிச் சைனியத்துக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பாண்டியன் அனுப்பிக் கொண்டிருக்க வேண்டியது.

கொள்ளிடத்தில் தண்ணீர் குறைந்ததும் பாண்டியன் தன் சைனியத்துடன் நதியைத் தாண்டி முன்னேறி வந்து தென் பெண்ணை நதி வரையில் கைப்பற்றிக் கொள்ள வேண்டியது. திருக்கோவலூர்க் கோட்டத் தலைவனைப் பிடித்துக் கடுமையாகத் தண் டிப்பதுடன், அங்குள்ள மலைப்பிரதேசத் தில் துர்விநீதன் சிறைப்பட்டிருந்தால், அவனை விடுதலை செய்து அனுப்பி வைக்க வேண்டியது.

இந்த உதவிகளையெல்லாம் பாண்டி யன் செய்வதற்குக் கைம்மாறாகக் குமரி முனையிலிருந்து தென்பெண்ணை வரை உள்ள பிரதேசத்தின் மகா சக்கரவர்த்தியாக



துக் கொண்டார்கள்: புலிகேசி காஞ்சிக்குத் திரும்பிச் சென்று கோட்டை முற்றுகையை இன்னும் தீவிரமாய் நடத்த வேண்டியது. காஞ்சிக் கோட்டை பணிகிற வரையில்

ஜயந்தவர்ம பாண்டிய னைப் புலிகேசி அங்கீ கரிக்க வேண்டியது.

மேற்கண்டவாறு இரு தரப்புக்கும்

திருப்திகரமான உடன் படிக்கையைச் செய்து கொண்ட பிறகு, ஜயந்தவர்ம பாண்டியன் வாதாபிச் சக்கரவர்த்தியிடம் விடை பெற்றுக் கொண்டு பழையபடி கொள்ளிடத்தின் தென்கரை போய்ச் சேர்ந்தான்.

நான்காம் அத்தியாயம்

வேங்கி தூதன்

ஜயந்தவர்மன் போய்விட்ட பிறகு புலிகேசி தன்னுடைய பிரதானிகளைப் பார்த்து, ''யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வரும் என்பது எவ்வளவு உண்மை, பார்த்தீர்களா? அந்தப் பல்லவ நரி கோட்டைக்குள் ஒளிந்து கொள்ளப் போக, இந்தப் பூனைப் பாண்டியனின் தலை ஒரேயடியாக வீங்கிப் போயிருக்கிறது! உத்தராபதத்தின் ஹர்ஷவர்த்தன சக்கர வர்த்திக்கும், மத்தியப் பிரதேசத்தின் வாதாபிச் சக்கரவர்த்திக்கும் இணையாகப் பூனைப் பாண்டியனும் தக்ஷிண தேச சக்கரவர்த்தியாக விளங்க வேண்டுமாம்! ஆசையைப் பாருங்கள், ஆசையை! காஞ்சிக் கோட்டை மட்டும் தகர்ந்து விழட்டும்; பிறகு இந்த அற்பனுக்கும் தக்க புத்தி புகட்டி விட்டு வாதாபிக்குத் திரும்புவோம்'' என்றான்.

இப்படிப் புலிகேசி சொல்லி முடிக்கும் தருவாயில், வேகமாகக் குதிரைகள் நெருங்கி வரும் சத்தம் கேட்டது. காஞ்சி முற்றுகையை நடத்திக் கொண்டிருந்த சளுக்க சேனாபதி அவசரச் செய்தியுடன் தூதர்களை அனுப்பியிருக்கிறார் என்றும், அவர்கள் வேங்கியிலிருந்து வந்த தூதன் ஒருவனையும் அழைத்து வந்திருப்பதாகவும் தெரிந்தது. தாமதமின்றி அவர்களைத் தன் முன்னிலையில் அழைத்து வரும்படி புலிகேசி சொல்ல, சேனாபதி அனுப்பிய தூதர்களின் தலைவனும் வேங்கிநாட்டுத் தூதனும் அழைத்து வரப்பட்டார்கள்.

வேங்கி நாட்டுத் தூதன் தன்னுடைய உடம்பெல்லாம் காயங்களுக்குக் கட்டுப் போட்டுக் கொண்டிருந்தான்.

தூதர்கள் இருவரும் சக்கரவர்த்திக்கு அடிபணிந்து எழுந்த பிறகு, சேனாபதி தூதன், ''பிரபு! இவன் வேங்கியிலிருந்து முக்கியமான செய்தி அடங்கிய ஓலை கொண்டு வந்திருக்கிறான். காஞ்சிக்கு வரும் வழியில் இவனை வழிமறித்துச் சிலர் தடுக்க முயற்சி செய்தார்களாம். அவர்களுடன் சண்டையிட்டுத் தப்பித்துக் கொண்டு வந்தானாம். காஞ்சியிலிருந்து இங்கு வரும் மார்க்கத்தில் இவனுக்கு ஏதும் அபாயம் வரக்கூடாதென்பதற்காகச் சேனாபதி என்னையும் வீரர்கள் எழுவரையும் அனுப்பினார்'' என்றான்.

பிறகு, வேங்கியிலிருந்து வந்த தூதன் தன்னுடைய உடைவாளின் உறையில் பத்திரமாய் வைத்திருந்த ஓலையை எடுத்துப் பயபக்தியுடன் சக்கரவர்த்தியிடம் கொடுத்தான்.

புலிகேசி அதை வாங்கிக் கொண்டதும் சபையில் இருந்த லிகிதனின் முகத்தைப் பார்க்க, அவன் விரைந்து ஓடி வந்து பணிவுடன் ஓலையை வாங்கிப் படிக்கலானான்:

''திரிபுவன சக்கரவர்த்தி சத்யாச்ரய புலிகேசி மகாராஜருக்குச் சகோதரன் விஷ்ணுவர்த்தனன் பக்தியுடன் எழுதும் லிகிதம்.

''தாங்கள் காஞ்சிக்குப் போய்ச் சேர்ந்தபிறகு எவ்விதச் செய்தியும் தங்களிடமிருந்து வரவில்லை. நான் பலமுறை அனுப்பிய ஓலைகளுக்கும் மறுமொழி இல்லை. ஒரு வேளை என் ஓலைகள் தங்களுக்கு வந்து சேரவில்லையோ என்று சந்தேகிக்கிறேன்.

''தங்களுடைய கட்டளைப்படி குரு பூஜ்ய பாதரை வரவழைத்து விமரிசையாக மகுடாபிஷேகம் செய்துகொண்டேன். ஆனால், இன்னும் தொல்லைகள் தீர்ந்தபாடில்லை. வேங்கிப் படைகள் இன்னும் மலைப் பிரதேசங்களில் மறைந்து நின்று தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கின்றன. குடி படைகளும் கறுமுறு என்று இருக்கிறார்கள்.

''இன்னும் ஒரு அதிசயமான விஷயம்! மகேந்திர பல்லவருடைய சிறிய தந்தை மகன் புத்தவர்மன் எங்கிருந்தோ ஒரு பெரிய சைனியத்துடன் முளைத்திருக்கிறான். கிருஷ்ணை நதியின் தென்கரையில் தண்டு இறங்கி நான் தங்களுக்கு உதவி செய்வதற்காகப் புறப்பட்டால் என்னைத் தடுக்கப் போவதாகக் கறுவிக் கொண்டிருக்கிறானாம்.

''வேங்கி யுத்தத்தில் ஏற்பட்ட காயங்களால் நான் அடைந்த தேக அசௌக்யம் இன்னும் தீரவில்லை. நாளுக்கு நாள்

பலஹீனம் அதிகமாகி வருகிறது. குதிரை ஏறக்கூட முடியாதவனாயிருக்கிறேன்.

''இதெல்லாவற்றையும் விட முக்கிய மான விஷயம்: மகேந்திர பல்லவன் கோட்டைக்குள் ஒளிந்து கொள்ளுவதற்கு முன்னால் உத்தராபதச் சக்கரவர்த்திக்கு உதவி கோரி ஓலை அனுப்பினானாம். ஹர்ஷ வர்த்தனர், தாங்கள் காஞ்சியிலும் நான் வேங்கியிலும் அகப்பட்டுக் கொண்டிருக்கும் இச்சமயம் பார்த்து, அசலபுரத்தின் மேலும் வாதாபியின் மேலும் படையெடுக்கத் தீர்மானித்து விட்டதாக வதந்தி உலாவுகிறது. கன்யாகுப்ஜத்திலிருந்து சமீபத்தில் நாகார்ஜுன மலைக்கு வந்த ஒரு யாத்ரிகன் இவ்விதம் சொன்னானாம். அஜந்தா குகைகளையும் சித்திரங்களையும் பார்க்க வேண்டும் என்ற ஆசையினாலேயே ஹர்ஷவர்த்தனர் மேற்படி யோசனை செய்திருப்பதாக வதந்தியாம்.

''இந்த நிலைமையில் அடியேனுக்குத் தாங்கள் என்ன கட்டளையிடுகிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள ஆவலாய்க் காத்திருக்கிறேன். எது எப்படியிருந்தாலும், 'படையுடன் புறப்பட்டு வா' என்று கட்டளையிட்டால், உடனே புறப்படச் சித்தமாயிருக்கிறேன். என் அன்புக்குகந்த தமையனும் தந்தையும் குருவும் அரசனும் உற்ற நண்பனுமான தங்களுடைய வார்த்தையே எனக்குக் கடவுளின் கட்டளையைவிட மேலானது. என் உடல், பொருள் ஆவி யனைத்தையும் தங்களுடைய சேவையில் அர்ப்பணம் செய்ய எந்த க்ஷணமும் சித்தமாயிருக்கிறேன்.

''இன்னும் வெகு காலம் சந்தேகத்திலும் குழப்பத்திலும் என்னை விட்டு வைக்காமல், 'இன்னது செய்' என்று திட்டமாக ஆக்ஞையிடும்படியாக மன்றாடி வேண்டிக் கொள்கிறேன்.''

மேற்படி ஓலையை லிகிதன் படித்து வந்தபோது, ஆரம்பத்திலேயெல்லாம் புலிகேசியினுடைய கண்களிலே அனல் பறந்தது. மந்திரத்துக்குக் கட்டுப்பட்ட நாகப் பாம்புபோல அடிக்கடி பெருமூச்சு விட்டான். ஓலையின் கடைசிப் பகுதியைப் படித்தபோது, அவனுடைய கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருகிற்று. ''என் அருமைத் தம்பி விஷ்ணு வர்த்தனா, உன்னை மறுபடியும் எப்போது காணப் போகிறேன்!'' என்று அலறினான்.

சபையில் வீற்றிருந்த தளபதி பிரதானிகள் முதலியோர் யாரும் அவனுக்கு ஆறுதல் கூற முன்வரவில்லை! தாங்கள் ஏதாவது பேசினால் அதன் காரணமாக என்ன விபரீதம் நேருமோ என்னவோ என்று அனைவரும் கதிகலங்கிக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று புலிகேசி புலம்புவதை நிறுத்திவிட்டு, கண்களைத் துடைத்துக் கொண்டு சிம்ம கர்ஜனைக் குரலில், ''இந்தப் படையெடுப்புக்கு நான் பார்த்துக் கொடுத்த ஜோஸ்யன் யார்? இங்கே நம்முடன் வந்திருக்கிறானா?'' என்று கேட்டான்.

''நம்முடன் வரவில்லை. வாதாபியிலே தான் இருக்கிறான்!'' என்று பிரதானிகளில் ஒருவன் சொன்னான்.

''அப்படியானால் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். வாதாபிக்குப் போனதும் முதற் காரியமாக அந்த ஜோஸ்யனை யானையின் காலால் இடறச் செய்ய வேண்டும்!'' என்றான் புலிகேசி.

அதே சமயத்தில், புலிகேசியின் கோபத்திற்கு இரையாவதற்காகவே கொண்டு வந்ததுபோல் ஒரு மனிதனை மேலெல்லாம் கயிற்றால் பிணைத்து, கூடாரத்துக்குள்ளே கொண்டு வந்தார்கள். புலிகேசி, ''இவன் யார்? இவன் யார்?'' என்று கர்ஜிக்க, காஞ்சியிலிருந்து வந்த தூதர் தலைவன், ''பிரபு! இவன் காஞ்சி ஒற்றன். நாங்கள் வரும்போது வழியிலே இவனைச் சந்தித்தோம். கட்டிப்பிடித்துக் கொண்டு வந்தோம்'' என்றான்.

''ஆஹா! இந்தப் பாழாய்ப்போன பல்லவ ராஜ்யத்தில் ஒற்றர்களைத் தவிர வேறு யாருமே இல்லை போலிருக்கிறது. நல்லது. ஜோஸ்யனுக்குப் பிரதியாக இவனை யானையின் காலால் இடறச் செய்யுங்கள்!'' என்றான் புலிகேசி.

அத்தகைய கடுமையான ஆக்ஞைக்கு உள்ளான மனிதன் நமக்கு ஏற்கெனவே தெரிந்தவன்தான். ஆனால் இப்போது அவன் பழைய முரட்டுப் பட்டிக்காட்டுக் குண்டோதரனாயில்லை. நாகரிகமான உடையணிந்திருந்தான். புலிகேசியின் ஆக்ஞையினால் அவன் அதிக மனக் கலக்கத்துக்கு உள்ளானவனாகத் தோன்றவில்லை!

(தொடரும்)



கே. வி. சுப்பண்ணா

மக்கள் கலைஞருக்கு மாபெரும் விருது

ஹெக்கோடு கிராமம்.

வெளிர் பச்சையும், அடர் பச்சையுமாக வயல் வெளிகள். காற்றில் அலைக்கழிக்கப்படும் நெடிய பாக்கு மரங்கள். மாவும், பலாவும், தேக்குமாக வழி நெடுக மரங்கள், செடிகொடிகள்... இயற்கையே குளுமைப் படுத்தி வைத்திருக்கும் சின்னஞ்சிறு கிராமம்.

கர்நாடக மாநிலத்தின் ஷிமோகாவில் இறங்கி, அங்கிருந்து சாகர் என்னும் சிற்றூரைத் தொட்டு, கரடு முரடான பன்னிரண்டு கிலோ மீட்டர் பாதையில் பயணம் செய்தால் இந்த கிராமத்தை அடையலாம்!



நாடகக் காட்சி

இங்கேதான் இருக்கிறார் கே.வி. சுப்பண்ணா.

செப்டம்பர் முதல் தேதியன்று, பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவில், 'ஏழை நாடுகளின் நோபல் பரிசு' என்று மதிக்கப்படும் ரமோன் மாக்சசே விருது பெற்றவர். பரிசு, இவர் நாற்பது வருடங்களுக்கு மேலாக மரபு நாடகம் எனப்படும் 'தியேட்டர்' இயக்கத்துக்கு ஆற்றி வரும் தொண்டுக்காக. ஆரவாரமோ, ஆர்ப்பாட்டமோ இல்லாமல், இலக்கியத்துக்கும், நாடகத்துக்கும் இவர் அமைதியாகச் செய்து வரும் நிகரற்ற பணிக்காக.

ஜூலை முற்பகுதி வரை ஹெக்கோடு கிராமமும் பிற கிராமங்களைப் போலத்தான் இருந்து வந்திருக்கிறது. மாக்சசே விருது கே.வி. சுப்பண்ணாவுக்கு அறிவிக்கப்பட்ட பிறகு, இந்தக் கிராமம் உலகப் புகழ் பெற்று விட்டது!

ஷிமோகாவில், பஸ் கண்டக்டர் கூட சுப்பண்ணாவைப் பற்றிப் பரவசமாகப் பேசுகிறார்.

''சின்ன உருவம்தான். சாது. ஆனால் ரொம்பப் பெரிய ஆசாமி... சதா வெற்றிலை போட்டுக் கொண்டே பேசுவார்!''

அமைச்சூர் நாடகக் குழுவாக 1949 - ல் உருவான 'நீனசம்', இன்றைக்குப் பிரம்மாண்டமான ஓர் அமைப்பாக வளர்ந்ததற்குக் கா ர ண ம், சுப்பண்ணாவின் உழைப்பு; நம்பிக்கை. இளைஞர்களும், மாணவிகளும் இவருக்குக் கொடுத்த ஒத்துழைப்பு.

கவிதைகளும், நாடகங்களும் எழுதிக் குவித்துக் கொண்டே மரபு நாடக வளர்ச்சிக்கும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார் சுப்பண்ணா. தில்லி நேஷனல் ஸ்கூல் ஆஃப் டிராமாவில் மூன்று ஆண்டுப் பயிற்சி என்றால், கிட்டத்தட்ட அதே பாடத் திட்டத்தில் இங்கே ஒரே ஆண்டுப் பயிற்சி. 80 - துவக்கத்தில் உருவாகிய 'நினசம் தியேட்டர் இன்ஸ்டிட்யூட்', நாடக ஆர்வம் கொண்ட இளைஞர்களுக்கு நவீன நாடகப் பயிற்சிகள் கொடுத்து ஊக்குவிக்கிறது.

கிராமத்தின் பாதையை ஒட்டிப் பெரிதாக எழுந்திருக்கும் நாடக அரங்கம், சகல வசதிகளும், 800 இருக்கைகளும் கொண்டது. (கிராம மொத்த ஜனத் தொகையே 700 தான்!) காலை உடற்பயிற்சிகளும், மாலை ரிகர்சல்களும் இங்கேதான்.

சுப்பண்ணாவுக்குக் கிராமத்து மக்களின் ரசனை மீது அசாத்திய நம்பிக்கை. இல்லை என்றால் சத்யஜித் ரே படங்களையும், குரசோவா படங்களையும், பெர்க்மன் படங்களையும் அவர்களுக்காகத் திரையிட்டு, அவற்றின் நயங்களை எடுத்துச் சொல்லி விளக்குவாரா? ஒரு 16 எம். எம். புரொஜக்டரை வைத்துக் கொண்டு, 1970 - ல் இந்த முயற்சியை 'நினசம்' பிலிம் சொசைடி ஆரம்பித்துக் கிராமம் கிராமமாக, உலகின் உன்னதமான திரைப்படங்களைக் காண்பித்த போது, வருடா வருடம் 75 பேர் திரைப்படக் கலை நுணுக்கம் பற்றிப் பயிற்சி பெற முடிந்தது. பூனா திரைப்படக் கல்லூரியிலிருந்து இதற்காகவே நிபுணர்கள் வந்து, கிராமத்து மக்களிடம் திரைப்படங்களைப் போட்டுக் காண்பித்து விளக்கம் சொன்னார்கள். வருடா வருடம் இந்தத் திரைப்பட விழா தொடர்ந்தது.



◆ மாணவ, மாணவியர்....

மேற்கத்திய ஆங்கில நாடகங்கள், சம்ஸ்கிருத நாடகங்கள், இந்தி நாடகங்கள் தவிர, ஏராளமான கன்னட நாடகங்களை உருவாக்கி அளித்தார் சுப்பண்ணா.

ஸித்தி என்று வட கர்நாடகத்தில் வாழும் பழங்குடியினர், நாடகம் என்றால் என்ன வென்றே அறியாதவர்கள். பழங்குடியினரின் தனித் தன்மை அழிக்கப்பட்டு, காலனி ஆதிக்கத்தில் அவர்களது கலாசாரமே உருக்குலைக்கப்பட்ட அவலத்தை விளக்கும், ஆப்பிரிக்க எழுத்தாளர் சினுவா அச்சபேயின் நாவலை நாடகமாக்கி, ஸித்தி பழங்குடியினரை வைத்தே நடிக்கச் செய்து, கர்நாடக நகரங்களில் நிகழ்ச்சிகள் வழங்கிய போது, இதற்கு முன் நாடக அனுபவம் எதுவுமே இல்லாத பழங்குடியினரா இப்படி

நடிக்கிறார்கள் என்று அனைவரும் வியந்தார்கள்.

மெலிந்த தேகம். வெற்றிலைச் சிவப்புடன் உதடுகள். வெளுத்த குறுந்தாடி. மேலே போர்த்திய சால்வை. துளியும் அலட்டிக் கொள்ளாத தோரணை.

பாக்கும், நெல்லும் பயிராக்கும் விவசாயிதான் சுப்பண்ணா. சாகரிலேயே படித்து, ஷிமோகாவில் பட்டம் பெற்றவர். அப்பட்டமான காந்தியவாதி; சோஷலிஸக் கொள்கையில் ஊறிப் போன மனது....

• ஃபோர்டு பவுண்டேஷன் அளித்த தொகையை எப்படி ஏற்றுக் கொண்டீர்கள்?

ஆரம்பத்தில் இந்த இயக்கத்துக்கு நிதி தேவையாக இருந்தது. அந்நிய நாட்டு உதவிப் பணம் பிரச்னைகளை உருவாக்கும் என்று அறிந்தே ஏற்றுக் கொண்டேன். ஆனால் அவர்கள் எந்த ஒரு நிபந்தனையும் விதிக்கவில்லை. எனக்கும் தர்மசங்கடமாக இல்லாது போயிற்று. அடுத்த முறை அவர்களாகவே மறுபடி நிதி தர முன் வந்த போது, 'போதும்; இனி வேண்டாம்' என்று மறுத்துவிட்டேன்.

• நாடகமும், அதன் நவீன வடிவமும், திரைப்படங்களும் எப்படி கிராமவாசிகளுக்குப் புரியும்?

தியேட்டர் இயக்கமும், திரைப்பட இயக்கமும் எனக்கு என் கிராமவாசிகளுடன் உரையாட ஒரு மொழி. அவ்வளவுதான். இதில் புரிந்து கொள்ள முடியாது என்ற பிரச்னையே எழுவதில்லை.

• படங்கள் ஆங்கிலத்திலும், ஜப்பானிய மொழியிலும், வங்காளியிலும் இருக்கும் போது கூடவா?

திரைப்படத்தில் வரும் உரையாடலை மிகக் குறைந்த ஒலியில் சிறிதாக்கிவிட்டு, ஒலிபெருக்கியின் உதவியோடு கன்னட மொழியில் நான் உரையாடலையும் கலை நுணுக்கங்களையும், நயங்களையும் விளக்கிச் சொல்லுகிறேனே!

• உங்கள் நாடகங்கள் மூலம் நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி என்ன?

நான் இந்த மக்களிடமும், இந்த மக்கள் என்னோடும் உரையாடக் கிடைக்கும் சந்தர்ப்பங்களாகவே என் நாடகங்களைப் பார்க்கிறேன். வெறுமனே செய்திகளைச் சொல்லிக் கொண்டிருந்தால் அவற்றால் பலனில்லை. சமூகம் மாறுகிறது. எப்படி மாறுகிறது? தனி மனித சுபாவங்களின் - மாற்றங்களின் போக்கில்தான், மாறுகிறது. நான் இந்தத் தனிமனிதர்களிடம் உரையாடுகிறேன், என் இலக்கிய நாடகப் பணிகள் மூலம். புதிதாகக் கற்க வேண்டும் என்ற உந்துதலை மக்களிடமும் என்னிடமும் உண்டாக்குகிறது இந்த இயக்கம். இதுவே வளர்ச்சிக்கான மாற்றத்தையும் உண்டாக்குகிறது. ஒவ்வொரு சமுதாயமும் தானாகவே வளர்ச்சியடைந்து, காலூன்றி நிலைத்து நிற்க வேண்டும். காந்திஜியின் சர்வோதயக் கொள்கைதான் இது!

• மாக்சசே விருது மூலம் கிடைக்கும் பரிசுத் தொகையை என்ன செய்யப் போகிறீர்கள்? இதை இன்னும் விரிவுபடுத்துவீர்களா?

இதையே விரிவுபடுத்துவது தேவையற்றது. அது முறையும் அல்ல. இதைப் போல வேறு மாநிலங்களில் அமைப்பை நிறுவி அங்கேயும் சாதனை புரிய முடியுமா என்று பார்க்க வேண்டும். அதுதான் நியாயமானதும் கூட.

சுப்பண்ணா பதிப்பகமும் நடத்தி வருகிறார். 1958 - லிருந்து தலைசிறந்த, உலகப் புகழ்பெற்ற படைப்புகளின் கன்னட மொழிபெயர்ப்புகள், கன்னட இலக்கியங்கள், நாடகங்கள், நாவல்கள், சிறுகதைகள், வரலாறுகள் எல்லாம் வெளியிட்டு வருகிறார், 'அக்ஷர பிரகாஷன்' என்ற பெயரில். சுற்றுச் சூழல், சிறுவர் இலக்கியமும் இதில் உண்டு!

பேட்டி, கட்டுரை : சாருகேசி
வண்ணப்படங்கள் : யோகா

''தலைவருக்கு என்ன கோபம்?''

''நயவஞ்சக அரசியல்வாதிகளை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவோமுன்னு, இவர் மேடையில் பேசும் போது, வீடியோக்காரர், இவர் மேல வெளிச்சம் காட்டினாராம்...!''

- ஆர். வசந்தகுமார்.



''அந்தத் தொண்டரை ஏன் கட்சியிலிருந்து நீக்கச் சொல்றீங்க தலைவரே?''

''நாளைக்கு நாம் நடத்தப் போற போராட்டத்துக்கு என்ன காரணம்னு கேட்கிறான்யா!''

- ஞா. ஞானமுத்து.

பரிசு ரூ. 40,000

கல்கி பொன்விழா நாவல் போட்டி

எழுத்தாளர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கு இணங்க, கல்கி பொன் விழா நாவல் போட்டியின் முடிவு தேதி, அக்டோபர் 31, 1991 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

சரித்திர நாவலுக்குப் பரிசு (சுமார் 52 இதழ்கள்)	ரூ. 20,000/-
சமூக நாவலுக்குப் பரிசு (சுமார் 26 இதழ்கள்)	ரூ. 10,000/-
மர்ம நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/-
விஞ்ஞான நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/-

முடிவு தேதி : அக்டோபர் 31, 1991

O இதற்கடுத்த ஒன்பது மாதங்களில் நாவல்களின் பரிசீலனை முடிந்து, கல்கி பொன் விழாச் சிறப்பிதழில் முடிவு வெளியாகும். பரிசு பெற்ற நாவல்களுள் ஒன்று அதே சிறப்பிதழில் ஆரம்பமாகும். அதாவது 1992 ஆகஸ்டு முதல் வார இதழ்.

O பிரசுரத்துக்கு ஏற்கப்படும் இதர நாவல்களுக்கு வழக்கமான சன்மானம் அளிக்கப்படும்.

O நடுவர் குழு நாவல்களைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய நாவல்களைத் தேர்ந்தெடுக்கும்.

O கல்கி பொன் விழா நாவல் போட்டிக்கு அனுப்பப்படுவதாகத் தெளிவாகக் குறிப்பிடுதல் அவசியம்.

O ஒவ்வொரு வாரமும் படத்துடன் சேர்த்துக் கல்கியில் 4 - 5 பக்கங்களுக்கு மேற்படாதபடி அத்தியாயங்களின் அளவை நிர்ணயிப்பது நல்லது.

O கடிதப் போக்குவரத்து கிடையாது.

O சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

O பிரசுரத்துக்கு ஏற்கப்படாத நாவல்களைத் திரும்பப் பெற போதிய அளவு தபால் தலைகள் இணைக்க வேண்டும்.

O அப்படித் திருப்பி அனுப்பவே அவசியம் நேராதபடி அற்புதமான நாவல்களை எழுதி அனுப்பிக் கல்கி பொன் விழா ஆண்டினைச் சிறப்பிக்குமாறு எழுத்தாளர் பெருமக்களை வேண்டுகிறோம்.

- ஆசிரியர், கல்கி, சென்னை - 600 032.

நேற்றுவரை
நந்தவனம்

22

"அப்பா என்ன சொன்னார் மீரா?" - குமரன் அவளது தோளில் உறங்கும் மகனை, மெள்ள வாங்கிப் படுக்கையில் கிடத்தியபடியே கேட்டான்.

பதில் சொல்ல வாய் திறந்தவள், அறை வாசற் பக்கம் நிழலாடக் கண்டு, திரும்பிப் பார்த்தாள்.

ராஜேஸ்வரி அம்மாள்தான். பெரிய தம்ளரில் ஐஸ் மோர் கொண்டு வந்து மீராவிடம் நீட்டினாள். அவளது முகத்திலும், மீரா என்ன சொல்லப் போகிறாளோ என்கிற பதற்றம் தெரிந்தது.

அப்பா சொன்னதை எல்லாம் சொல்லி, அவர்கள் மனம் தளர்வதை மீரா விரும்பவில்லை.

"என்ன சொல்வார்.. உன்னிஷ்டம். உனக்குத் தெரியாததான்னு சொன்னார். அம்மாதான் பாவம்.. அந்தப் போஸ்டர் விவகாரத்துனாலே கொஞ்சம் பயந்து போயிருக்கா.."

குமரன், ஜன்னல் வழியே தோட்டத்தைப் பார்த்தபடியே சொன்னான்.

"அதுக்காக உண்மையிலேயே நான் ரொம்பவும் வருத்தப்படறேன் மீரா. ஒரு மனுஷன் பொது வாழ்க்கையில ஈடுபட ஆரம்பிச்சவுடனே அவன் வீட்டு நாய்க் குட்டியைப் பத்திக் கூட விமர்சிக்கற உலகம் இது. அதுவும் தரக்குறைவாத்தான் பேசும். அரசியல்வாதிங்கன்னாலே கொலை, கொள்ளைக்கு அஞ்சாதவங்க; பொம்பிளை சகவாசத்துல சீரழிஞ்சவங்கன்னுதான் ஜனங்க சான்றிதழ் தயார் பண்ணி வச்சிருக்காங்க. ஆனா, அவங்களைச் சொல்லியும் குத்தமில்லே. பல அரசியல்வாதிங்க அப்படித்தான் இருக்காங்க. உங்க அம்மா, அப்பாவோட தயக்கம் புரியுது.. இதுவே மறுமணமா - நீ ஒரு டாக்டரையோ, இன்ஜினீயரையோ கல்யாணம் பண்ணிக்கிட்டா உலகம் இவ்வளவு பேசாது.."

மீரா சிரித்தாள்.

"போஸ்டர் என்ன பிரமாதம்... நம்மைப் பத்தி டீ.வி.யில வேணுமானாலும் தொடர்ந்து விளம்பரப்படுத்தட்டுமே.. நான் ரெடி. எங்கம்மாவுக்கு இந்தக் குடும்பத்தைப் பத்தி இன்னும் தெரியாதில்லையா... அதான் இப்படி. போகப் போகச் சரியாயிடும்.."

குமரன், அவளைத் தன் தாய் பார்க்காத போது திரும்பிப் பார்த்தான்.

முகத்தில் கோடி சூரியப் பிரகாசமாய்ப் புன்னகை. ராஜேஸ்வரி, நாசூக்காய் அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

என்னவோ, 'சட்'டென வயது குறைந்து விட்டது போலத் தோன்றியது ராஜேஸ்வரிக்கு.

மறுபடியும் இந்த வீட்டில் சந்தோஷம் துளிர் விட்டிருப்பதே நம்ப முடியாத விஷயமாய் இருந்தது.

உடனே பூஜையறைக்குப் போய், ஒரு ரூபாய்க் காசை எடுத்து மஞ்சள் துணியில் முடிந்து வைத்தாள்.

"இந்தக் கல்யாணம் நல்லபடியா முடியட்டும் தாயே... உனக்குச் சந்தனக் காப்புச் சாத்தறேன்."

"இந்தக் கல்யாணம் நடந்திடுமா என்ன.. அதையும்தான் பார்த்துடறேன். இன்னொருத்தி மட்டும் எங்க அக்கா இருந்த இடத்துல வந்து உட்காரட்டும். உன் மருமகனை, கிழிச்சு, இதோ, இங்கே மாட்டியிருக்கற எங்க அக்கா போட்டோவுக்கு மாலையாப் போடுவேன்."

ரவி, வானத்துக்கும் ஆகாசத்துக்குமாய்க் குதித்தான்.

"அவன் எத்தனை பேரை வேணுமானாலும் கல்யாணம் பண்ணிக்கட்டும். ஆனா, என் பேரன் இளவரசு என்கிட்ட வந்தாகணும். ஆமா.. இப்பவே சொல்லிட்டேன். மாற்றாந் தாய்க் கொடுமை என் குழந்தைக்கு ஏற்படக் கூடாது. என்னங்க, இடிச்சு வச்ச புளி மாதிரி உட்கார்ந்திருக்கீங்களே?"

ரவியின் தந்தை, கன்னத்தில் கை யூன்றியபடி, மகனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவருக்குத் தெரியும், பிள்ளை எதற்காக இப்படிக் குதிக்கிறானென்று..

எல்லாமே பணம் பண்ணுகிற வேலை. மற்றபடி அக்காள் மகனைத் தன்னிடம்

அனுராதா ரமணன்

இருத்தி வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்கிற அக்கறையெல்லாம் எதுவுமில்லை.

போதாக்குறைக்கு ரவி எடுத்திருக்கிற பிஸினஸ் எதுவுமே சரியாக இல்லை. எங்கே... வியாபாரத்தைக் கவனிப்பதை விடவும், காதலியைக் கவனிப்பதற்குத் தானே நேரம் சரியாக இருக்கிறது?

நிர்மலா - தர்மராஜனின் தொடர்பு ஏற்படுவதற்கு முன் நிறையச் சிரமப்பட்டிருக்கிறாள். வீட்டு வாடகைக்கும், மளிகைக்கும் கூடப் பணமில்லாமல் அம்மாவும், பெண்ணும் அலைபாய்ந்திருக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் ரவிதான் அவர்களுக்குக் கண்கண்ட தெய்வம்.

இவனும், கொஞ்சம் கூட அலுத்துக் கொள்ளாமல் கைப் பணத்தை எல்லாம் கொடுத்திருக்கிறான். கையில் பணமில்லாத போது - அக்கா தெய்வநாயகியிடம் கேட்டு வாங்கிக் கொடுப்பான். சில சமயங்களில் வீட்டிலிருந்தே நகைகளைத் திருடியும் கொடுத்திருக்கிறான்.

இளவரசுவுக்குத் தான் பாதுகாப்பாளனாக ஆனால், சொத்துக்கள் இருபது வருஷத்துக்குக் குறையாமல் தன்னிடமே இருக்கும் என்றும் நம்பினான்.

ரவியின் எண்ணத்தில் மண்ணை





ஜோசியர் : ''உங்க காதலுக்கு எதிர்ப்பே இருக்காது. நீங்க தைரியமாக் கல்யாணம் செஞ்சிக்கலாம்...''

''இதை அப்படியே உங்க பொண்ணு கிட்டே சொல்லுங்க மாமா! அவதான் ரொம்பவும் பயப்படறா...''

- செங்குன்றம் ரமேஷ்ராம்.

அள்ளிப் போடுவது போல், குமரன், சட்டப்படி குழந்தை தன்னிடம்தான் இருக்க வேண்டும் என்பதை நிரூபித்து விட்டான்.

அன்றே அவனும் அவன் தாயும் புலம்பினார்கள்; பெற்றவர் கேட்டுக் கொண்டு தெய்வமே என உட்கார்ந்திருந்தார்.

இப்பொழுதும் அப்படியே என்றால்...

ரவி கொதித்துப் போய் விட்டான்.

''அப்பா... உங்க வரையில் பிள்ளை கிட்ட ஒரு பைசாக் கொடுக்கக் கூடாது; அவன் நடுத் தெருவுல நின்னாக் கூடப் பரவாயில்லே. பொண்ணுக்குத்தான் சகல முன்னு சொன்னீங்க. பொறுத்துக்கிட்டேன். அட, வேற யாருக்குப் போறது. நம்ம அக்காவுக்குத்தானேயின்னு 'கம்'முனு இருந்தேன். இப்ப அக்காவும் போயாச்சு. அக்கா குழந்தையையும் அங்கே - அவன் கிட்டேயே அனுப்பி வச்சாச்சு. இப்ப, அவன் ரெண்டாவதா ஒருத்தியக் கல்யாணம் பண்ணிட்டு வரப் போறான். உங்க பொண்ணோட நகை, நர்ஸிங் ஹோம், சொத்தெல்லாம் அவன் அனுபவிக்கப் போறான். திருப்தியா?''

பெரியவர் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தார்.

ரவியைப் பெற்றவள் மனம் குமுறிக் கேட்டாள்.

''கேட்கிறானில்லே? பதில் சொல்லுங்களேன்..''

அவர், 'விருட்'டெனத் தலை நிமிர்ந்தார். முகத்தில் அலாதியான தெளிவு.

''நான் தீர்மானிச்சிட்டேன். என் பிள்ளைய நம்பி, குழந்தையையும், சொத்தையும் விடறதை விட, என் மருமகனை நம்பிக் கொடுக்கறது எவ்வளவோ மேல்!''

''என்னது?''

''ஆமா... தெருத் தெருவா இவன் போஸ்டர் அடிச்சு ஒட்டின போட்டோவை நானும்தான் பார்த்தேன். அன்னிக்கு இவனைத் தேடி வந்ததே, அந்தப் பொண்ணு தானே இது? அப்பவே நினைச்சேன். பொண்ணைப் பார்த்தா - ரொம்பவும் தங்கமானவளா இருக்காளே, நம்ம வீட்டுப் பையனைத் தேடி எங்கே வந்தாள்னு யோசிச்சேன்.. இனம், இனத்தோடதான் சேர்ந்திருக்கு.. பேஷ்...''

ரவி, முன் நெற்றியில் புரண்டு விழுந்த கேசச் சுருளைப் புறங்கையால் ஒதுக்கி விட்டுக் கொண்டு, அம்மாவின் கெஞ்சலையும் புறக்கணித்து விட்டு, 'விருட்'டெனக் கிளம்பினான்.

இம்முறை நேரே அவன், குமரனின் எதிர்க்கட்சி ஆளான சகாதேவனிடம் போய் ஆலோசனை கேட்டான்.

''என்ன.. தஞ்சாவூருக்கு மட்டும் அம்பதாயிரம் போஸ்டர் போட்டிருக்கேன் சார்... அந்தப் பய, இனிமே முக்காடு போட்டுட்டுத்தான் ஓட்டு கேட்கப் போகணும்..''

ரவிக்கு அவன் பேச்சு, எரிச்சலை உண்டுபண்ணியது..

''யோவ், அவன் எலக்ஷன்லே ஜெயிச்சா என்ன.. தோத்தா என்னய்யா? என்னைப் பொறுத்தவரைக்கும் அந்த மனுஷனை இல்லாமப் பண்ணிட்டாக் கூடப் பரவாயில்லே. போஸ்டர் போட்டு நோயூஸ். எந்தப் பொண்ணைப் பத்தி வதந்தி கிளப்பி விட்டோமோ, அந்தப் பொண்ணையே கட்டிக்கப் போறான். முகூர்த்தம் வர்ற மாசம் பத்தாம் தேதி.. கல்யாணத்துக்குக் கட்சித் தலைவர் வர்றாராம்..''

''அந்தச் சமயம் கறுப்புக் கொடி காட்டிடலாம் ரவி சார். நீங்க சும்மா இருங்க..''

''உருப்படியா யோசனை ஏதாவது சொல்லுப்பா.''

ரவி, உள்ளபடிக்கே நொந்து போய் விட்டான்.

சகாதேவனிடமெல்லாம் பேச்சு வைத்துக் கொள்ள வேண்டியுள்ளதை நினைத்தால் அவனுக்கே வெட்கமாகத்தான் இருந்தது. என்ன செய்வது... பணத்துக்கு ஆசைப்பட்டால், எல்லா வேஷமும் போடத்தானே வேண்டியிருக்கிறது?

சகாதேவன் ஒரு சிட்டிகை பொடியை எடுத்து, அகன்ற மூக்கில் கிட்டித்துக் கொண்டு, யோசனையில் ஆழ்ந்தான்.

''சார், இப்படிச் செய்யலாமா?''

''எப்படி?''

''காதைக் கொண்டாங்க இப்படி...''

அவன், ரவியின் காதில் ஏதோ கிசுகிசுத்தான். ரவியின் முகம், ஒரு கணம் வெளிறியது.

''இதுக்கு நிர்மலா ஒத்துக்கணுமே...''

''அட, அது என்ன அப்படிச் சொல்லிட்டீங்க? ஏற்கெனவே, தர்மராஜன் விஷயத்துல சிக்கிக்கிட்ட பொண்ணு தானே?''

''இருந்தாலும் நான் கல்யாணம் செஞ்சுக்கப் போற பொண்ணாச்சே...''

சகாதேவன், ரவியைத் தரையில் கிடக்

கும் புழுவைப் பார்ப்பது போலப் பார்த்தான்.

''சார், உங்க பர்ஸனல் மேட்டர்லே தலையிடறேனேயின்னு நினைக்காதீங்க. என் மனகல பட்டதைச் சொல்றேன். உங்களுக்கு என்ன சார் குறை? அழகில்லையா, படிப்பில்லையா, இல்லே பணம்தான் இல்லையா? நீங்க சரியின்னு சொன்னா, வெள்ளிப் பிஞ்க கணக்காப் பொண்ணுங்களை வச்சிக்கிட்டு, அப்பன்காரங்க கியூ வரிசையில நிற்க மாட்டாங்களா...''

''நிற்பாங்க சகா... ஆனா, நிர்மலாவைக் கட்டிக்கறதுதான் என் லட்சியம்..''

''வெளியில சொல்லாதீங்க சார்.. கேட்கறவங்க வெறுமனே கூடச் சிரிக்க மாட்டாங்க... ஒரு கோடீஸ்வரியக் கல்யாணம் செஞ்சுக்கறது லட்சியம்னு சொல்லுங்க. ஒத்துக்கறேன். இதைப் போயி... தர்மராஜன் விவகாரத்துல சிரிபட்டதுக்கு அப்புறம் இதுகிட்ட என்ன இருக்கு...''

''.........''

''நிசம்மாலுமே அந்தப் பொண்ணுக்கு உங்க மேல பிரியம் இருந்துச்சன்னா நான் இப்பச் சொல்லியிருக்கற விஷயத்தைக் கச்சிதமா முடிக்கச் சொல்லுங்க சார். நானும் அப்பலேயிருந்து பார்க்கறேன். நீங்கதான் அந்தப் பொண்ணுக்காக உருகறீங்களே தவிர, அந்தப் பக்கம் ஒரு பிள்ளைய மட்டும் பெத்து வச்சிட்டுக் 'கம்'முனு இருந்தாப்பல ஆயிடுச்சா.. இப்ப நாம போட்டிருக்கற திட்டத்தை - நிர்மலா முடிச்சுத் தரட்டும்.. தாலியக் கட்டுங்க...''

ரவிக்கு நிர்மலாவின் மீது ஆசைதான். எந்த நிலையிலும் அவளை மணக்க அவன் தயாராக இருக்கிறான்தான். ஆனால், அதை விடவும் முக்கியம் - குமரனின் விஷயம்..

இரண்டு நாட்களுக்கு முன்பே, அவன் - குமரனுக்குப் போன் செய்து கேட்டு விட்டான்.

''குழந்தைய எங்க அம்மா பார்க்கணும்கறாங்க. கொண்டு வந்து விடு..''

''ஸாரி. அவங்களுக்கு வேணுமானா, என் வீட்டுக்கு வந்து பேரனைப் பார்த்திட்டுப் போகச் சொல்லு..''

''பிள்ளையக் காட்டிச் சொத்தை அனுபவிக்கப் பார்க்கறியே.. நீ நல்லா இருப்பியா? எங்க அக்கா உன்னைப் பழி வாங்காம விட மாட்டா. புதுசா வரப் போறவளோட நீ எத்தனை நாள் வாழ்ந்துடறேயின்னு நானும் பார்த்துடறேன்.''

''பாரு.. நல்லாப் பாரு. உன் வீட்டுக்கு என் குழந்தைய அனுப்பினா, சொத்துக்காகக் குழந்தையையே நீ கொன்றாலும் ஆச்சர்யமில்லை..''

வார்த்தைகள் தடித்துப் போய், ஒருவரையொருவர் தீர்த்துக் கட்டி விட்டுத்தான் மறு வேலை என்பது போலச் சபதமும் போட்டார்கள்...

சகாதேவனின் யோசனையைச் செயல்படுத்த, அவன் நிர்மலாவை அழைத்து வைத்துப் பேசினான்.

''நிம்மி... இந்தக் குமரனை ஒழிச்சுக் கட்ட ஒரேவழிதான் இருக்கு. அதுக்கு நீதான் உதவணும்....''

அவள், ஒன்றும் புரியாமல் ரவியை ஏறிட்டுப் பார்த்தாள்.

(தொடரும்)

குவிஸ் டைம்

காவிரியைப் பற்றிய இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்!

1. காவிரியின் மொத்த நீளம் எவ்வளவு?

2. காவிரிக்கு எட்டு உபநதிகள் உண்டு. அவை எவை?

3. முதன் முதலாய்க் காவிரி நீர்ப் பங்கீடு சம்பந்தமாய்ப் போடப்பட்ட ஒப்பந்தம் யார் யாருக்கிடையே, எப்போது கையெழுத்தானது?

4. 1924-ம் ஆண்டு ஒப்பந்தம் மூலம் காவிரியில் கட்டப்பட்ட இரு பெரும் அணைகள் எவை?

5. தமிழ்நாடு, காவிரிப் பிரச்னையை நடுவர் மன்றத்துக்கு விட வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது எந்த வருடம்?



6. 1990 ஜூன் 2-ஆம் தேதி அமைக்கப்பட்ட நடுவர் மன்றத்துக்குத் தலைவர் யார்?

7. இப்போது சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் நடுவர் மன்றத் தீர்ப்பு என்ன?

(விடை தெரியாதவர்கள் பக்கங்களைப் புரட்டுங்கள்)

ஆண்மை

தம்புசாமி படுப்பது குடிசைத் திண்ணையில்தான் எப்போதும். கட்டுக் கடங்காத காற்று மழை திண்ணையை நனைத்தால்தான் எழுந்து உள்ளே போவான்.

இப்போது திடீரென்று காட்டுக் கொல்லைகளில் யானைக் கூட்டம் திரிகிறது என்று பரவியிருக்கிற பீதிக்காக படுக்கையை மாற்றச் சொன்னால் அவனுக்கு என்னவோ மாதிரி இருந்தது.

முதலில் அந்த யோசனையைச் சொன்னது வள்ளி அல்ல. கட்டிய கணவன் எந்த யோசனையைக் கேட்டுக் கொள்வான், கேட்க மாட்டான் என்று திருமணமான ஒரே வருஷத்தில் புரிந்து கொண்டவள் வள்ளி.

சொன்னவன் சொக்கப்பன்.

''ஆனைக் கூட்டம் ராவோட ராவா அம்பிலியப்பன் கம்பங் கொல்லையை சுத்தமா மேஞ்சிட்டுது தம்புசாமி.''

அந்தக் கம்பங்கொல்லை ஊஞ்சால மரத்துக் கானாற்றின் ஓரம் இருந்தது. தம்புசாமி நிலத்திலிருந்து இரண்டு கல் தொலைவு.

வடக்கயிற்றைத் திரித்துக் கொண்டே தம்புசாமி கேட்டான்.

''முந்தா நாள்தானே!''

''ஆமா, யாரு சொன்னது?''

''கேள்விப்பட்டேன்.''

''அப்போ நாராயணவரத்து பெத்தபபுவை ஆம்பளை யானை மெரிச்சிட்டது தெரியுமா?''

''அதுவும் சொன்னாங்க.''

''தெரிஞ்சிக்கிட்டேவா ராத்திரியிலே திண்ணை மேல படுத்திருக்கே?''

''என்ன பண்ணனுங்கறே?''

''உசுரு மேலே பயமிருந்தா உள்ளே போய்ப் படு. ஒனக்காக இல்லே ஒம் பொண்டாட்டிக்காக.''

''கதவைத் தாப்பாள் போட்டுட்டா ஆனைக்கு இந்த அளிஞ்சிமரத்துக் கதவு பெரிய இரும்பு கேட் ஆயிடுமா?''

சொக்கப்பன் துண்டை உதறித் தோளில் போட்டு எழுந்தான்.

''நீ ஒரு விதண்டாவாதம் புடிச்சவன். உன்கிட்டே வந்து சொன்னேன் பாரு.''

பிரி திரித்த கயிற்றை லாவி எடுத்து, மரத்தில் கட்டி முறுக்க எழுந்தான் தம்புசாமி.

உயிருக்கு மரியாதை மரண பீதியா? புரியவில்லை. இந்தக் காற்று. நிலா வெளிச்சம். இரவுகளில் குள்ள நரியும் ஆந்தையும் போடும் ஓலம். மண்ணும் பயிரும் விடுவிக்கும் வாசனை. மரங்களின் சங்கீதம். இத்தனை அனுபவம் திண்ணையில்.

வெட்டிப் போட்ட கட்டைத் துண்டு ஒன்று வெட்டவெளியில் எப்படி இன்னும் இயற்கைக்குச் சொந்மோ அந்த மாதிரி இயற்கைக்கு அருகில் மூடுமறைவின்றிப் படுத்திருக்கிற சொந்தம் சொக்கப்பனுக்குப் புரியவில்லை. அது வெறும் சுகம் இல்லை. மேலே. எதற்கும் மேலே.

பயந்து பயந்து கதவைத் தாள் போட்டு மூடிப் பதுங்கி ஒதுங்கி இருந்தால் மரணத்துக்குத் தப்பித்து விட முடியுமா?

சொன்னால் விதண்டாவாதம். சொல்வதில்லை. தாயின் வயிற்றிலிருந்து வந்து விழுந்ததுமே மண்ணுக்கு உரிமை. அதாவது மண் மேல் நிகழப் போகிற மரணத்துக்கு உரிமை. பயந்து பயந்து தப்பித்து விட முடியுமா?

''மோடாமோடியாப் பேசாதே, மரியாதையாஎழுந்து போய் வூட்டுக்குள்ளே படு.''

இரண்டு மூன்று பேர் சொல்லி விட்டார்கள்.

''ராக்கப்பன் கொல்லையிலே ராத்திரி கன்னங்கரேல்னு நகுந்ததாம். எருமை பூந்துட்டதுன்னு மூங்கில் தடி எடுத்துட்டு ஓடியிருக்கான். பார்த்தா திடுதிடுண்ணு எளுந்து நிக்குதாம் ஆம்பளை யானை.''

மரங்கள் உராயப்பட்ட கதை. குடிசைச் சுவர் யானைத் தொடை தேய்த்து மண் சிறாய்ப்புண்ட கதை. மனக்கிலி ஜோடிக்கிறதா, நிஜமாய் நடக்கிறதா என்று இனம் பிரிக்க முடியாதவாறு காட்டுக் கொல்லை வாசிகளிடையே இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்குமாகக் கதைகள் பறந்தன.

கானாற்றின் போக்கிடம் எங்கும் பரவிய கதைகள். தம்புசாமியின் மனசை ஒன்றே ஒன்றுதான் மிகவும் தைத்தது.

கூட்டத்தைச் சேர்ந்த பெண் யானையை எவனோ ரயில்வே கேட் அருகே சுட்டு வீழ்த்தி விட்டது.

தம்புசாமிக்குச் சொல்லப் பட்ட எல்லாக் கதைகளிலும் தவறாது அங்கம் வகித்தது ஓர் ஆண் யானை. அநேகமாக

ஐவயவன்

அதுதான் கொலையுண்ட பெண் யானையின் இணையாக இருக்க வேண்டும்.

அது தாங்காத வேதனையுற்றிருக்க வேண்டும். எங்கெங்கோ விரட்டியடிக்கப்பட்டு, நீரியும் தண்ணீரும் தேடி மண்ணில் வந்து விழுந்த நாள் முதல் மலை மலைகளாக, வனவனங்களாக தன் விதியைத் தேடிக் கொண்டு அது நடத்தும் யாத்திரையில் இப்போது அது சுமக்கும் சோகம் மிகவும் கனமாகத்தான் இருக்க வேண்டும்.

கூட்டம் என்றுதான் சொல்கிறார்கள். சிறு கூட்டம். ஆறேழு உரு இருக்குமாம். இரண்டு குட்டிகள்.

எங்கிருந்து வந்தன? எங்கே போகின்றன? யாருக்கும் தெரியாது. சமீபத்தில்தான் கூட்டத்தின் முக்கிய உறுப்பினர் சுடப்பட்டிருக்கிறது. முக்கியமான இழப்பு.

ஆண் யானைக்கு என்ன நேர்ந்திருக்கும் என்று புரிந்து கொள்ள முடிந்தது. அதன் வெறுமை, அதற்கு நேர்ந்துள்ள விவரிக்க முடியாத் தனிமை புரிந்தது.

அது எதை வேண்டுமானாலும் செய்யும். எவரை வேண்டுமானாலும் மிதித்துத் துவைத்து சர்வ நாசமாக்கி விடும். அந்தத் தனிமைக்கும் வெறுமைக்கும் பழக்கப்பட்டுத் தன் விதியின் போக்கைப் புரிந்து கொண்டு சாந்தமாகிற வரை அதன் சினம் தணியாது.

வள்ளியிடம் அதைப் பற்றிப் பேசினான்.

''அந்த ஆனை ரொம்பக் கலங்கிட்டிருக்கும் வள்ளி.''


அவள் துவைத்து வந்த புடைவையை உதறிக் காயப் போட்டுக் கொண்டே கேட்டுக் கொண்டாள்.

''பொம்பளை போய்ட்டு ஆம்பளை தனியா நிக்கப்படாது வள்ளி.''

''யார் போயும் யாரும் நிக்கக் கூடாது.'' ஆண் பெண் என்று பெயர் சொல்லாமல் பொதுவாய்ச் சொன்னாள் அவள்.

''இல்லே, பொம்பளை கதை வேற. இந்த ஆனையையே எடுத்துக்க. ஆண் போய் பெண் யானை மிஞ்சினதுன்னு வச்சுக்க. அது இவ்வளவு துக்கப்படாது. குட்டிங்க இருக்கு. கூட்டம் இருக்குன்னு சட்டுன்னு சாந்தமாயிட்டிருக்கும்.''

அவன் யானையை மட்டும் சொல்லவில்லை. அவளுக்குப் புரிந்தது. அவள் மீது



வைத்திருக்கும் காதலும், பந்தமும் இதைக் கூடவா அவளுக்கு விளக்காது?

''ஆம்பளைக்கு ஆம்பளை மனசுதான் புரியும். மத்தது புரியாது.''

வள்ளி விவாதிக்கிறவள் அல்ல. அவளுக்கு விவாதங்களில் நம்பிக்கை இல்லை. குறிப்பாகத் தன் கணவனிடம் மறுக்க வேண்டியதை மறைக்காமல் மறுத்து நிறுத்தி விட்டு, அவள் அனுசரிக்கும் மௌனம், சம்பந்தப்பட்டவர் மனசில் பெரிய விவாதங்களைக் கிளப்பி விடும்.

''அதே மாதிரி பொம்பளைக்கும் பொம்பளை மனசுதான் புரியும்'' என்று எரிச்சலோடு சொன்னான் தம்புசாமி.

''அப்படித்தான் வச்சிக்கயேன்! நீ ஆனை திரியற காட்டிலே குடிசைத் திண்ணை மேலே படுத்துக்கினு கிறது, எனக்கு எவ்ளோ காப்ராவா கீதுன்னு ஒனக்குத் தெரியப் போறதில்லே.''

அக்கம் பக்கம் முழுக்க அஞ்சி நடுங்கும் விஷயத்தில் அவன் காட்டும் அசிரத்தையை இப்படித்தான் அவளால் வெளிப்படுத்த முடிந்தது.

''சரி சரி.. துணியைக் காயப் போட்டுச் சீக்கிரமா வா. பெட்டியிலேர்ந்து வேஷ்டி சர்ட் எடுத்துக் குடுக்கணும்.''

''எங்கே போகப் போறே?''

''வேட்டைக்காரக் கவுண்டர்கிட்டே''

''எதுக்கு?''

''அவரு நாட்டுத் துப்பாக்கி வச்சிருக்காரு. கொஞ்ச நாளைக்கு எரவல் கேட்டு வாங்கிட்டு வரணும்னு.''

''ஆனையைச் சுட்டுறப் போறியா?''

''அட ஆர்றா இவ. ஒண்ணொண்ணையும் இவகிட்ட புட்டுப் புட்டு வெக்கணும் போல கீது!'' என்று அலுத்து விட்டு நடந்தான்.

துப்பாக்கி யானையைச் சுடுவதற்காக இல்லை. வேட்டைக்காரக் கவுண்டரோடு அவன் வேட்டைக்குத் துணையாக எத்தனையோ நாள் போயிருக்கிறான். வள்ளி கழுத்தில் தாலி கட்டும் முன்பு.

திருமணத்திற்குப் பின் அவனுக்குள் என்னென்னவோ நேர்ந்து விட்டது. அவள் பேதைமையின் பின்னணியில் தெரிந்த அறிவில் எந்தெந்தப் பழக்கங்களிலிருந்தோ அவன் தானாக விலகிக் கொண்டான்.

அவனால் இதற்கு முன் வேட்டையாடப்பட்ட மிருகங்களும் பறவைகளும் பிரிந்து விட்ட இணைகளும் மீண்டும் துப்பாக்கியைத் தொட அவனை விடவில்லை.

அன்று இரவு கவுண்டர் துப்பாக்கியில் மருந்தைக் கெட்டித்து வைத்து விட்டு அவன் திண்ணையில் படுத்துக் கொண்டான்.

''அப்ப நீ உள்ளே வர மாட்டே?'' வள்ளி கேட்டாள்.

''தாப்பாளைக் கெட்டியாப் போட்டு வையி'' என்று பதிலளித்தான் தம்புசாமி.

திண்ணையில் துண்டை உதறித் தூசு தட்டி விட்டுப் பக்கத்தில் அவன் நாட்டுத் துப்பாக்கியை வைப்பது உள்ளே பாயில் படுத்த வள்ளிக்குக் கேட்டது.

இரவில் ஏதோ ஒரு நேரத்தில், நரிகளையும் காட்டுக் கோழி அலப்புவதும் அடங்கிய சமயத்தில், குடிசைக்கு வெகு அருகாமையில் செடி கொடிகள் மிதிபடும் ஓசையும் கிளைகள் முறியும் ஒலியும் கேட்டன. திடுதிடுவென்று பெருநடை நடக்கும் காலடியோசைகள் கேட்டு வள்ளி திடுக்கிட்டு விழித்தாள்.

கதவைத் திறக்க வேண்டுமென்று விளக்கைப் பெரிதாக்கினாள். லாந்தர் வெளிச்சம் குடிசைக் கூரை ஓலைகளில் கசிந்து வெளியே தெரிந்தது.

''வள்ளி'' வெளியே படுத்திருந்த தம்பு சாமி குரல் கொடுத்தான்.

''முளிச்சுக்கிட்டுத்தான் இருக்கியா? ஆனை நடமாட்டம் கேக்குதா?''

''கேக்குது. நீ வெளக்கை எறக்கு.''

''கதவைத்திறந்துவிடறேன். நீ உள்ளார வந்துடு.''

''மக்கு.. வாய மூடிட்டுப் படுத்திரு. கொரல் குடுத்தே. ஆனை நம்ப பக்கம் திரும்பிடும்.''

''சுடப் போறியா?''

''ஸ்ஸ்ஸு''

அவன் அதட்டி வாய் மூடு முன் பயங்கரமான பிளிறல் ஓசை கேட்டது. அருகில் பத்தடி தூரத்தில். அந்த ஓசை இருளில் எதையோ துழாவித் துழாவி ஆராய்வது போல் கடந்து போய் எதிர்மலையிலிருந்து எதிரொலி வந்தது.

தம்புசாமி நாட்டுத் துப்பாக்கியை எடுத்தான்.

தற்காப்புக்காக அதை எச்சரித்து விலக்குவதற்காகத்தான் அவன் துப்பாக்கி வாங்கி வந்திருந்தான். அதைத் தோளருகே உயர்த்தும் போது மறு பிளிறல் ஓசை வந்தது.

அருகே நாலடி தூரத்தில் குடிசை ஓரம் நின்ற வேப்பமர நிழலில் இருளோடு இருளாக நின்றது யானை.

இனி சுடுவது மடமை. அதற்கு உயிர் போகும். அல்லது வெறியில் அது தன் மீது பாய்ந்தாலும் பாய்ந்து விடும். குறி தப்பி விட்டால் அதற்கு என்ன கோபம் வரும் என்று சொல்லவே வேண்டாம்.

உயர்த்திய துப்பாக்கியை ஓசையின்றி, அதிக அசைவின்றி அவன் தாழ்த்தினான். திண்ணை ஓரமாக நகர்த்தி ஒதுக்கினான்.

யானை நிற்கிற நிழலுருவம் தெரிந்தது. அது தன்னையே பார்க்கிறதா என்றுதான் தெரியவில்லை.

''நீ உள்ளே வர மாட்டே?'' என்று குடிசைக்குள்ளிருந்து பயத்தோடு வள்ளி கேட்பது காதில் விழுந்தது.

அருள்வாக்கு

கர்மம் செய்கிறவனிடம் பகவான் பிரீதி அடைவானா, பூஜை செய்கிறவனிடம் பிரீதி அடைவானா? ஒரு பிரபுவிடம் இரண்டு வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். ஒருவன் வேலை எதுவும் செய்யாமல், அந்தப் பிரபுவை ஸ்தோத்திரம் செய்து கொண்டே இருக்கிறான். இன்னொருவன் வெகு நேர்த்தியாக வேலை செய்கிறான். என்றாலும் அந்தப் பிரபுவிடம் துளிக்கூட அன்போ, பாசமோ காட்டாமல் வேலையை மட்டும் கவனிக்கிறான். சாதாரணமாகப் பார்ப்பவர்களுக்கு அருகில் நின்று ஸ்தோத்திரம் பண்ணுகிறவன்தான் பிரபுவின் பிரீதிக்குப் பாத்திரமாக முடியும் என்று தோன்றும். பிரபு அசடாக இருந்தால் இப்படியே நடப்பான். ஆனால் அவன் புத்திசாலியாக இருந்தால் கண்ணில் படாமல் வேலை செய்கிறவனிடமே அதிகப் பிரியத்துடன் இருப்பான். ஈசுவரன் அசட்டுப் பிரபு இல்லை. தன்னை ஸ்தோத்திரம், பூஜை செய்கிறான் என்பதால் மட்டும் ஒருவனுக்கு அவன் அநுக்கிரகம் செய்துவிட மாட்டான். தான் விதித்த கர்மங்களைச் செய்கிறவர்களிடமே அதிக பிரீதி கொள்வான். ஆனாலும் அந்தக் கர்ம மார்க்கக்காரன் மனசில் அன்பே இல்லாமல் 'வெட்டு வெட்டு' என்று வேலை மட்டும் செய்தால், அவன் பகவத் பிரீதியின் ஆனந்தத்தைப் பூரணமாக அநுபவிக்க முடியாது. 'இது பகவான் செய்த லோகம். சர்வலோக ராஜாவான பகவானின் குடிமக்களே ஜனங்கள் அத்தனை பேரும். நாமும் அவனுடைய பிரஜை. எனவே, இவர்களெல்லாம் நம்மைச் சேர்ந்தவர்கள்; நம் சகோதரர்கள். ராஜாவாக இருக்கிறதோடு, அவனே நம் அம்மையும் அப்பனும். நாம் அத்தனை பேரும் அவனுடைய குழந்தைகள்;



ஆதலினால் ஒருத்தருக்கொருத்தர் சகோதரர்கள். இத்தனை குழந்தைகளும் இருக்கிற ஜன சமூகக் குடும்பம் ஒற்றுமையாக, சௌஜன்யமாக வாழவேண்டுமென்றே நமக்கு வேத தர்மம் வெவ்வேறு காரியங்களைப் பிரித்துக் கொடுத்திருக்கிறது. அதை நம்முடைய சொந்த ஆசைகள், லாபங்களை நினைக்காமல் செய்து, பகவானின் குடும்பம் ஒழுங்காக நடக்கச் செய்வதே நம் கடமை' என்ற உணர்ச்சி உண்டானால்தான் நாம் செய்கிற கர்மம் துளிக்கூடக் குறைவு, ஒழுங்கீனம் இல்லாமல் சரியாக இருக்கும். இந்த உணர்ச்சி வருகிறபோது, அதிலேயே ஈசுவர பக்தியும் உட்புகுந்து நிற்கும். இப்படி பக்தி உணர்வோடு கர்மம் செய்தாலே பகவத் கிருபையைப் பூரணமாகக் கிரகிக்க முடியும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

அவன் பதிலளிக்கவில்லை. எந்த ஓசையுமின்றி மெதுவாகக் கால் நீட்டித் திண்ணை மீது முதுகைச் சாய்த்துப் படுத்தான். இதயம் பதைக்கிற பதைப்பே அவனைக் காட்டிக் கொடுத்து விடும் போல் அவ்வளவு பயம் தந்தது.

யானை மெதுவாக நகர்ந்து வருவது தெரிந்தது. திம்திம்மென்று பூமி அதிரும் ஓசை கேட்டது. வேப்பமரத்தின் நிழல் மறைவை விட்டு, தும்பிக்கையை வளைத்துப் பெரிய காதுகளை விசிறி விட்டவாறு தலையை ஆட்டிக் கொண்டே அது நெருங்கி வந்தது. பின்னிலவு ஒளியில் அதன் கண்கள் மின்னுவதைக் கூட தம்புசாமி கவனித்தான்.

அப்புறம் சலனமற்றிருக்க வேண்டும் என்பதற்காகக் கண்களை மூடிக் கொண்டான். பயம் ஒரு முறுக்குக் கயிறு போல் தொண்டையையும் மார்பையும் பின்னி இறுக்குவதை அவன் உணர்ந்தான். அதை மீறி அதன் ஊடே ஒன்றும் நடக்காது என்று நம்பிக்கையின் நடுச்சரடு ஓடிற்று.

யானை குடிசையை நெருங்கிற்று.

அதன் முதுகு பட்டுக் கூரை மூங்கில்கள் கலகலத்தன.

திண்ணையில் அவன் படுத்திருப்பதைக் கண்டு அது நின்றதோ என்னவோ! பாம்போ ஒரு கையோ முகத்தின் மீது ஊர்ந்து போவது போல் ஈரமும் மிருதுவுமான ஒரு தசைப் பகுதி தன் முகத்தைத்

தடவிக் கழுத்து வரை நகர்ந்ததை தம்புசாமி உணர்ந்தான்.

அது துதிக்கை. புரிந்தது. அவன் அசைய வில்லை. பயம் தன் உச்சகட்டத்தை எட்டி விளிம்பு தொட்டு விட்டது. இனி ஒன்று மில்லை.

அந்தத் துதிக்கையால் வாரித் தூக்கி எறியப்பட்டு மிதிபட்டாலும் மிதிபடலாம். அல்லது ஒன்றும் நடக்காமலும் போகலாம்.

மரணம் என்பது என்னவென்று புரிந்து கொள்கிற விளிம்பு வந்து விட்டால் பயம் மாண்டு போகிறது.

அவன் துதிக்கையால் உயர்த்தித் தூக்கப்பட்டுக் கீழே தரையில் வீசப்பட்டு, பெரிய கர்டர் ஒன்று தன் மார்பை மிதிக்கப் போகிற அனுபவத்திற்கு மனசைத் தயார்ப் படுத்தினான்.

யானை நின்று கொண்டே இருந்தது. பின்பு என்ன நினைத்ததோ நகர்ந்தது. கதவருகில் நின்றது. அது கதவை முட்டி யிருக்க வேண்டும். கதவின் கீல்கள் கிறீச் சிட்டுப் பிளந்தன. தாழ்ப்பாள் பிய்த்துக் கொண்ட ஒலி கேட்டது.

உள்ளிருந்து வீல் என்று அலறினாள் வள்ளி.

''அட மூடமே!'' என்று மனசில் சபித்துக் கொண்டே துப்பாக்கியைத் தொட் டான் தம்புசாமி.

மீண்டும் இதயம் வெடித்துப் போவது போல் அது பிளிறியது.

குடிசைக்குள் அது நுழைந்தால் சுட்டு விடுவது என்று தீர்க்கமான முடிவுக்கு வந் தான் தம்புசாமி.

ஆனால் யானை உள்ளே நுழைய வில்லை.

அந்த அலறல் ஓசையைக் கேட்பது போல் அது நின்றது. ஓரிரு நிமிடத்தில் அது அவன் குடிசையைக் கடந்து செல்லும் பெரிய காலடியோசைகள் கேட்டன.

மறுநாள். ''உன் குடிசைக்கு ஆனை வந்துதாமே!'' என்று கேட்டவாறு வந்தான் சொக்கப்பன்.

தச்சனை அழைத்துப் பிய்ந்து போன தாழ்ப்பாள் பூட்டைச் சரிசெய்ய வேண்டு மென்று வெளியே கிளம்பிக் கொண்டி ருந்தான் தம்புசாமி.

''என்னமோ கதவைத் தாப்பாப் போட்டு உள்ளே படுத்துக்கச் சொன்னியே, என்ன ஆயிருக்கு பாரு'' என்று கதவைக் காட்டினான்.

சொக்கப்பன் பிய்ந்து போயிருந்த தாழ்ப்பாளையும் கீலையும் மேலும் கீழும் பார்த்தான்.

''ஆமா வேட்டைக்காரக் கவுண்டர் கிட் டேர்ந்து துப்பாக்கி வாங்கி வச்சிருந்தியே.. அதைச் சுட்டுற வேண்டியதுதானே!''

ஒன்றும் சொல்லாமல் சிரித்தான் தம்பு சாமி.

''என்னா சிரிக்கிறியே?''

இருவரையும் மாறி மாறிப் பார்த்து விட்டு வள்ளி குறுக்கிட்டாள்.

''சுட்டிருந்தா அது யார் மேலயாவது திரும்பிட்டிருக்கும் அண்ணா!''

''அட, ஓட்டை வுட்டு நவுந்து போனப் பறமாவது சுட்டுட்டிருக்கக் கூடாது?''

''இவங்க அப்படியெல்லாம் சுட மாட்டாங்க அண்ணா!'' என்றாள்.

சட்டென்று திரும்பி வள்ளியின் கண் களைச் சந்தித்தான் தம்புசாமி.

அவன் தன்னை எவ்வளவு நுட்பமாக உணர்ந்து வைத்திருக்கிறாள் என்று பாராட் டுவது போலிருந்தது அந்தப் பார்வை.

''எத்தினி பேருக்கு எவ்வளவு காபரா! சுட்டிட்டிருக்கணும்மா.''

வள்ளியோ தம்புசாமியோ ஒன்றும் சொல்லவில்லை.

''இனிமேலயும் கூட திண்ணையிலே தான் படுக்கையா?''

''பளகிப் போச்சு சொக்கா, மாத்திக்க முடியாது. ஆனையச் சுட்டுடணும்ங்கறே.. அது என்ன பண்ணுச்சு எங்களை? பேசாம வுட்டுட்டுப் போயிடுச்சு'' என்றான் தம்பு சாமி.

அவனால் ஒன்றைச் சொக்கப்பனிடம் வாய் விட்டுச் சொல்ல முடியவில்லை. இணையை இழந்து விட்டு அலைக்கழிந்து செல்லும் அந்த ஆண் யானையின் தவிப்பு தனக்குள் என்ன வேதனையை ஏற்படுத் தியது என்பதுதான் அது! ஒருவேளை யானை, தனக்கு நேர்ந்தது இந்தத் தம்பதிக்கு நேர்ந்து விடக் கூடாது என்று எண்ணித்தான் பேசாமல் திரும்பிப் போய் விட்டதோ என்று கூட எண்ணியது தம்புசாமியின் மனம்!

''தெரியாமல் லஞ்சம் வாங் கிட்டேன் சார்... என்னை மன்னிச் சிடுங்க, ப்ளீஸ்..''

மானேஜர் : ''எனக்குத் தெரியா மல் வாங்கினதுக்காகத்தானே இந்த மெமோவே...!''

- சீர்காழி வி. ரேவதி.



நேசமணி பேருந்து டிக்கெட்டில் 'ஜெ' படம்?



☛ டிக்கெட்டில் படம்?

○ ஆர். எஸ். கண்ணன், சிதம்பரம்.

? வக்கீல் துரைசாமி குடும்பத்தில் மக ளுக்கோ மகனுக்கோ, ராஜீவுக்கு நேர்ந்தது போல் நேர்ந்திருப்பின் துரைசாமி கொலை யாளிக்கு வாதாட முன்வருவாரா?

! ஜனநாயக நாட்டில் ஒருவன் எப்பேற்பட்ட கொடிய குற்றம் புரிந்திருந்தாலும் அவன் தன் சார்பில் வழக்காட ஒரு வழக்கறிஞரை அமர்த்திக் கொள்ள உரிமை பெற்றிருக் கிறான். அவன் சார்பில் யாரும் வாதாட முன்வராவிட்டால், கோர்ட்டாரே ஒரு வழக் கறிஞரை அவனுக்காக நியமிக்க வேண்டும் என்பது சட்டம். அப்படி வழக்காட வரும் வழக்கறிஞர் தமது ஆற்றலையெல்லாம் திரட்டி அவனுக்காக இயன்ற மட்டில் வாதாட வேண்டியது அவர் கடமை. எனவே ராஜீவ்காந்தி கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்கள் சார்பில் ஒரு வக்கீல் ஆஜராவதிலோ வாதாடுவதிலோ குற்றம் ஏதும் இல்லை. அநீதி ஏதும் நிகழாமல் கவனித்துக் கொள்வது நீதிபதி பொறுப்பு. ஆக, உங்கள் கேள்வி விதண்டாவாத மானது. துரைசாமி குடும்பத்தில் நீங்கள் குறிப்பிடுவது போன்று ஏதும் அசம்பா விதம் நிகழ்ந்திருந்தால் குற்றவாளி சார்பில் துரைசாமி வாதாட மாட்டார்; ஆனால் அந்தக் குற்றவாளி சார்பில் வேறு ஒரு வக்கீல் வழக்காடுவதைத் துரைசாமியால் தடுக்க முடியாது.

○ டி. தாழை பிரபு, குடியாத்தம்.

? 'காவிரி நீர்ப் பிரச்னை தீரும் வரை தாடி எடுக்க மாட்டேன்' என்று சிவாஜி கூறியுள் ளாரே?

! இந்தப் பிரச்னையில் அவரால் முடிந்தது அவ்வளவுதான் போலும்!



☛ ஏற்கத்தக்க கருத்து

○ த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? சமீபத்தில் திகைக்க வைத்த விஷயம்?

! நூறு சதவிகிதக் கல்வியறிவு பெற்ற கோட்டயம் நகரில் ஒரு சேரி கூட இல்லா மல் சுத்தமாக்கிய பி. ஜே. அல்ஃபோன்ஸ், 'பம்பாய் தாராவியைக் கூட இப்படி மாற்ற முடியும்' என்று நம்பிக்கையோடு கூறி யிருப்பது.

○ எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? காவிரி நீர்ப் பிரச்னையில் சுமுகமான தீர்வு ஏற்பட பூம்புகாரிலிருந்து தலைக் காவேரி வரை பாத யாத்திரை செல்லப் போவதாக சுப்பிரமணியம் சுவாமி அறிவித்துள்ளாரே?

! அவருக்கு அவ்வப்போது பேப்பரில் பெயர் வந்து கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் தலை வெடித்து விடும்! அதற்காக ஸ்டண்ட் சுவாமி ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பார். சொல்வது தான் சொல்கிறார், புதுமையாக, தலை கீழாகக் கையால் நடந்து போகப் போவ தாகக் கூறியிருக்கலாம்.

○ டி. பி. உமா, மைசூர்.


? கிருஷ்ணராஜ சாகருக்குக் குண்டு வைப் பதற்காக விடுதலைப் புலிகள் கர்நாடகம் முழுதும் வந்து தங்கியிருப்பது சரியா? இங்கு இருப்பவருக்குத் தமிழர் மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளது. விமோசனம் என்ன?

! விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுகிறவர்கள் சில தமிழர்கள் மட்டும் அல்ல, சில கன்னடிகர்களும் கூட என்று நாளிதழ் செய்திகள் கூறுகின்றன. இதை நன்கு கவனித்தால் இதில் தமிழர் - கன்னடியர் என்ற பிரச்னை எழவில்லை

☛ திரு. வி. க. விருது



☛ ஸ்டண்ட் சுவாமி!



நீங்கள் கேட்டவை - தராசு

என்பது புரியும். ஒன்று விடுதலைப் புலிகளின் பொய்ப் பிரசாரத்தில் மயங்குகிறார்கள்; அல்லது அவர்கள் அள்ளி வீசும் பணத்துக்கு அடிமையாகிறார்கள்; அவ்வளவே. விமோசனம் என்னவென்றால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போலீஸ் நடவடிக்கைகளை எடுப்பதுடன் அவர்களது பிரசாரத்தை முறியடிக்க அரசு எதிர்ப் பிரசாரம் செய்வதுதான். கூடவே இலங்கைத் தமிழர் பிரச்னை சுமுகமாய்த் தீர, இந்திய அரசு இருதரப்பிலும் தனது செல்வாக்கைச் செலுத்தவும் வேண்டும்.

○ லட்சுமி செங்குட்டுவன், வேலூர் (சேலம்)

? 'ஜெயலலிதாவின் முகத்தை உற்றுப் பார்த்தால் அதிலே எம். ஜி. ஆர். முகத்தைக் காணலாம்' என சபாநாயகர் கூறுகிறாரே?

! பசு மாட்டின் கண்ணிலேயே எம். ஜி. ஆரைப் பார்த்தவர்கள்தானே நாம்! சேடப்பட்டியார் ஜெ.வின் முகத்தில் எம். ஜி. ஆரைக் காண்பதில் வியப்பென்ன!

○ மேஜர் தாசன், ஈரோடு.

? இவ் வருடம் திரு.வி.க. விருது ராஜம் கிருஷ்ணனுக்குக் கிடைத்திருப்பது குறித்து?

! அகில உலகச் சிறுகதைப் போட்டியில் கலந்து கொண்ட போது ''ஊசியும் உணர்வும்'' என்ற தமது சிறுகதைக்காக இங்கு பரிசு பெற்று, அக் கதை உலகளாவிய போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பெண் குரலும் வளைக்கரமும் படைத்த லட்சிய எழுத்தாளர் அவர். பெண்மையைப் போற்றிய திரு.வி.க. பெயரால் வழங்கப் படும் பரிசு, முதல் தடவையாக ஒரு பெண்ணுக்குக் கிடைத்திருக்கிறது.

○ ப. இராம் முருகன், சிவகங்கை.

? நேசமணி பேருந்துகளின் டிக்கெட்டில் ஜெயலலிதா படம் அச்சிடப்பட்டுள்ளதாமே?

! இது உண்மையானால் வியப்படைவதற்கில்லை. ஜால்ரா தட்டும் அதிகாரிகள் எங்கும் எப்போதும் உண்டு.

○ சிவ. சீனிவாசன், சென்னை.


? சிவராசன் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டதன் மர்மம்?

! சயனைட் முறிவு மருந்து ஸி. பி. ஐ. இடம் தயாராக இருக்கும் என்று அனுமானித்தது காரணமாக இருக்கலாம்.

○ சத்ய சூர்யா, திருவெண்ணெய்நல்லூர் ✲

? India's Rajiv நிகழ்ச்சியைக் கூட விளம்பரங்களின் பின்னணியில் பார்க்க வேண்டியிருக்கிறதே?

! அது கூடப் பரவாயில்லை; பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் கட்சி அரசியல் பின்னணியில் பார்க்க வேண்டியிருப்பதுதான் சங்கடப்படுத்துகிறது. அரசியலில் அவருடன் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்களைக் கேவலப்படுத்தித்தான் அவரை உயர்த்த வேண்டுமா என்ன!



☛ துப்பாக்கி ஏன்?



☛ அவரால் முடிந்தது...

○ ஜெய் சிராஜ், சீர்காழி.

? 'கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவது நிரூபணமானால் அப் பகுதியின் சப் இன்ஸ்பெக்டர் வேலை நீக்கம் செய்யப்படுவார்' என்று முதல்வர் அறிவித்துள்ளாரே?

! கிராம அதிகாரிகளையும் இதற்குப் பொறுப்பாக்கி இதே தண்டனை விதிப்பதாகக் கூறியுள்ளார். இவ்வளவு சீரிய சிந்தனையை உலகத் தலைவர் வேறு யாரிடமும் காண முடியாது. இதே அடிப்படையில் குமாஸ்தா தவறு செய்தால் அதிகாரி பதவி நீக்கம் செய்யப்படலாம். அதிகாரி தவறு செய்தால் அமைச்சர் பதவி நீக்கம் செய்யப் படலாம். அமைச்சர் தவறு செய்தால் முதல்வர்... ஊஹூம், மூச்!

○ எஸ். நாராயணன், திருப்பாதிரிபுலியூர்.

? பிணைக் கைதியாக இருந்து விடுதலை பெற்ற ஐ. ஓ. ஸி. துரைசாமி, காஷ்மீர்ப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியும் என்கிறாரே?


! பயங்கரவாதிகளுடன் போராடி வெற்றி பெற முயற்சி செய்வதைவிடப் பேச்சு வார்த்தை மூலம் வெற்றி பெற முயல்வது நல்லது என்ற அவர் கருத்து ஏற்கத்தக்கதே. தோளில் துப்பாக்கியைச் சுமந்தாலும் கரத்தைக் கைகுலுக்க நீட்டிப் பார்ப்பதில் தவறில்லை.

○ வி. சோழன், செம்போடை.

? யெல்ட்சினைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! வயிற்றுக்கு உணவை விட உள்ளத்துக்கு விடுதலை உணர்வு முக்கியம் என்ற சூட்சுமத்தைப் புரிந்து கொண்டவர். அதனால் தான் சதி பண்ணிப் பதவிக்கு வந்தவர்கள், 'கார்பசோவ் ஆட்சியில் பஞ்சம், கஷ்டம், உணவில்லை' என்றெல்லாம் பிரசாரம் பண்ணியும் பயனில்லாது போயிற்று. இந்தப் பிரசாரத்தையும் சதித் திட்டத்தையும் மக்கள் ஆதரவுடன் யெல்ட்சினால் முறியடிக்க முடிந்தது.

✲ ரூ. 25 பரிசு பெறுபவர் :
(சத்யசூர்யா)
அம்பிகா தாமோதரன்,
1, சன்னதி வீதி,
திருவெண்ணெய்நல்லூர் - 607 203.



அம்சவல்லி இன்னும் வரவில்லை...

பஸ்கள் ஓடவில்லை. டவுன் பஸ், ரூட் பஸ் எதுவுமே...

திடீர்ப் போராட்டமாம்.

பஸ் வராத அந்த பஸ் ஸ்டாப்பில், ஒரு கல்யாணப் பெண்ணின் தந்தை, சின்னஞ்சிறு அரும்புகளுக்குப் பசியாற்ற வேண்டிய தாய் - இப்படி எத்தனையோ அப்பாவி மனிதர்கள் பஸ்ஸுக்காகத் தவம் கிடந்தார்கள்.

தாம் பிறந்த சொந்த மண்ணிலேயே, அகதிகளைப் போல் தவித்துக் கொண்டிருந்த அப் பரிதாபக் கும்பலில் அம்சவல்லியும் ஒருத்தி.

இங்குள்ள - டவுனிலிருந்து பதினைந்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பேரூராட்சி- கார்மண்ட்ஸ் பாக்டரியில் அவளுக்குத் தையல் வேலை. ஆறு மணி வரை 'ஓவர் டைம்' பார்த்து விட்டு எப்போதும் போல் பஸ் பிடிக்க வந்தவளுக்கு இப்படி ஓர் எதிர்பாராத அதிர்ச்சி.

அதே சமயம், உரிமை கலந்த ஆத்திரமும் அவளுக்கு உண்டாயிற்று.

காரணம் - அவளது அண்ணன், வேதையன். போக்குவரத்துக் கழகத்தில் கண்டக்டராக இருக்கிறான். அத்துடன், தொழிற்சங்கத்திலும் அவன் ஒரு பிரதிநிதி.

அப்பா இல்லை. அம்மா மட்டும்தான். அதனால்தானோ என்னவோ - அப்பாவின் ஸ்தானத்தையும் சேர்த்து அம்சவல்லியிடம் மிகுந்த பாசம் வைத்திருந்தான், வேதையன்.

அத்தனை பிரியத்துக்குரிய தங்கைதான் இப்போது பத்திரமாய் வீடு திரும்ப வழி இல்லாமல் பரிதவித்துக் கொண்டிருந்தாள்.

இவள் மட்டுமா. இப்படி நூற்றுக் கணக்கான தங்கையர்கள் ஸ்டாப்புக்கு ஸ்டாப் நின்று தவித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்படி என்ன தகராறு?

அன்று மாலை ஐந்து மணி இருக்குமாம். டவுன் - பிரதான பகுதி ஒன்றில், மப்டியில் இருந்த இரண்டு கான்ஸ்டபிள்கள் டவுன் பஸ் ஏறி இருக்கிறார்கள். கண்டக்டர் அவர்களை டிக்கெட் வாங்கும்படி சொல்ல, அவர்கள், 'நாங்கள் கான்ஸ்டபிள்ஸ். டிக்கெட் வாங்க மாட்டோம்' என்று மறுக்க, வாக்குவாதம் முற்றி வாய்ச் சண்டையாகி விட்டது. முடிவில், 'யூனிபாரத்தில் வந்தால் தான் அச் சலுகை. சிவில் டிரஸ்ஸில் வந்தால் கிடையாது' என்று விடாப்பிடியாய் அவர்களை இறக்கி விட்டு விட்டார், கண்டக்டர்.

கான்ஸ்டபிள்களுக்கு அது கௌரவப் பிரச்னையாகி விட்டது. விளைவு? ஏழெட்டுப் பேர் சேர்ந்து வந்து கண்டக்டரையும், டிரைவரையும் நையப் புடைத்து விட்டார்கள்.

அதன் எதிரொலிதான் இந்தப் பஸ் நிறுத்தப் போராட்டம்.

மாவட்டத் தலைநகர் ஆனதால், அதற்குப் பரிகாரம் காண வேண்டிய கடமையில் கலெக்டரேட் பரபரப்படைந்தது.

பிரதான அதிகாரிகளையும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் அவசரமாய்க் கூட்டிச் சமரசம் பேசினார், மாவட்ட கலெக்டர்.

மணி ஒன்பது.

தொலை தூரம் போக வேண்டிய கிராமத்துப் பிரயாணிகள் கடை ஓரங்களில் துண்டை விரித்துப் படுத்துக் கொண்டார்கள். பேண்ட் அணிந்த பேர்வழிகள் லாரி, ஸ்கூட்டர்களில் 'லிப்ட்' கேட்டுச் சிதறிப் போய் இருந்தார்கள். நைப்பாசையாலோ அல்லது மாற்று வழி புலப்படாமலோ அங்கே மிச்சப்பட்டவர்கள் ஏழெட்டுப் பிரயாணிகள்தாம். அவர்களில் கொட்டை எழுத்தில் வரும் தலைப்புச் செய்தி மாதிரி பளிச்சென்று தெரிந்தாள் அம்சவல்லி. அழகும், இளமையும் அவளிடம்தானே இருந்தது.

அதுவே அவளுக்குப் பெரும் அச்சத்தைக் கொடுக்க, தன்னுடன் பணிபுரியும் சகதொழிலாளர்ப் பெண்களின் வீட்டுக்

தமிழினியன்



காவது போக நினைத்தாள், அம்சவல்லி. ஆனால், முகவரி தெரியாதே.

குழப்பம் நிறைந்த சங்கடத்துடன் இடப்பக்கம் திரும்பினாள், அவள். மேலும் ஓர் அதிரடி.

கட்டம் போட்ட சட்டையுடன் ஒரு தடியன். சைக்கிள் கடை வாசலில் நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

யார் இவன் ? ஏன், அப்படிப் பார்க்கிறான் ?

ஐந்து நிமிடம் கழிந்தது. மறுபடியும் கவனித்தாள்.

ஊஹூம். அவன் அசையவில்லை. அவனது பார்வை கொக்குக்குக் கண்ணி வைத்தவன் போல் அவளிடமே உறைந்திருந்தது.

'கடவுளே.. இவனிடமிருந்து எப்படியாவது தப்ப வேண்டுமே. யார் உதவிக்கு வருவார்கள். இக்கட்டான இந்த நேரத்தில் யாரைப் போய் உதவி கேட்க முடியும்' தவியாய்த் தவித்தாள், அம்சவல்லி.

அப்போது, ஆட்டோ ஒன்று அவளுக்கு முன்னால் வட்டமடித்து வந்து நின்றது.

''நீங்கள் கார்மண்ட்ஸ் கம்பெனியில் தானே வேலை செய்கிறீர்கள்'' என்று நன்கு தெரிந்தவன் போல் அவளை விசாரித்தான், ஆட்டோவில் இருந்தவன்.

முன்பின் தெரியாத ஒருவனுக்குத் தான் பதில் சொல்லத் தேவை இல்லை என்றுதான் முதலில் நினைத்தாள், அம்சவல்லி. பிறகு என்ன நினைத்தாளோ, ''ஆமாம்'' என்று தலையசைத்தாள்.

''நான் உங்களை ஏழு மணியிலிருந்தே கவ னிக்கிறேன். டவுனில் நடக்கும் பேச்சு வார்த்தை இன்னும் முடியலையாம். அதனால் இனி எந்தப் பஸ்ஸும் வராது. நீங்கள் டவுனுக்குத்தானே போக வேண்டும்.''

''ம்.''

''நானும் இப்போது டவுனுக்குத்தான் போகிறேன். ஆட்டோ கிடைக்காமல் இப்பத்தான் இந்த ஆள் அகப்பட்டான். இஷ்டமிருந்தால் நீங்களும் இந்த ஆட்டோவில் வரலாம்...''

அம்சவல்லி, ''வேண்டாம்'' என்றாள், வீராப்புடன்.

''வேண்டாம் என்றால் சரி. நான் ஒன்னும் உங்களை வற்புறுத்தப் போவ

குவிஸ் டைம் விடைகள் :

1. சுமார் 800 கி. மீ. தமிழகத்தில் 416 கி.மீ.

2. ஹேமாவதி, ஹாரங்கி, லக்ஷ்மண தீர்த்தம், கபினி, ஸ்வர்ணவதி, பவானி, அமராவதி, நொய்யல்.

3. சென்னை அரசாங்கத்துக்கும், மைசூர் தர்பாருக்குமிடையே, 1890-ல் கையெழுத் தானது.

4. மேட்டூர் அணை, கிருஷ்ண ராஜசாகர் அணை.

5. 1970-ல்.

6. நீதிபதி சிட்டதோஷ் முகர்ஜி. பம்பாய் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி.

7. இடைக்கால நிவாரணமாய்க் கர்நாடகம், தமிழகத்துக்கு 205 டி.எம்.சி. தண்ணீர் விட வேண்டும்.

தொகுப்பு : மௌலி

இல்லை. ஆனால்... இன்னும் கொஞ்ச நேரத்தில் கடைகளை எல்லாம் மூடிடுவாங்க. ஒண்டியாளா என்ன பண்ணுவீங்க. உங்களுக்கு என்ன பாதுகாப்பு? அதைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்...'' மிகவும் பவ்யமாகப் பேசினான், அந்த வாலிபன்.

'வேண்டாம்... போகாதே' என்றுதான் அவளது உள்மனம் எச்சரித்தது.

ஆனால், சூழ்நிலை... அவனது பேச்சை நியாயப்படுத்தியதே. தவிர, அந்தக் கட்டைத் தடியன் வேறு அவளைப் பயமுறுத்திக் கொண்டிருந்தான்.

அம்சவல்லிக்கு ஆட்டோவில் ஏறுவதைத் தவிர வேறு வழி இல்லை. மௌனமாய் ஏறி, நனைந்த ஆட்டுக் குட்டி போல் ஓர் ஓரமாய் அமர்ந்து கொண்டாள், அவள்.

ஆட்டோ புறப்பட்டது. ஊர் எல்லையைக் கடந்ததும்,

அவன் திரும்பினான், திருட்டு முழியுடன்.

''உன் பேர் என்ன பொண்ணு.''

அக் கேள்வியிலிருந்த மட்டரகமான தொனி அம்சவல்லியைத் திடுக்கிட வைத்தது.

''அம்... அம்சவல்லி'' என்றாள், தயக்கத்துடன்.

''ஹா... அம்சமான பேரு'' என்று பாராட்டிக் கொண்டே அவளை மேலும் நெருங்கினான், அவன். பெரும் ஆபத்தில் சிக்கிக் கொண்டோம் என்பதை அப்போது தான் உணர்ந்தாள், அம்சவல்லி.

கலெக்டரேட்டின் கான்ஃபரன்ஸ் கூடம் மும்முரமாய் விவாதித்துக் கொண்டிருக்க, தேசப் பிதாவின் பக்கத்திலிருந்த கடிகாரம் பதினொரு முறை அடித்து ஓய்ந்தது.

''அந்த இரண்டு போலீஸ்காரர்களும் யூனிஃபாரத்தில் வந்திருந்தால் பிரச்னையே வந்திருக்காது, சார்'' என்றான், வேதையன்.

''உண்மைதான். ஆனால், சீருடையில் வந்தாலும், சிவில் டிரஸ்ஸில் வந்தாலும் கான்ஸ்டபிள், கான்ஸ்டபிள்தானே'' என்றார் டி.ஐ.ஜி.

''அது கண்டக்டருக்கு எப்படி சார், தெரியும்?''

''சொன்னதை வைத்து நம்பலாமே'' என்றார், கலெக்டர். ''இரவு பகல் பாராமல் நம்மைப் பாதுகாக்கும் அந்த ஊழியர்களை ஐம்பது காசுக்கு நம்பக் கூடாதா. அல்லது நாமேதான் ஐம்பது காசை விட்டுக் கொடுக்கக் கூடாதா?''

''நம்புவது.. விட்டுக் கொடுப்பது எல்லாம் அப்புறம், சார். இப்போது எங்களைத் தாக்கிய அந்தக் கான்ஸ்டபிள்கள் மீது உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். அது முடியுமா... முடியாதா'' என்று மேசை மீது ஓங்கி அடித்துக் கேட்டார், சங்கத் தலைவர்.

''நிச்சயம் முடியும். எடுக்கத்தான் போகிறோம். ஆனால்.. நல்லதோ, கெட்டதோ எதுவாயினும் அந்தந்த நிர்வாகத்தின் விதிமுறைகளை ஆராய்ந்துதான் நடவடிக்கை எடுக்க முடியும். அதற்குத்தான் கொஞ்சம் அவகாசம் கொடுங்கள் என்று உங்களைக் கேட்கிறோம்'' என்று தணிந்த குரலில் பேசினார், கலெக்டர்.

''என்னப்பா, வேதையா. கலெக்டர் சுத்திச் சுத்தி என்னத்தையோ பேசிக் கொண்டிருக்கிறார். நாமும் அதைக் கேட்டுக் கொண்டே இருந்தால் என்ன அர்த்தம். பசி, வயிற்றைக் கிள்ளுது. வீட்டுக்குப் போகலாம்பா'' என்றனர் தொழிலாளர்கள்.

''ஆமாம், சார். நாழியாகி விட்டது. நாளைக்குப் பேசுவோம்'' என்று எழுந்தான், வேதையன். அவனைத் தொடர்ந்து எல்லாரும் எழுந்தனர்.

மணி 11.30.

''அம்சவல்லி'' என்று அழைத்த வண்ணம், வீட்டுக்குள் நுழைந்தான், வேதையன்.

''அம்சவல்லி இன்னும் வரலைப்பா!' அச்சம் நிறைந்த கண்களுடன் மகனை எதிர்கொண்டாள், அவனது தாய்.

''அம்சவல்லி இன்னும் வரலையா... ஏன்?'' பதறினான், அவன்.

''பஸ் ஓடலையாமே.''

அப்போது, வாசலில் ஓர் ஆட்டோ வந்து நின்றது.

''அண்ணா...''

அம்சவல்லியின் குரல். அவள்தான் உள்ளே ஓடி வந்தாள்.

''அம்மா அம்சவல்லி வந்துட்டியாம்மா. நல்லபடியா வந்துட்டியா?'' என்ற பரவசத்துடன் அவளைப் பார்த்தான்.

மறுகணமே திகைத்தான்.

''என்னம்மா, இது. புடைவை கிழிந் திருக்கிறது?''

அம்சவல்லி ஒரு விரக்திச் சிரிப்புடன், நடந்தவற்றை அப்படியே விவரித்தாள்.

''என்னம்மா, இது. எல்லாம் சினிமா போல் இருக்கிறது. யார் அந்த ஆள்? தெய்வம் போல் வந்து உன்னைக் காப் பாற்றிய அந்த தெய்வப்பிறவி எங்கே அம்மா?'' கடைவிழியில் துளித்தக் கண்ணீ ரைத் துடைத்தபடி கேட்டான், வேதையன்.

''அவர், ஆட்டோவில் இருக்கிறார் அண்ணா. அந்த மிருகத்துடன் சண்டை போட்டதில் காலில் அவருக்குப் பலத்த அடி. அவரால் நடந்து வர முடியாது.''

''வாம்மா, பார்க்கலாம்.''

வாசலுக்கு விரைந்தனர் அண்ணனும், தங்கையும்.

''ஐயா, உங்கள் உதவிக்கு என்ன கைம் மாறு செய்வதென்றே எனக்குத் தெரிய வில்லை. என் தங்கையைக் காப்பாற்றிய உங்களை, உயிருள்ள வரை மறக்க மாட் டேன்'' என்று அவன் காலில் விழப் போனான் வேதையன்.

அவனைத் தடுத்து நிறுத்தினான், அவ் வாலிபன்.

''இது என் கடமை, சார். பஸ் ஓடவில்லை என்றால் பொது மக்களுக்குத் திண்டாட்டம். விஷமிகளுக்குக் கொண் டாட்டம். உங்கள் தங்கை தனியே நிற்கிறாள் என்பதை அந்த ராஸ்கல் எப்படியோ மோப்பம் பிடித்து விட்டான். ஏழு மணியி லிருந்து வட்டம் போட ஆரம்பித்து விட் டான். ஆனால், அதெல்லாம் இந்தப் பெண் ணுக்குத் தெரியாது.

''அவன் ஆட்டோவில் உங்கள் தங்கையை ஏற்றிக் கொண்டு புறப்பட்டதும் நான் உஷாரானேன். அந்தச் சமயத்தில்... அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். தெரிந்த டிரைவரின் ஆட்டோ கிடைத்தது. எடுத்துக் கொண்டு அவனைத் தொடர்ந்து போனேன். இல்லாவிட்டால் தக்க தருணத் தில் உங்கள் தங்கையை என்னால் காப் பாற்றி இருக்க முடியாது. எப்படியோ என் கடமை முடிந்தது!'' - திருப்தியுடன் புன்னகை செய்தான் அவன். தன் உடம்பை ஒருகணம் பார்த்து விட்டு, ''காலில் ரத்தம் கொட்டிக் கொண்டே இருக்கிறது. வலியும் தாங்க முடியவில்லை. எலும்பு முறிந் திருக்கும் என்று நினைக்கிறேன். உடனே நான் பெரியாஸ்பத்திரிக்குப் போக வேண்டும். வர்றேன்'' என்று விடை பெற்றுக் கொண்டான்.

ஆட்டோ உறுமிக் கொண்டு புறப் பட்டது.

''ஐயா... யார் நீங்கள்? அதைச் சொல் லாமல் போகிறீர்களே'' என்று கத்தினான், வேதையன்.

''நான் ஒரு கான்ஸ்டபிள், சார். மப்டி யில் இருக்கிறேன்'' என்று பதிலுக்கு அவ னும் கத்திக் கொண்டே போனான்.

''கான்ஸ்டபிளா...'' சுருக்கென்று முள் தைத்ததைப் போல் வாய் பிளந்தான் அவன்.

ஆம். கான்ஸ்டபின்தான்.

இன்று சாயந்திரம் பஸ் கண்டக்டரை அடித்தவரும் ஒரு கான்ஸ்டபிள். அனாதர வாய் நின்ற ஒரு பெண்ணின் மானத்தைக் காப்பாற்றியவரும் ஒரு கான்ஸ்டபிள்.

அந்த கான்ஸ்டபிளின் தவறுக்காக ஓடிக் கொண்டிருந்த பஸ்களை நிறுத்தினால், இந்த கான்ஸ்டபிளின் மகத்தான தியாகத்துக் காக பத்து பஸ்களை அதிகம் விடுங்கள் என்று சொல்ல முடியுமா!

''என்ன அண்ணா.., அப்படியே திகைத்து நின்று விட்டாய்'' என்று உசுப்பி னாள், அம்சவல்லி.

''சீக்கிரம் கலெக்டரைச் சந்திக்க வேண்டும்'' என்று புன்னகை செய்த அண் ணனை, புதிராய்ப் பார்த்தாள் அம்சவல்லி.


ஃபிரிஜ் பரிசு : கூப்பன் நெ : 21

நேற்று வரை நந்தவனம் தொடர் முடியும் போது ஃபிரிஜ் பரிசைத் தட்டிக் கொண்டு போகப் போவது... யார் கண்டது. நீங்களாகவே இருக்கலாம்! இன்னும் சில அத்தியாயங்களே பாக்கி; கவனமாகப் படிக்கவும். வாரா வாரம் நாங்கள் வேண்டுமென்றே அந்தத் தொடர்கதையில் செய்யும் தவறைக் கண்டுபிடித்து இந்தக் கூப்பனைப் பூர்த்தி செய்து வைத்துக் கொள்ளவும். கதை முடிந்ததும் 5 - 10 வரி விமர்சனத்துடன் சேகரித்த கூப்பன்கள் அத்தனையையும் அனுப்பவும். மிக அதிகமான தவறுகளைச் சரியானபடி கண்டுபிடித்தவருக்கு ஃபிரிஜ் பரிசு எனில், வேறு பலருக்கு ஆறுதல் பரிசுகளும் உண்டு. ஒருவருக்கு மேல் மிக அதிகமான தவறுகளைச் சரியாகச் சுட்டிக்காட்டியிருந்தால் குலுக்கலில் ஒருவர் தேர்வு. இந்த வாரம் வேண்டுமென்றே செய்யப்பட்ட...

தவறு : ______________________

திருத்தம் : ______________________

பளீரென்று வெட்டுகிற மின்னல் மாதிரி ஒரு சம்பவத்தை, படிப்பவர்கள் மனத்தில் ஆழமாகப் பதிய வைப்பது ஒருவகைச் சிறுகதை உத்தி. குறைந்தபட்ச பாத்திரங்கள்; ஒரு சிறிய கால அளவுக்குள் நிகழ்ந்த ஒரேயொரு சம்பவத்திலேயே ஒரு செய்தியைச் சொல்லி விடுகிற சொற்சிக்கனம். இந்த வகைச் சிறுகதைகள் இப்போது மிகவும் பிரபலமடைந்து வருகின்றன என்பதை, இந்த ஆண்டு, 'அமரர் கல்கி நினைவுச்




◆ ப. ஜீவானந்தம்

பரிசு பெற்ற சிறுகதைகளுக்கு உருவம் கொடுத்த உள்ளங்கள்

சிறுகதைப் போட்டி'யில் பரிசு பெற்ற நான்கு சிறுகதைகளுமே நன்கு உணர்த்துகின்றன.

முதல் பரிசுக் கதையான 'எல்லைகளில்லா உலகம்' சிறுகதையை எடுத்துக் கொள்ளுங்கள். இரண்டே கதாபாத்திரங்கள்; சாதாரணமாக, இரயில் பிரயாணத்தில் சந்தித்துக் கொள்கிற இருவருக்குள் ஏற்படுகிற சம்பாஷணை - அந்த சம்பாஷணை மூலம் தங்களையறியாமலேயே ஒருவரிடம் ஒருவர் மனம் பறிகொடுத்துக் கொள்கிற அவர்கள், இறுதியில் எங்கே பிரிந்து போய் விடுவார்களோ என்று கதை படிப்பவர்கள் அனைவரையும் துடிதுடிக்க வைக்கிற நடை... இவை அனைத்தும் இருபத்தொன்பதே வயதினரான திரு. எம். குப்புசாமி (எஸ்.அருண்மொழி நங்கை)க்குக் கைவந்த கலையாக இருக்கிறது. அது மட்டுமா? கதையின் முடிவு நெருங்க நெருங்க, அதனை ஒரு ரயில் பெட்டியில் மலரும் சராசரிக் காதல் கதை என்ற நிலையிலிருந்து எங்கோ உயர்த்திக் கொண்டு போய், உலகளாவிய உன்னதத் தத்துவத்தை அல்லவா மிக எளிமையாக விளக்கி விட்டார்!

ஆயினும், 'நான் இதுவரை ஒன்பது சிறுகதைகள்தான் எழுதியிருக்கிறேன்' என்று தமது கதையின் நாயகனைப் போலவே மிகுந்த கூச்சத்தோடு தம்மை அறிமுகப்படுத்திக் கொள்கிறார் குப்புசாமி. அரசு ஊழியரான இவர், பொறியியலில் டிப்ளமாவோடு நின்றிருக்கிறார். ஆனால், இலக்கியத்தில் பிஎச்.டி. செய்பவர்கள் இவரை எதிர்காலத்தில் ஒதுக்கப் போவதில்லை!



◆. எஸ் ரமா

இரண்டாம் பரிசுக் கதையை எழுதிய உமா கல்யாணி வாசகர்களுக்கு ஏற்கெனவே அறிமுகமானவர். ஆசிரியப் பணியில் இன்பம் காண்கிற இவர், 'மானுடப் பண்புகளை மெருகேற்ற உதவுகின்ற படைப்புகளுக்கே முக்கியத்துவம் தருகிறேன்' என்கிறார். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த இவரது எழுத்துக்களில் அந்த மாவட்டத்திற்கே உரிய மண்வாசனை மிளிரும். இதுவரை 488 சிறுகதைகள், மூன்று தொடர்கதைகள் மற்றும் ஏராளமான வானொலி நாடகங்கள், கட்டுரைகள் எழுதியுள்ள இவருக்கும் முதல் பரிசு பெற்ற குப்புசாமி போலவே கூச்ச சுபாவம். தமது புகைப்படம் ஏதும் பிரசுரமாகி விடக் கூடாது என்பதில் இருவருமே கவனமாக இருக்கிறார்கள்.

மூன்றாம் பரிசு பெற்ற இருவருள் ஒருவரான ப. ஜீவானந்தம் தம்மை அறிமுக

எழுத்தாளர் என்று குறிப்பிட்டுக் கொள்ளாததற்குக் காரணம், இவர் எழுதிய சிறுகதைகள் சில பத்திரிகை நிறுவனங்களில் பரிசீலனையில் இருப்பதுதான். ஆனால் கல்கியில் மூன்றாம் பரிசு பெற்றுப் பிரசுரமான 'முதல் தேதி'தான் தமது பிரசுரமான முதல் சிறுகதை என்கிறார். அதில் நடுத்தரக் குடும்பத் தம்பதியின் வாழ்க்கைப் பிரச்னைகளை எத்தனை தத்ரூபமாகக் காட்டி விட்டார்! முப்பத்திரண்டே வயதான இந்த இளைஞருக்கு எப்பேர்ப்பட்ட பிரச்னைகளையும் அன்பு வென்று விடும் என்பது தெரிந்திருக்கிறது. வேளாண்மையில் பி. எஸ்ஸி. பட்டம் பெற்ற இவர், கர்நாடக மாநிலத்திலுள்ள சிண்டிகேட் வங்கியொன்றில் ஊரகவளர்ச்சி அலுவலராகப் பணியாற்றுகிறார். இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையான இவரது சொந்த ஊர் பாண்டிச்சேரி.

நடுவர்கள் கூடுதலாக அறிவித்த மற்றொரு மூன்றாவது பரிசைப் பெற்ற செல்வி எஸ். ரமா, அண்மையில்தான் எம். ஏ. (ஆங்கில இலக்கியம்) முடித்திருக்கிறார். மதுரையைச் சேர்ந்த இவர், கல்லூரி இதழ்களில் ஆங்கிலக் கவிதைகள் எழுதியிருந்தாலும் 'பிரணவ மந்திரம்'தான் இவரது முதல் சிறுகதை. ஆனாலும் இவரது எழுத்தில் ஒரு முதிர்ச்சி இருக்கிறது. தாம் சொல்ல வந்த விஷயத்தைப் பட்டென்று தேங்காய் உடைக்கிற மாதிரி போட்டு உடைக்காமல், வாசகர்களின் புரிந்து கொள்ளும் திறனுக்கு வேலை கொடுக்கிற மாதிரிப் பூடகமாகச் சொல்வது, அத்தனை சுலபமான காரியமல்ல. அது இவருக்கு இலகுவாக இருக்கிறது!

'இயந்திரமாக மாறிக் கொண்டிருக்கும் சமுதாயத்தில், உணர்வுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்த வேண்டும் என்கிற எனது எண்ணமே என்னை எழுதத் தூண்டியது' என்று சொல்லும் இவர், நிச்சயம் தமது குறிக்கோளை அடைவார் என்பதில் ஐயமில்லை.

பரிசு பெற்ற நால்வருக்கும் மற்றும் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டு போட்டியைச் சிறப்பித்த அனைவருக்கும் கல்கி தனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறது.

- எஸ். ஐ.

வட்டமேஜை

சாதனை மலரென்று தலைப்புத் தந்திருக்கலாம்!

◆ பலதரப்பட்ட தில்லு முல்லுகளை எல்லாம் சரிக்கட்ட, வெகு சுலபமாக மக்கள் தலையில் வரிகளைச் சுமத்தி வேடிக்கை பார்க்கும் மத்திய அரசின், இரட்டை வேடப் போக்கைத் தலையங்கத்தில் தோலுரித்துக் காட்டிய விதம் மிக அருமை!
கும்பகோணம்,
எஸ்.கே. மூர்த்தி.

◆ இவ்வார 'கல்கி'க்குச் சாதனை மலரென்று தலைப்புத் தந்திருந்தால் மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும்! லண்டனிலிருந்து மீண்டுவந்த நடராஜர் சிலை! எட்டாத உயரத்தை எட்டிப் பிடித்த விஞ்ஞானத்தின் வளர்ச்சியான 'ரத்தம் சிந்தாமல் ஓர் அறுவைச் சிகிச்சை'. எரிதழலை எதிர்த்துப் போராடும் அகிலன்! அநியாய அரசியல் வாதிகளிலிருந்து அடியுடன் மாறி நிற்கும் நிதி மந்திரி மன்மோகன் சிங்! தாய்ப் பாசத்துடன் மொட்டை மாடியில் காய்கறி பயிர் செய்யும் அதிசயப் பெண், ரோஹிணி! 'நான் ராயபுரத்துக்கு மட்டும் மந்திரியல்ல' என்று மக்களுக்கு உழைக்கும், அமைச்சர் - 'ஜெ'க்குமார்! எரிபொருள் சிக்கனத்தை அறிவுறுத்தப் பல இன்னல்களிடையே சைக்கிளில் சுற்றிச் சாதனை புரிந்த விஸ்வநாதன்! அடேயப்பா! எல்லாமே சாதனை விஷயங்கள்!
சிதம்பரம் - 1,
எஸ். பாலசாகுல்.

◆ அசைவ உணவினால் ஆபத்துக்கள் நிறைய உருவாகும் வாய்ப்புகள் இருப்பதாகப் பல அறிவியல் உண்மைகள் கூறும் பொழுது, அசைவ உணவை உண்ணும்படி யோசனை நல்கும் அமைச்சரின் கருத்து ஏற்றுக் கொள்ள இயலாதவை. ஆடு, மாடுகளை உணவுக்காகப் பெருக்குவதால் கிராமப் பொருளாதாரம் உயரும் என்பதை விட, உயிர்களை மாய்க்காமல் வேறு விதங்களிலும் கால் நடைகளை உபயோகப்படுத்திப் பொருளாதார உயர்வு காணமுடியும்.
சென்னை - 33, வி.எஸ். வாசன்.

◆ தினசரி 18 கி.மீ. சைக்கிளில் அலுவலகம் சென்று எரிபொருள் சேமிக்கும் இளைஞர் விஸ்வநாதன் பற்றிய கட்டுரை வெளியான அன்றே பர்கூரில் ஆயிரம் கார் அணிவகுப்புச் செய்தியும் வெளியானது. எப்படி இருக்கு!
ஈரோடு,
சி. நாச்சிமுத்து.

◆ ஜெ. சாணக்கியத்தில் தேறிவிடுவார் என்று கூறியது அபாரமான கணிப்பே! அதோடு கணக்கில் பெயிலானாலும் பரவாயில்லை என்று கூறியிருப்பது வியக்க வைத்தது. மொத்தத்தில் இந்த பதில் ஒரிஜினல் தராக அளித்ததுதானா என்று சந்தேகிக்கும் அளவுக்கு இருந்தது.
கொணவட்டம்,
கே.ஆர். தேவேந்திரன்.

◆ ஏற்கெனவே தமிழ் நாடு காங்கிரஸ் கோஷ்டிப் பூசல்களால் எரிந்து கொண்டு இருக்கிறது. இது போதாது என்று ஏன் தான் நீங்கள் 'ஜுகல் பந்தி' அது, இது என்று எரியும் நெருப்பில் இன்னும் 'பெட்ரோல்' விடுகிறீர்களோ? (!)
பொள்ளாச்சி - 2, ஏ.சி. பிரபு.

◆ ஒரு தொழிற்சாலை அமைக்க முடியாவிட்டாலும், வீட்டிற்கு ஒரு தோட்டம் அமைத்து, நம் பொருளாதாரத் தேவைகளைச் சீர் செய்து கொள்வதுடன், ஊட்டமிக்க காய்கறிகளையும் நாம் பெற்றிட, ரோஹிணி அவர்கள் நல்லதோர் வழிகாட்டுகிறார்.
கும்பகோணம்,
ஆர். ராகவன்.

◆ 'நிதி அமைச்சரின் கையில் நாட்டின் விதி' என்ற தலைப்பில் வெளியாகியிருந்த மன்மோகன் சிங் பற்றிய கட்டுரையில் 'ரூபாயின் மதிப்பைக் குறைத்தாலும் இவரின் தேச பக்தியையோ நாணயத்தையோ சந்தேகிப்பவர் யாருமில்லை' என்ற வரிகள் என்னை மிகவும் கவர்ந்தன.
மொரட்டுப்பாளையம்,
ப. மாரியப்பன்.

◆ 'அர்ச்சனா ஐ.ஏ.எஸ்' பட விமர்சனம் லேட்டாக வந்தாலும் நிறைவாக இருந்தது.
நெல்லிக்குப்பம்,
தமிழ்ப்பரிதி.

◆ வரலட்சுமி நோன்பு பற்றியும், அதை எப்படி நடத்துவது; இன்றைக்கு அது எப்படி நடத்தப்படுகிறது என்பது பற்றியும் தெளிவாக விளக்கியது கவர் ஸ்டோரி. நன்றிகள்.
நெய்வேலி - 3, உ. சந்திரமாலா.

◆ நோன்புக்கு இரண்டு நாட்கள் முன்பாகவே 'கல்கி' ரூபத்தில் எங்கள் வீட்டுக்குள் வரலக்ஷ்மி பிரவேசித்து எங்களைப் பூரிப்படையச் செய்து விட்டாள்.
தஞ்சாவூர் - 4, கே. காமாட்சி.

◆ ''ஜோடி நாயனம்'' சிறுகதை ஜோடி பாராட்டுக்குரியது. அண்ணனின் பாசத்தை என்னமாய் எழுதியிருக்கிறார் திலீபன்.
புவனகிரி, ச. அருட்செல்வன்.

◆ மகனின் மன உளைச்சலைத் தெள்ளத் தெளிவாக ''அம்மாவுக்கு எம்.ஓ'' என்ற கதையில் தெளிவுபடுத்திய விதம் அருமை. இன்றைய பொருளாதார நிலைமையில், நித்தம் நம்முன்னே தோன்றும் காட்சியினை அழகாகப் படம் பிடித்துக் காட்டிய சிறுகதை ஆசிரியருக்குப் பாராட்டுக்கள்.
திண்டுக்கல் - 1,
எஸ்.எம். பரீதா பானு.

◆ ''பிரணவமந்திரம்'' கதையில் ''மூணுவருஷம் என்ன முப்பது வருஷம் ஆனாலும் ஒரு மனுஷனைப் புரிஞ்சுக்கறது அவ்வளவு சுலபமில்லை'' என்ற வரி சூப்பர்ப்.
மேட்டுப்பாளையம்,
பி.ஏ. வதூத்.

இமாலய சாதனையும் எவரெஸ்ட் சிகரமும்

உலகின் மிக உயர்ந்த மலைச் சிகரம் எது என்று கேட்டால் உடனே சொல்லி விடுவீர்கள் "எவரெஸ்ட்" என்று. ஆனால் அதற்கு "எவரெஸ்ட்" என்ற பெயர் வரக் காரணம் என்ன?

இன்றைக்கு 201 ஆண்டுகளுக்கு முன்னால் லண்டனில் பிறந்தவர் எவரெஸ்ட். சிறுவனாயிருந்த போதே கணக்கில் புலி. பதினாலாவது வயதில் ராணுவக் கல்லூரியில் சேர்ந்தார். அவருடைய பேராசிரியர், "கணிதத்தில் இவன் தன்னிகரற்று விளங்குவான்" என்று கூறியதை மெய்ப்பித்துக் காட்டினார். சட்டபூர்வமான வயதை எட்டு முன்னரே எவரெஸ்ட்டுக்கு அரசுப் பணியில் நல்ல பதவி கிடைத்தது. பதினாறு வயது நிரம்பும் முன்னரே கிழக்கிந்திய கம்பெனியில் சேர்ந்து இந்தியா வந்தார். வங்க பீரங்கிப் படையில் லெஃப்டினன்ட் ஆக விளங்கினார்.


1811-ல் ஹாலந்து வசமிருந்த ஜாவா தீவுகளின் தலைநகர் படாவியாவை பிரெஞ்சுப் படைகள் கைப்பற்றியதன் விளைவாக எவரெஸ்ட்டின் வாழ்வில் ஒரு திருப்பம் ஏற்பட்டது என்றால் வியப்பாக இருக்கும். ஆனால் அது உண்மை! பிரான்ஸ் இப்படி நடந்து கொண்டது, தனது பல்வேறு காலனிகளுக்கும் ஓர் அபாய அறிவிப்பு என்று கருதிய பிரிட்டன், படாவியாவை மீட்க ஒரு படையை அனுப்பியது. அதில் லெஃப்டினன்ட் எவரெஸ்ட் அங்கம் வகித்தார். படாவியா மீட்கப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு படாவியா திரும்பவும் ஹாலந்திடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் இந்த ஐந்து ஆண்டுகளுக்குள் ஜாவா தீவுகளில் கிழக்கிந்திய கம்பெனி ஒரு சர்வே நடத்தியது. ராணுவ ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த சர்வேயை நடத்த எவரெஸ்ட் நியமிக்கப்பட்டார். இங்கேதான் எவரெஸ்ட்டின் விஞ்ஞான - கணித ஆற்றலெல்லாம் பயன்பட்டு, அவரை மேல் அதிகாரிகளின் மதிப்பில் உயர்த்தியது. மலைகளின் உயரங்கள், கானகங்களின் நீள அகலங்களையெல்லாம் அவர் துல்லியமாகக் கணக்கிட்டுச் சொன்னார்.

கங்கை நதியில் ஆங்காங்கே இருந்து வந்த தடங்கல்கள், தடைகள் காரணமாக அடிக்கடி வெள்ளப் பெருக்கு எடுத்து, சுற்று வட்டாரத்தைச் சேதப்படுத்தி வந்தது. இந்தத் தடைகளை நீக்க ஆலோசனை வழங்கும் பணி எவரெஸ்ட்டுக்கு வழங்கப்பட்டது. அப்போது கல்கத்தாவிலிருந்து வாரணாசி வரை எவரெஸ்ட், தந்தித் தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்தார்.

பிரிட்டிஷார் நம்மை ஆண்டதில் பல நன்மைகளும் ஏற்பட்டன. அவற்றுள் ஒன்று நாடு தழுவிய சர்வே. இதற்கு "தி கிரேட் டிரிக்னாமெட்ரிகல் ஸர்வே" என்று பெயர். சுருக்கமாக ஜி. டி. எஸ். என்பர். இதனைக் கவனித்து வந்தவர் அறுபது வயதான லாம்டன் என்பவர். அவரை அதிக காலம் பணியாற்றச் செய்ய முடியாது என்பதை உணர்ந்து, அவருக்கு அடுத்தபடியாகத் தகுதி பெற்ற ஒருவரைத் தேடிய போது சிக்கியவர் எவரெஸ்ட். லாம்டன் நடத்திக் கொண்டிருந்த பணியைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதற்காகவே அரசு அவரிடம் எவரெஸ்ட்டை அனுப்பி வைத்தது. எவரெஸ்ட் ஹைதராபாத்துக்கு வந்து சேர்ந்தார்.

அவருக்குத் தரப்பட்ட முதல் பணி, ஹைதராபாத்தின் கிழக்குப் பகுதியை சர்வே செய்வதாகும். அடர்ந்த காடுகளைக் கொண்ட மலைப் பிரதேசமாக விளங்கிய அது, மலேரியாவின் உறைவிடமாகவும் விளங்கியது. தொண்ணூறு அடி உயர தேக்கு மரங்களினூடே அடர்ந்த புதர்களுக்கு இடையில், புலிகளும் பாம்புகளும் வளைய வந்த வனத்தில் பணியாற்றிய போது, அவற்றை விட அதிகமாகக் கொசுவினால்தான் பாதிக்கப்பட்டனர். எவரெஸ்ட் தவிர, அவரது பணியாளர்களில் 150 பேர் மலேரியாவால் தாக்கப்பட்டனர். பதினைந்து பேர் மடிந்தனர்.

அடுத்த ஆண்டு மறுபடியும் அதே பணியை மேற்கொண்டு மீண்டும் மலேரியாவால் பீடிக்கப்பட்டார். ஓராண்டு விடுப்பில் ஆப்பிரிக்காவின் தென்கோடிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஓய்வு விடுப்



* இமாலய சாதனை புரிந்த எவரெஸ்ட்.

பில் இருந்த போதும் எவரெஸ்ட் சும்மா இராமல், அங்கு ஏற்கெனவே நடந்திருந்த சில சர்வே பணிகளை ஆய்வு செய்து, அவற்றில் இருந்த தவறுகளைச் சுட்டிக் காட்டி நேராக்கினார்!

லாம்டன் காலமான பிறகு ஜி. டி. எஸ். பொறுப்பு முழுவதும் எவரெஸ்ட் தோள்களில் சுமந்தது. சுமார் இருபது ஆண்டுகள் இந்தப் பணியில் ஈடுபட்டார் எவரெஸ்ட். கன்னியாகுமரி முதல் மத்திய இந்தியாவில் பேரார் பள்ளத்தாக்கு வரை ஏற்கெனவே சர்வே நடந்திருந்தது. அதைத் தொடர்ந்து இமய மலை வரை நடத்திச் சென்றார் எவரெஸ்ட். இரவு நேரத்திலும் சர்வே செய்ய பல புதிய உத்திகளை வகுத்து ,வெற்றி கண்டார்.

1823-ல் மறுபடி மலேரியாவால். தாக்கப்பட்டார் எவரெஸ்ட். இம்முறை அந் நோய் அவருக்குப் பக்கவாதத்தைக் கூட உருவாக்கும் வகையில் கடுமையாகத் தாக்கியது. பல்லக்குப் பயணத்தைத் தாங்கக் கூடிய அளவில் உடல் குணமானதும் மறுபடி சர்வே பணியாற்றப் புறப்பட்டு விட்டார்.

இந்தியா முழுவதையும் சர்வே செய்யும் பணி தமக்கே உரியது என்று அவர் உறுதியாக நம்பினார். அதனால் அவரை டோலி நாற்காலியிலிருந்து சிலர் தூக்கிக் கொண்டு போய் சர்வே உபகரணம் முன் தாங்கிப் பிடித்துக் கொள்வார்கள். உபகரணத்தின் திருகுகளைத் திருக உதவியாக ஒருவர் அவர் வலக் கரத்தைத் தாங்கிக் கொள்வார். இவ்வளவு மோசமான உடல் நிலையிலும் உபகரணங்களின் குறியீடுகளைச் சரியாகப் படித்துத் தம் பணியைச் செவ்வனே செய்து வந்தார் எவரெஸ்ட்.

1824-ல் காளியன்பூர் என்ற இடத்தில் மறுபடி மலேரியா தாக்க, அவர் தம் பணியை நிறுத்திக் கொண்டு நீண்டகால நோய் விடுப்பில் இங்கிலாந்து சென்றார். தமது உடல் நிலையை அபிவிருத்தி செய்து கொள்ள அவருக்கு ஐந்து ஆண்டுகள் ஆயின. ஆனால் அப்போதும் அவர் சும்மா இருக்கவில்லை. இந்தியாவின் சர்வேக்கு மிக நவீனக் கருவிகளைப் போராடிப் பெறுவதில் காலத்தைச் செலவிட்டார். இதற்காக ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று வந்தார். கிழக்கிந்திய கம்பெனி அவரது ஆர்வத்துக்குத் துணை நின்று பண உதவி செய்தது.

இங்கிலாந்தில் இருக்கும் போது அவருக்குப் புதிய பட்டங்களும் பதவிகளும் வழங்கப்பட்டன. சர்வேயர் ஜெனரல் என்ற உயர்ந்த உத்யோகம் பெற்றார். 1830-ல் இந்தியா திரும்பியவர், சர்வே பணியைத் தொடர்ந்து நடத்தி இமயமலைத் தொடரையும் கணிப்பில் கொணர்ந்தார். 1835-ல் மறுபடி நோய் தாக்கியது. ஆனாலும் விடா முயற்சியுடன் சர்வே பணியை 1841-ல் முடித்தார்.



✦ எவரெஸ்டை நோக்கிப் பயணம் !

டேராடூன் - முசௌரி பகுதியில் கடைசியாக வாழ்ந்த அவர், 1843-ல் உத்யோகத்திலிருந்து ஓய்வு பெற்று இங்கிலாந்து திரும்பினார். எவரெஸ்ட் அன்று நாடு தழுவிய அளவில் நடத்திய சர்வேதான் இன்றைக்கும் நமக்குப் பயன் பட்டு வருகிறது.

ஓய்வு பெற்ற பிறகே திருமணம் செய்து கொண்ட எவரெஸ்ட், 23 ஆண்டுகள் வாழ்ந்து, ஆறு குழந்தைகளுக்குத் தந்தையானார். ''ஸர்'' பட்டம் பெற்றார். இங்கிலாந்து மன்னர் வழங்கும் மிக உயர்ந்த பட்டம் இது.

ஒரு முக்கியமான விஷயம் என்னவெனில் எவரெஸ்ட் சிகரத்தை அளந்தவர் எவரெஸ்ட் அல்ல! 1930 வரை கூட அதன் உயரம் பற்றிப் பலவித சர்ச்சைகள் இருந்தன. எவரெஸ்ட் சிகரத்தின் உயரத்தை நிர்ணயித்தவர் ஆண்டுரு வாக் என்பவர். அதற்கு ஓர் உள்நாட்டுப் பெயர் இல்லாதிருப்பதைக் கண்ட அவர், தமக்கு முன்னர் தமது பதவியில் அமர்ந்திருந்து அபார சாதனைகள் புரிந்த எவரெஸ்ட்டின் பெயரை அதற்குச் சூட்டுவது என்று தீர்மானித்து, அதற்கு அரசு அனுமதியைக் கோரிப் பெற்றார்.

இமாலய சாதனை புரிந்த ஜார்ஜ் எவரெஸ்ட்டின் பெயரை அந்த உன்னதச் சிகரம் பெற்றுத் திகழ்வது மிகப் பொருத்தமானதே.

- ஜிம் ஸ்மித்

நன்றி : லண்டன் பிரஸ் ஸர்விஸ்



◆ ரொட்டி, பிஸ்கட் செய்யும் கலை...

இங்கே படித்தால் வேலை நிச்சயம்

எம். ஏ., எம். காம்., எம். எஸ்ஸி., என்று படித்து முடித்து விட்டுப் பல இளைஞர்கள் வேலை இல்லாமல், அலையும் இந்த நாட்டில், ஒரு கோர்ஸ் படித்து முடியும் காலத்திற்குள்ளேயே, வேலை வாய்ப்புத் தேடி வருகிறது என்றால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். அது உண்மை என்று அறிய, வாருங்கள் திருச்சிக்கு.


திருச்சி - தஞ்சை நெடுஞ்சாலையில் உள்ள துவாக்குடியில், பிராந்திய பொறியியல் கல்லூரியை அடுத்த வளாகத்திற்கு வெளியே 'ஃபுட் கிராப்ட் இன்ஸ்டிடியூட்' என்ற போர்டு நம்மை வரவேற்கிறது. தமிழில், 'உணவுக் கலைப் பயிற்சி நிறுவனம்'. தமிழ் நாட்டில் சென்னையில் உள்ள ஹோட்டல் பயிற்சிக் கல்லூரிக்கு அடுத்த படியாக, உணவுக் கலையைச் சொல்லித் தரும் ஒரே பயிற்சி நிறுவனம் இதுதான்.

''81-ம் ஆண்டு மத்திய அரசின் சுற்றுலாத் துறை, நம் நாட்டில் வெளிநாட்டுப் பயணிகளின் வருகையை அதிகரிக்க என்னென்ன வசதிகள் செய்து தர வேண்டும் என்று தீவிரமாக ஆலோசித்தது. சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவை சுத்தமான நல்ல தங்கும் வசதி; அங்கு தயாரிக்கப்படும் நல்ல சுகாதாரமான உணவு. இந்தத் தேவைகளுடன் ஹோட்டல்களில் இன்முகத்துடன் வரவேற்றுப் பணி செய்ய ஆட்கள். ஆனால் உலகிலுள்ள சகலவிதமான உணவுகளையும் சமைக்கத் தெரிந்த கலைஞர்களை எப்படித் தயார் செய்வது? இப்படிப் பல கோணங்களிலும் யோசித்து, நாடு முழுவதும் 24 உணவுக் கலை பயிற்சி நிறுவனங்களை ஆரம்பிக்க முடிவு செய்தது மத்திய அரசின் சுற்றுலாத் துறை. அந்த அடிப்படையில் துவாக்குடியில் பத்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது

இந்தப் பயிற்சி நிறுவனம்'' என்று விவரித்தார் நிறுவனத்தின் முதல்வர் பொன்னிளங்கோ.

முதல் ஐந்து வருட காலத்திற்கு மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் செயல்பட்டு வந்தது நிறுவனம். இடம், கட்டட வசதிகளைச் செய்து தந்தது மாநில அரசு. ஐந்து வருடங்களுக்குப் பிறகு, மாநில அரசின் பொறுப்பில் வந்தது. இப்போது இந்த நிறுவனத்தை மாநில சுற்றுலாத்துறைச் செயலாளர் தலைமையில் இயக்குனர்கள் குழு ஒன்று நிர்வகித்து வருகிறது. முதல்வர்தான் நிர்வாக போர்டின் செயலாளர்.

இந்தப் பயிற்சி நிறுவனத்தில், வரவேற்புக் கூடத்தை நிர்வகித்தல்; கணக்குப் புத்தகங்கள் நிர்வகித்தல், சமையல் கலை, ரொட்டி - பிஸ்கட் - ஐஸ்க்ரீம் செய்யப் பயிற்சி, உணவுக் கூடத்தில் பரிமாறும் கலை, ஹோட்டல் அறைகளைப் பராமரிக்கும் பயிற்சி என்று ஆறு வகை கோர்ஸ்கள் உள்ளன. சமையல் கலையில், மேற்கத்திய, சைனீஸ், வட, தென் இந்தியச் சமையல் பயிற்சிகள் உண்டு. எல்லாமே ஒரு வருடம் தான். இந்தப் பயிற்சிகளில் சேர அடிப்படைத் தகுதி எஸ். எஸ். எல். ஸி. அல்லது பிளஸ் டூ படித்திருந்தால் போதும். ஒரு வருடத்திற்கு 1,500 ரூபாய் தான் செலவாகும். விடுதியில் தங்கிப் படித்தால் கூடுதலாக 2,000 ரூபாய் செலவாகும்.



✱ கல்லூரி முதல்வர்

''முன்பெல்லாம் ஹோட்டல் தொழில் என்றால் கேவலமாக எண்ணும் நிலை இருந்தது. இப்போது, மதிப்புமிக்க, கௌரவமான தொழிலாகக் கருதப்படும் நிலை வந்திருக்கிறது. ஆரம்பத்தில் எங்கள் கோர்ஸ் களில் சேர அவ்வளவு போட்டி இல்லாவிட்டாலும், சமீப காலங்களில் ஏராளமான பேர் இந்த நிறுவனத்தில் சேர விண்ணப்பிக்கிறார்கள். கிராமப்புறங்களில் இருந்தும் நிறையப் பேர் வருகிறார்கள். இந்த வருடம் மொத்த கோர்ஸ்களிலும் உள்ள 130 இடங்களுக்கு, 1500க்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்திருந்தார்கள். அடிப்படைக் கல்வித் தகுதியில் மார்க் வாங்கியிருப்பதை வைத்துத்தான் செலக்ஷன் செய்யப் படுகிறது'' என்கிறார் பொன்னிளங்கோ.

திருச்சி பக்கத்திலுள்ள முக்கொம்பைச் சேர்ந்த இளைஞர் ஆனந்த முருகன் ரொட்டி, பிஸ்கட், கலையில் பயிற்சி பெறுகிறார். முற்றிலும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவரான இவர், படித்து முடித்ததும், ஒரு பேக்கரி வைக்கலாம் என்றிருக்கிறாராம். ஆனால் சமையல் கலை பயிலும் புதுக்கோட்டையைச் சேர்ந்த பொற்கொடி, மலேஷியாவில் அவரது தாத்தா நடத்திக் கொண்டிருக்கும் ஹோட்டலில் பணியாற்றச் செல்லப் போகிறாராம். பாண்டிச்சேரியிலிருந்து வந்திருக்கும் இன்ஜினியரின் மகளான கேதரின் ஜெர்ஸி, ரொட்டி, பிஸ்கட் கலையைக் கற்றுக் கொண்டு ஹோட்டலில் பணியாற்றத் தயாராகிக் கொண்டிருக்கிறார்.

''இந்த கோர்ஸ் படித்து முடித்து விட் டால் கண்டிப்பாக வேலை நிச்சயம். உலகில் எங்கு வேண்டுமானாலும் போய்ப் பிழைத்துக் கொள்ளலாம்'' என்கிறார் சாத்தூரைச் சேர்ந்த நல்லசாமி. இவர், உணவுக் கூடத்தில் பரிமாறும் கலை யில் பயிற்சி பெறுகிறார்.

ஹோட்டல்களில் பணியாற்றுபவர்களுக்கு நல்ல ஆங்கிலமும், இந்தியும் தெரிந்திருந்தால், பிரச்னை இல்லாமல் இருக்கும் என்ற அடிப்படையில் இங்கு எல்லா கோர்ஸ் மாணவ, மாணவிகளுக்கும் இந்த மொழிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது தவிர, தமிழ்நாடு சுற்றுலாத் துறை ஊழியர்களுக்கும் இங்கே பயிற்சி அளிக்கப்படுகிறது.

''வேலை நிச்சயமாகக் கிடைக்கும் என்கிற ஓர் உத்தரவாதம் இருப்பதால் தான் இந்த கோர்ஸ்களுக்குக் கிராக்கி ஏறிக் கொண்டே போகிறது. பத்து மாத கோர்ஸ் முடிவதற்குள்ளேயே, பெரிய பெரிய ஹோட்டல்களில் இருந்து, இங்கே வந்து 'கேம்பஸ் இண்டர்வ்யூ' நடத்துகிறார்கள். அதில் வெற்றி பெறுகிறவர்கள் பரீட்சை கூட எழுதாமல், வேலைக்குச் சென்று விடுகிறார்கள்'' என்கிறார் முதல்வர் பொன்னிளங்கோ.

– ப்ரியன்.

வாசகர் யோசனை :
சா. கிருஷ்ணசாமி, ஸ்ரீமுஷ்ணம்.



.அ.ங்.கி.ள். .ப.ன்.

நம்ப ஊரில் மூணரை அடி அப்பு என்றால், கேரள தேசத்தவரின் மற்றொரு புதிய முயற்சி அங்கிள் பன். பட்ஸ்பென்ஸரை மேலும் நாலு அங்குலம் உயரமாக்கி, இருபது பவுண்ட் கூடுதல் காற்றடித்தால் எப்படி இருப்பாரோ அந்த அளவு பிரம்மாண்டமாய் இந்த அங்கிள் கேரக்டர்.

அந்தப் பாத்திரத்துக்குக் கதையில் என்ன வேலை?

இருக்கிறது. அதை விவரிப்பதற்கு முன் பின்வரும் வரிகள் அவசியமாகின்றன : கொடைக்கானலில் வசிக்கும் ஒரு கிறிஸ்துவக் குடும்பம். அதில் அண்ணன் ஜேம்ஸ் குட்டியாக நெடுமுடி வேணு, அண்ணி ஸாராவாக சங்கீதா, மற்றும் குழந்தைகள். வெளியில் உற்சாகம், உள்ளுக்குள் மெல்லிய சோகம் என வாழ்க்கை.

திடீரென ஸாராவுடைய அண்ணனின் விபத்துச் செய்தி - அமெரிக்கப் பயணம். குழந்தைகளைப் பராமரிக்க வந்து சேர்கிறார் நெ. வேணுவின் தம்பியான சார்லி சாக்கோ அலையஸ் அங்கிள் பன். ஆசாமி மொடாக் குடியர். கூத்தும் கும்மாளமுமாக வீடு அல்லோல கல்லோலப் படுகிறது. குழந்தைகளை, வேலைக்கார உதவிப் பெண்ணை, அக்கம்பக்கத்தினரை என்று எல்லோரையும் இவர் கவர்ந்தாலும், அண்ணியின் மூத்த மகள் ஆஷா மட்டும், அம்மா போலவே வெறுப்புக் காட்டுகிறாள். காரணம்? கதையில் இருக்கும் சின்ன சஸ்பென்ஸ் மற்றும் மூன்றாவது பாராவின் கடைசி ஐந்து வார்த்தைகள். பெற்றோர் இல்லாத சமயத்தில், அயோக்கியக் காதலனுடன் ஆஷாவின் அத்துமீறலைத் தடுக்க அங்கிள் பன் முயன்று, பல்வேறு அவமானங்களைத் தாங்கி... கடைசியில் நல்லவராய்த் தன்னை உணர்த்தி, சுபமோ சுபம்.

அங்கிள் பன் ஒரு ஆச்சரிய பன். அத்தனை மகாவான இவரால் எப்படி சுருள் சுருளாய்க் குட்டிக்கரணம் போட முடிகிறது? எம்பிக் குதிக்க முடிகிறது? அபாயகரமாய்ச் சுழன்று ராக் அண்ட் ரோல் ஆட முடிகிறது? கோழி வறுவல் தட்டுடன், உருளும் கோலிக் குண்டு மேல், கீழே விழாமல் நடக்க முடிகிறது? திடுக் திடுக் என்று சண்டை போட முடிகிறது? தொந்தி குலுங்க வெற்றிச் சிரிப்புச் சிரித்து, மிமிக்ரி செய்து, இன்னும், இன்னும் என்று.... அ! மோகன்லாலின்டே வல்லிய நடிப்பு சர்கஸ்ஸானும்!

சாஸ்திரத்துக்குச் சிற்சில குறைகள் : தன் தந்தையுடன் மோகன்லாலின் அநாவசிய உரையாடல்; தியேட்டரில் ஆஷா கோஷ்டியினரின் மிக நெருக்கங்கள்; இயல்பாகப் போகும் கதையில் தன் முன் கதையைப் பாடலில் சொல்வது என கச்சா ஃபிலிம் வீணடிக்கப்பட்டிருக்கிறது. தொட்டுக் கொள்ள கதாநாயகி ஊறுகாய் தேவைதான். ஆனால் அதை எடுத்துப் பரிமாற குஷ்பு வெறும் தங்க ஸ்பூனைப் 'பயன்படுத்தி இருப்பது அநியாயம்.

நிமிஷக் கணக்கில்தான் தென்படுகிறார் அந்தத் தாரகு ஆசாமி. ஆயினும் அவரின் அந்த உத்தியோகத் தில்லுமுல்லுகள் மறக்க முடியாத புன்னகை அடுக்குகள்.

டைரக்டர் பத்ரனின் இந்த அங்கிளிடம் 'பன்' மட்டுமில்லை, குழந்தைகளைக் கவரும் பட்டரும், ஜாமும் கூடவே இருக்கின்றன!

– சுந்தர்ஜி.

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/- விமானத் தபால்: ரூ. 350/-.

புதிய
TV தொடர்!

சாணக்யா

அரசியலின் முதல் சூப்பர் ஸ்டார்

பலம் பொருந்தியவர்களின் எதிர்ப்பை தூள்தூளாக்கி
சபதம் நிறைவேற்றிய மகத்தான ராஜதந்திரியின் கதை!

ஞாயிறு தோறும்

செப்டம்பர் 8 முதல்
52 வாரம் காணலாம்

காலை 9 மணிக்கு

இதுவரை இந்தியா கண்டிராத வகையில்
ஆறு கோடி செலவில் உருவான பிரமாண்ட தயாரிப்பு!

இன்றைய அரசியலுக்கும் பொருந்தும் அனல்பறக்கும் வசனங்கள்
இந்தி தெரியாது என்பதால் பார்க்கத் தவற விடாதீர்கள்!

தமிழில் முழுவசனம் தருகிறது உங்கள் அபிமான நாளிதழ்

தினமலர்

ராமாயணம் மகாபாரதம் திப்பு வரிசையில் மற்றுமொரு காவியம்
சனிதோறும் தினமலர் மட்டுமே தமிழாக்கம் வெளியிடுகிறது

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka